

# செங்காந்தள் - கோவில் கலைகள்

முனைவர் த. மகேஸ்வரி & முனைவர் செ. சாந்தி

புத்தகக்குறிப்பு

9 789391 115715



# செங்காந்தள் - கோவில் கலைகள்

# Title Verso

**TITLE OF THE BOOK: Chenkaantal - Temple Studies**

**புத்தகத்தலைப்பு : செங்காந்தள் - கோவில் கலைகள்**

**EDITORS : Dr. D. Maheswari & Dr. S. Santhi**

**தொகுப்பாசிரியர் : முனைவர் த. மகேஸ்வரி & முனைவர் செ. சாந்தி**

**FIRST EDITION : 2022**

**முதல் பதிப்பு : 2022**

**PAGES/பக்கங்கள்: 150**

**PRICE/விலை : 150**

**ISBN NUMBER : 978-93-91115-71-5**

**PUBLISHER** : Pandian Educational Trust,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001,
Tamil Nadu.

**PRINTER** : Maheswari Publishers,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001,
Tamil Nadu.

**பதிப்புரிமை/Copyright © 2022 – முனைவர் த. மகேஸ்வரி /Dr. D. Maheswari**

அனைத்து பதிப்புரிமையும் பெறப்பட்டுள்ளது.

இப்புத்தகத்தின் எப்பகுதியும் ஆசிரியர்களின் அனுமதியின்றி அச்சிடப்படக் கூடாது.

All rights reserved. No part of this book should be transmitted to any type of printed material without proper permission from the publisher.

# செங்காந்தள்

குறிஞ்சி நில தெய்வமான முருகனின் அடையாளப்பூ செங்காந்தள்பூ. போர் கடவுளான முருகன் பிறந்த கார்த்திகை மாதத்தில் இதன் பூ அகல்விளக்கு போல பூப்பதால் கார்த்திகைப்பூ என்று அழைக்கப்படுகிறது. *கரும்பு மூசாசச் சுடர்பூங் காந்தள் பெருந்தண் கண்ணி மிலைந்த சென்யன்* என்ற திருமுருகாற்றுப்படை பாடல் வண்டு இனங்கள் மொய்க்காத நல்ல மணமுடைய, நெருப்புப் போன்ற செந்நிறம் மற்றும் ஒளியுள்ள செங்காந்தள் பூவாலாகிய குளிர்ச்சியுடைய மாலையைச் சூடியவன் *முருகன்* என்று வர்ணிக்கிறது. தமிழர்களின் வீரம் மற்றும் கலாச்சாரப் பெருமையை அடையாளப்படுத்தும் செங்காந்தள் மலரின் பெயரையே இவ்ஆய்வுநூல் வரிசைக்குச் சூட்டுவதழில் அகமகிழ்வடைகிறேன்.

செங்காந்தளின் அழகிய முகை தன் இதழ் விரியும் வரை வண்டுகளைக் காத்திருக்க வைக்காமல் வண்டு வந்தவுடன் அதனை எதிர்நோக்கி தம் இதழை விரித்து தேனைத் தந்து வண்டினை மகிழ்ச்சிப்படுத்தும். செங்காந்தள் தன்னுள் உள்ள தேனை அடக்கி வைத்திருப்பது போன்று கல்தோன்றி மண்தோன்றா காலந்தொட்டே தமிழ்மொழி அரிய இனிய செய்திகளைத் தன்னுள் அடக்கி வைத்துள்ளது.

தேனைப் பருக வண்டுகள் அணிவகுப்பது போல் தமிழ்ச் சமூகம் தமிழ்த்தேன் பருக தமிழ்ப்பேராசிரியர்கள், ஆர்வலர்கள் தங்கள் எழுத்தாற்றலை அர்ப்பணிக்க ஆயத்தமாயுள்ளனர். தமிழ் ஆர்வலர்களுக்காகத் துளிர்விடும் இந்நூல் பயணத்திற்குச் செங்காந்தள் என்று பெயரிட்டது சாலப் பொருந்தும்.

முருகன் என்றால் அழகன். அவன் கார்த்திகை மலரைச்சூடி பேரழகுடன் திகழ்வது போல் தமிழின் பல்வகை இலக்கிய செய்திகளைப் புதிய ஆய்வு நோக்கத்துடன் தமிழ்மொழியில் மாலையாகத் தொடுத்து வெளிக்கொணர்வதில் இச்செங்காந்தள் பயணம் இனிதே மலர்கிறது.

# மதிப்புரை



**முனைவர் சு. மணிமாறன்**
தலைவர் மற்றும் இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நா.ம.ச.ச.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, மதுரை.

**சப்தமாதர் சிற்பங்களின் படிமக்கலைக் கூறுகள்** தலைப்பில் அமைந்த ஆய்வுக்கட்டுரை பிராம்மி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி மற்றும் சாமுண்டீஸ்வரி போன்ற சப்த கன்னியர்களின் வரலாற்றை எடுத்தியம்புகிறது. தமிழகத்தில் சப்த மாதர்களின் வழிபாடு என்பது ஏழு தெய்வங்களின் வழிபாடாக முதலில் முற்காலப் பாண்டிய மன்னர்களால் போற்றப்பட்டு, பின்னர் பிற்காலப் பல்லவர்களாலும் சோழர்களாலும் வளர்க்கப்பட்டு இன்றளவும் வழிபாட்டில் சிறப்பிடம் பெற்று திகழ்கிறது என்பதை எடுத்துரைக்கிறது.

**பிள்ளைத்தமிழ் கூறும் ஆன்மீகமும் அறிவியலும்** ஆய்வுக்கட்டுரை சிற்றிலக்கியங்களுள் ஒன்றான பிள்ளைத்தமிழ் ஆன்மீகத்திலும் அறிவியலிலும் சிறந்து விளங்கியிருக்கிறது என்பதை ஆராய்ந்திருக்கிறது.

**முத்தாலம்மன் தெய்வ வழிபாடும் தொன்மக் கதைகளும்** எனும் நாட்டுப்புறம் சார்ந்த பக்தி ஆய்வுக்கட்டுரை திருமங்கலம் வட்டத்தில் முத்தாலம்மன் என்கிற பெண் தெய்வம் பற்றிய பல அரிய செய்திகளையும் ஆராய்ந்து முத்தாலம்மன், கொலையில் தோன்றிய தெய்வம் என்றும் நாட்டுப்புறப்புறத் தெய்வங்களை நுணுகி ஆராய்ந்தால் பல்வேறு புதிய உண்மைகள் கிடைக்கும் என்ற கருத்தையும் முன் வைக்கிறது. இது இளம் ஆய்வாளர்களுக்கு ஓர் நல்கருதுகோளாக அமையும்.

**வெட்டுவான் கோயில்** ஆய்வுக்கட்டுரை தமிழனின் அறிவுப்புலத்தினையும், செல்வம் நீக்கமற நிறைந்திருந்ததையும், ஆட்சி அதிகாரத்தையும், தொழில் திறமையையும், கலைநுட்பம் செழித்திருந்ததையும் காட்சிப்படுத்துகின்றது.

**ஸ்ரீ அம்மாபட்டி கருப்பணசாமி கோவில்** ஆய்வுக்கட்டுரை இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் அமைந்துள்ள திண்டுக்கல் மாவட்டத்தில் பழனி வட்டத்தில் உள்ள அம்மாபட்டி கிராம கருப்பண்ணசாமி பாலாறு அணை ஏரிக்கரையில் அமர்ந்து குளங்கள், ஏரிகள், ஆறுகள், கிணறுகள் போன்ற நீர்நிலைகளையும் மக்களையும் பாதுகாக்கும் மிகவும் புகழ்பெற்ற காவல் தெய்வமாகக் காட்சியளிக்கிறார் என்ற செய்தியையும், ஆத்திமரத்தானின் பேய் விரட்டுதல் செய்தியையும் சப்தகன்னிமார், விநாயகர், நாகப்புற்று போன்ற தெய்வங்கள் பற்றியும் பல அரிய செய்திகளை எடுத்துரைத்தது வியக்கத்தக்ககதாக உள்ளது.

செங்காந்தள் புத்தகப்பகுதி பயணம் தொடர்ந்து பல அரிய ஆய்வுக்கட்டுரைகளை ஆய்வுலகிற்கு வழங்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

**நன்றி.**

# உள்ளடக்கம்


| வ. எண் | தலைப்பு | ப. எண் |
|---|---|---|
| 1. | சப்தமாதர் சிற்பங்களின் படிமக்கலைக் கூறுகள்<br>**The Elements of Iconography in Saptamadhar Sculptures**<br>முனைவர் செ.சாந்தி / **Dr. S. Santhi** | **1-27** |
| 2. | பிள்ளைத்தமிழ் கூறும் ஆன்மீகமும் அறிவியலும்<br>**Spirituality and Science in Pillaithamil**<br>திருமதி ந. தமிழரசி / **Mrs. N. Tamilarasi** | **28-55** |
| 3. | முத்தாலம்மன் தெய்வ வழிபாடும் தொன்மக் கதைகளும்<br>**Myth and Worship of the Deity Muthalamman**<br>முனைவர் கி.நாகேந்திரன் / **Dr. K.Nagendran** | **56-79** |
| 4. | வெட்டுவான் கோயில்<br>**Vettuvan Temple**<br>முனைவர் சு.மகேஷ் பாண்டி / **Dr. S. Mahesh Pandi** | **80-101** |
| 5. | ஸ்ரீ அம்மாபட்டி கருப்பணசாமி கோவில்<br>**Sri Ammapatti Karuppannasamy Kovil**<br>முனைவர் த.மகேஸ்வரி / **Dr. D.Maheswari** | **102-138** |

# The Elements of Iconography in Saptamadhar Sculptures

**Dr. S. Santhi,** Guest Lecturer, Department of History,
Alagappa University, Karaikudi-03, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-6965-2478**
**DOI: 10.5281/zenodo.7387181**

## Abstract

*In Hindu times the Saptakanniyar were Brahmi, Maheshwari, Gaumari, Vaishnavi, Varagi, Indrani and Chamundeeswari. The Sivasakti sages who understand the five industries that run the world are called Sapta Kanniyar, Sapta Mathas and Sapta Matrikas. The worship of Saptamadars in Tamil Nadu appeared during the Pallava period. The Kanchi Kailasanathar Temple was built during the later Pallava period. Set outside the Pandiyar Cave. During the Chola period a separate place was given and festivals and pujas were conducted. The early Chola Saptamadars sculpture is located in Melappaluvoor. It is noteworthy that the later Cholas placed Saptamadars in the Parivaralayas.*

**Keywords:** Sapta Kanniyar, Sapta Matar, Sapta Matrikas, Brahmi, Maheshwari, Kaumari, Vaishnavi, Varagi, Indrani, Chamundeeswari

## References

[1] Acharya Prasannakumar. *A. Dictionary of Hindu Architecture*.Vol.I.

[2] Acharya Prasannakumar. *The Hindu Architecture India and Abroad.* J.H. Publishing House, Bhopal, 1979.
[3] Acharya, Prasannakumar. *An Encyclopaedia of Hindu Architecture Vol. VII.* Oriental Reprint, New Delhi, 1979.
[4] Agarwala Prithivikumar. *Aesthetic Principles of Indian Art*. Prethivi Prakasham, Varanasi, 1980.
[5] Balasubramanyam.S.R. *Later Chola Temples.* Mudgala Trust, Faridabad, 1979.
[6] Balasubramanyam. S.R. *Middle Chola Temples*. Oriental Press, Amsterdam, 1977.
[7] Balasubramanyam.S.R. *Early Chola Temples.* Oriental Longman, Chennai, 1971.
[8] Banerjee, J.N. *Development of Hindu Iconography*. Calcutta, 1956.
[9] Barrett Douglas. *Early Chola Architecture and Sculpture.* Faber & Raber Ltd., London, 1974.
[10] Gopinatha Rao.T.A. *Elements of Hindu Iconography Vol. I & II.* Motilal Banarsidas, Madras, 1914.
[11] Nilakanda Sastri, K.A. *A History of South India.* Oxford University, Chennai, 1971.
[12] Nilakanda Sastri, K.A. *The Cholas.* University of Madras, Chennai, 1975.
[13] Ramachandra Rao. S.R. *Pratimakosha.* P.230.1973
[14] Srinivasan. K.R. *Cave temples of the Pallavas*. Archaeological Survey of India, New Delhi, 1964.
[15] Srinivasan, K.R. *Dharmaraja Ratha and Its Sculptures.* Abhinav Publications, New Delhi, 1973.
[16] Saletore, R.N. *Encyclopaedia of Indian Culture*. Vol.II, P.1263. 1984.

 Isbn Number: 978-93-91115-71-5

# சப்தமாதர் சிற்பங்களின் படிமக்கலைக்கூறுகள்

**முனைவர் செ.சாந்தி**, கௌரவ விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-03, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0001-6965-2478**
**DOI: 10.5281/zenodo.7387181**

## ஆய்வுச்சாரம்

*இந்து சமயத்தில் சப்தகன்னியர் எனப்படுவோர் பிராம்மி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டீஸ்வரி ஆவர். உலகை இயக்கும் ஐந்தொழில்கள் புரிந்து வரும் சிவசக்தி எடுத்த திருமேனிகளே, சப்த கன்னியர் என்றும் சப்த மாதாக்கள் என்றும் சப்த மாத்திரிகைக்கள் என்றும் அழைக்கப் படுகின்றனர். தமிழகத்தில் சப்தமாதர்கள் வழிபாடு பல்லவர் காலத்தில் தோன்றியது. பிற்கால பல்லவர் காலத்தில் காஞ்சி கைலாசநாதர் கோயிலில் அமைக்கப்பட்டது. பாண்டியர் குடவரைக்கு வெளியிலும் அமைக்கப்பட்டது. சோழர் காலத்தில் தனி இடம் வழங்கப்பட்டு விழாக்கள் பூஜைகள் நடத்தப்பட்டது. முற்கால சோழர்கால சப்தமாதர்கள் சிற்பம் மேலப்பழுவூரில் அமைந்துள்ளது. பிற்கால சோழர்கள்*

*பரிவாராலயங்களில் சப்தமாதர்களை இடம் பெறச் செய்துள்ளனர் என்பதுக் குறிப்பிடத்தக்கது.*

**முக்கிய குறிப்புகள்:** சப்த கன்னியர், சப்த மாதாக்கள், சப்த மாத்திரிகைக்கள், பிரம்மி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டீஸ்வரி.

**முன்னுரை**

வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட காலத்திலிருந்து சிற்பக்கலை வளர்ந்து வருகின்றது. மனித நாகரிகத்தையும் அதன் வளர்ச்சிக் கூறுகளையும் எடுத்துக்காட்டும் சான்றுகளில் சிற்பக் கலை இன்றியமையாத ஒன்றாக உள்ளது. நாடுகளின் தொன்மை வரலாற்றை அம்மக்கள் வளர்த்த சிற்பக்கலை வழியாகவே பெரிதும் அறிய முடிகின்றது. ஒருவர் தன் கண்களால் கண்ட உருவங்கள் அல்லது கற்பனை உருவங்களை வடிவமைத்துச் செய்வது சிற்பம் எனப்படும். கல், உலோகம், செங்கல், மரம், சுதை, தந்தம், வண்ணம், கண்டசருக்கரை, மெழுகு என்பன சிற்பம் வடிக்க ஏற்றவை என பிங்கல நிகண்டு என்ற இலக்கியம் கூறுகின்றது.

கல்லில், கருங்கல், மாக்கல், பளிங்குக் கல், சலவைக் கல் ஆகியவையும் உலோகங்களில் பொன், வெள்ளி, வெண்கலம், செம்பும் ஆகியனவும் சிற்பம்


Isbn Number: 978-93-91115-71-5

செய்ய ஏற்றனவாகக் கருதப்பட்டன. வடிவம் முழுவதையும் முன்புறம் பின்புறம் இரண்டையும் காட்டும் சிற்பங்களை முழு வடிவச் சிற்பங்கள் என்றும் வடிவத்தின் ஒருபுறம் மட்டும் காட்டும் சிற்பங்களை புடைப்புச் சிற்பங்கள் என்றும் வகைப்படுத்துவர். பண்டைய பண்பாட்டு கலாச்சாரங்களின் எச்சமாக மண்பாண்டங்களைத் தவிர்த்த ஏனைய படைப்புகள் யாவும் அழிவுற்றன. மனிதனின் படைப்புகளில் காலத்தால் அழியாமல் வாழக்கூடிய கலைப்படைப்பு சிற்பமாகும். மற்றையவை விரைவில் அழியக்கூடிய பொருட்கள் கொண்டு செய்யப்பட்டவையாகும். பழங்காலத்தில் செய்யப்பட்ட மரச்சிற்பங்கள் இன்று கிடைக்கப்பெறவில்லை. அவை முற்றிலும் அழிந்து விட்டன. அக்காலச் சிற்பங்களில் பிரகாசமான வண்ணம் தீட்டப்பட்டன. இவை தற்போது தேய்வுற்றும் வண்ணம் மங்கியும் காணப்படுகின்றன.

பல்வேறு கலாச்சாரங்களில் சிற்பங்கள் பெரும்பாலும் மத வழிபாடுகளை மையமாகக் கொண்டு அதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டன. சிற்பங்கள் செதுக்குவதையும் சிற்பங்களில் வெளிப்படும் தமிழரின் அழகியலையும் மரபையும் நுட்பங்களையும் தமிழர் சிற்பக்கலை குறிக்கும். இக்கலை பண்டைக்காலம் முதற்கொண்டே தமிழரால் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது.


Isbn Number: 978-93-91115-71-5

சங்க காலத்தில் மண், மரம், தந்தம், கல் ஆகியவற்றில் சிற்பங்கள் செதுக்கப்பட்டன. மண்ணில் சிற்பங்கள் உருவாக்கியவர்கள் மண்ணீட்டாளர்கள் என குறிப்பிடப்பெற்றனர் என்பதை சிலப்பதிகாரத்தில் கூறப்பெற்றுள்ளது. அக்காலத்தில் இறந்த போர் வீரர்களுக்கு கற்களால் சிலை அமைக்கும் வழக்கமும் இருந்தது.

தமிழகத்திலுள்ள வரலாற்றுக் கோயில்களின் கலை மரபானது சிற்பக்கலை மற்றும் கட்டடக்கலை, ஓவியக்கலை எனும் மரபுக்கலைகளின் தொன்மையுடன் காணப்படுகின்றது. (Acharya Prasannakumar, A. *Dictionary of Hindu Architecture*. Vol.-I) இக்கலைகளுள் கட்டடக்கலையை அலங்கரிக்கும் சிற்பக்கலையானது இந்தியாவில் ஒவ்வொரு காலக்கட்டங்களிலும் மக்களிடையே தொன்றுதொட்டு வரும் பண்பாட்டை அறிய உதவும் முதன்மையான கலை வரலாற்று ஆவணமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. சிற்பக் கலையின் சான்றுகளைக் கோயில்களில் காண்பதற்கு முன்னரே பெருங்கற்காலத்தில் புதைக்கப்பட்ட ஈமத் தாழிகளில் ஆடு, குதிரை மற்றும் பறவைகளின் வடிவங்களைக் காண்பதைப்போலவே சிந்துசமவெளி நாகரிகக் காலத்திலிருந்தும் சுடுமண் முத்திரைகளில் சிற்றுருவச் சிற்பங்களை அகழாய்வுகளில்

 Isbn Number: 978-93-91115-71-5

கண்டறியப்பட்ட சான்றுகளின் மூலமாகவே காணக்கிடக்கின்றன.

சங்க காலத்தில் சிற்பங்கள் மண்ணாலும், மரத்தாலும் சுண்ணாம்புகளாலும், சுதையாலும் செய்யப்பட்டன என்பதை இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் குறிப்பிடப்படுகின்றன. இச்சங்க காலத்தில் அரண்மனையின் வாயிற் கதவுகளிலும், காவிரிப் பூம்பட்டினத்தின் வாயிற் கதவுகளிலும் சிற்பங்களைச் சித்தரித்துள்ளனர் என்பதை மதுரைக் காஞ்சி மற்றும் பட்டினப்பாலை இலக்கிய வரிகளில் காணமுடிகின்றன.

போரில் இறந்த வீரனுக்கு நடுகல் ஒன்றை எழுப்பி அதில் அவ்வீரனின் வீரச்செயல்களையும், உருவத்தையும் பதித்துள்ளனர். இறந்த வீரனின் உடல் மீது கற்களை அடுக்கி கற்பதுக்கை, கல்திட்டை போன்றவற்றின் மீது நடுகல் ஒன்றை நட்டும் வழிபாடு செய்துள்ளனர். மேலும் இறந்த வீரன் தனது கரங்களில் வில், வாள் அல்லது சூலம் ஏந்தியவாறு போரிடுவதைப் போன்ற உருவமும் சித்திரிக்கப்பட்டுள்ளன என்பதை புறநானூற்றின் இலக்கிய வரிகளில்,

**கல்லே பரவின் அல்லது**

**நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே**

**(புறநானூறு, பா. 335:11-12)**

 **Isbn Number: 978-93-91115-71-5**

என்பதை நடுகற்களில் உள்ள உருவங்களை வணங்குவதற்குரிய தெய்வமாக கருதியுள்ளனர் எனக் குறிப்பிடுகின்றது. இச்சங்ககாலத்தில் நிலங்களுக்குரிய தெய்வங்களாக குறிஞ்சி நிலத்திற்கு முருகனும், முல்லை நிலத்திற்கு திருமாலும், மருத நிலத்திற்கு இந்திரனும், நெய்தல் நிலத்திற்கு வருணனும், பாலை நிலத்திற்கு கொற்றவையும் என வணங்கியுள்ளனர். மேலும் மர வழிபாடு சிறந்து விளங்கிய இக்காலத்தில் கொன்றை மற்றும் வில்வ மரத்தை சிவனுக்குரியதாகவும், கடம்ப மரம் முருகனுக்குரியதாகவும், காயம்பூ மரம் திருமாலுக்குரியதாகவும், இலக்கியச்சான்றுகளில் கண்டறியப்படும் சான்றுகளாக உள்ளன. இவற்றுள் சுதைச்சிற்பங்களாக மதுரை நகரத் தெருக்களில் சில நிலைகளையுடைய மாடத்தில் புலியுருவத்தைக் கண்டு யானை அச்சமுற்றதைப் பரிபாடலில்,

> **அன்ன மனையாரோ டாயா நடைக்கரிமேல்**
> **சென்மன மாலுறுப்பச் சென்றெழின் மாடத்துக்**
> **கைபுனை கிளர்வேங்கை காணிய வெருவுற்று**
> **மைபுரை மடப்பிடி மடநல்லார் மதிசெத்துச்**
> **சிதைதர (பரிபாடல், பா. 10:43-48.)**

எனும் வரிகளில் சுதைச்சிற்பங்களின் வடிவங்களை எடுத்துக் காட்டுகின்றன. இதைப்போல பூம்புகாரின் நகரத் தெருக்களில் செங்கற்களால் கட்டப்பட்ட

 Isbn Number: 978-93-91115-71-5

மாடங்களில் சுதைச் சிற்பங்கள் அமைக்கப்பட்டன என்பதை மணிமேகலையில் குறிப்பிடப்பெற்றுள்ளன. சங்ககாலத்திலும் சிற்பங்களின் கலை அமைப்புகள் மண் மற்றும் சுதை, மரம் போன்ற பொருட்களில் செய்யப்பட்டுள்ளது என்பதை இலக்கியவரிகளே எடுத்துரைக்கின்றனவே தவிர இச்சிற்பங்களை தற்போது வரை காண்பதென்பது அரிதாகவே உள்ளது. ஏனென்றால் அழிந்துப் போகும் பொருட்களைக் கொண்டு சிற்பங்களை செய்ததால் இக்கால இறையுருவங்கள் ஏதும் கிடைக்கப்பெறவில்லை.

சங்ககாலத்தைத் தொடர்ந்து சிற்பங்களின் வளர்ச்சியை நோக்கும் போது சிற்பங்கள் அழியக்கூடிய பொருட்களால் அல்லாமல் கற்களால் பாறைகளில் செதுக்கப்பட்ட புடைப்புச் சிற்பங்களாக தோற்றம் பெற்றுள்ளன. குறிப்பாக இந்தியாவில் வடஇந்தியக் குடைவரைகளான நானசுகாட், சுண்டசாலா, பட்டிபுரோலு, அமராவதி, பார்குத்சாஞ்சி போன்ற இடங்களில் உள்ள ஸ்தூபிகள், அய்ஹோலி, எலிபெண்டா, பாதாமி, எல்லோரா, ஔரங்காபாத் போன்ற குடைவரைகளில் புடைப்புச் சிற்பங்களை காணமுடிகின்றது. இதைப்போல தென்னிந்தியாவான தமிழகத்தில் கி.பி.6ம் நூற்றாண்டில் தொண்டை மண்டலத்தில் பல்லவர்களின் குடைவரைகள் மற்றும்

 Isbn Number: 978-93-91115-71-5

தென்பாண்டிய மண்டலத்தில் முற்காலப் பாண்டியரின் குடைவரைகளிலிருந்து புடைப்புச் சிற்பங்களை செதுக்கி குடைவரைகளை அலங்கரித்துள்ளனர்.

பல்லவர்களின் காலக் குடைவரைகளில் மிகவும் நேர்த்தியான முறையில் புடைப்புச் சிற்பங்களைக் காணமுடிகின்றது. இவற்றுள் மாமல்லபுரம் குகைக் கோயில்கள், பல்லாவரம் ஒற்றைக்கல் இரதங்கள் என குடைவரைகளால் செதுக்கப்பட்டக் கோயில்களில் சிற்பங்கள் அதிகமாக புடைப்புச் சிற்பங்களாகவே செதுக்கப்பட்டன. இப்புடைப்புச் சிற்பங்களும் புராணக் கதைகளை விளக்கும் தத்துவ நோக்கத்தோடு சித்தரிக்கப்பட்டுள்ளன. பல்லவர்களின் கட்டுமானக் கோயில்களுள் காஞ்சியில் இராசசிம்மனால் எடுப்பிக்கப்பட்ட கைலாசநாதர் கோயிலின் சிற்பங்கள் எழில் அழகுடன் காணப்படுகின்றன. சேதுராமன் தனது நூலில் சிற்பக்கலைக்கூடம் என்றுக் குறிப்பிடுவதோடு இப்பல்லவர்களின் காலசிற்பங்களுல் கட்டுமானக் கோயில்களின் சிற்பங்கள் ஒடுக்கமான இடையையும், மகுடங்கள் கூம்பு வடிவாகவும் யக்னோபவிதம் என்னும் பூணூல்தரித்தும், அலங்காரம் இன்றி அணிகலன்கள் குறைவாக காணப்படும் எனக் குறிப்பிடுகின்றார். இராமசாமி என்பவர் தனது நூலில் சிற்பங்களின் மகுடம் உயரமானதாகவும் காதணிகள் இயற்கையாகவும்,

 Isbn Number: 978-93-91115-71-5

தோள்வளை போன்ற உறுப்புகள் அற்று எளிமையாக காணப்படும் என தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பல்லவர்களைப் போன்றே முற்காலப் பாண்டியர்களும் தென்பாண்டிய மண்டலத்தில் குடைவரைகளை அமைத்துள்ளனர். திருப்பரங்குன்றம், தென்பரங்குன்றம், குன்றக்குடி, திருக்கோளக்குடி, செவல்பட்டி, திருமலைப்புரம், சேந்தமரம் போன்ற இடங்களில் உள்ள புடைப்புச் சிற்பங்கள் பல்லவர்களின் சிற்பங்களைப் போலவே அமையப்பெற்றுள்ளன. இப்பாண்டியர்களின் கலையமைப்பிலும் ஒற்றைக்கல் இரதச் சிற்பங்களைக் காணமுடிகின்றது. இவற்றுள் கழுகுமலை வெட்டுவான் கோயில் சிற்பங்கள் அழகிலும், கலை நுணுக்கத்திலும் தன்னிகரற்ற அமைப்பினைக் கொண்டு காணப்படுகிறது என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாக அமைகின்றது.

குடைவரை சிற்பங்கள் நிறைந்தக் குடைவரையாகக் காணப்பெறுகின்றன. மேலும், பல்லவரையும், பாண்டியரையும் பின்பற்றிய கலைப்பாணிகளுள் முத்தரையரும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். இவர்களைப் போலவே முத்தரையரும் குடைவரைகளையும், கட்டுமானக் கோயில்களையும் அமைத்து சிற்பங்களை புடைப்புச் சிற்பங்களாகவும், கற்சிற்பங்களாகவும் வளர்ச்சியடையச் செய்துள்ளனர்.

 Isbn Number: 978-93-91115-71-5

இம்முத்தரையரின் குடைவரை சிற்பங்களுள் கருவறையின் இருமருங்கிலும் உள்ள துவாரபாலகரின் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவையாகும். சோழர்களின் காலத்தில் குடைவரைகளின் வளர்ச்சிக் குன்றியதோடு கட்டுமானக் கலையில் தோற்றம் பெற்ற கற்றளிக் கோயில்கள் முழுவதும் கற்சிற்பங்கள் வளர்ச்சியடைந்த நிலையில் காணப்பட்டுள்ளன. இச்சோழர்களின் காலக் கற்றளிகளில் தேவகோவட்டச் சிற்பங்கள், திருச்சுற்று சிற்பங்கள், விமானச்சிற்பங்கள், கோபுரச் சிற்பங்கள் என எங்கும் சிற்ப அலங்காரங்கள் நிறைந்துக் காணப்பட்டக் காலமென்றேக் கூறலாம். (Balasubramanyam. S.R., *Middle Chola Temples*, Oriental Press, Amsterdam, 1977.)

பொதுவாக சோழர்காலக் கோயில்களின் கலையமைப்பை முற்காலச்சோழர் கலைப்பாணி, பிற்காலச் சோழர் கலைப்பாணி என வரலாற்றாசிரியர்களால் வகைப்படுத்தப்படுகின்றன. முற்காலச் சோழர்காலக் கலைப்பாணியைக் கொண்ட கோயில்களுள் நார்த்தாமலை விஜயாலயச் சோழீஸ்வரம், கொடும்பாளூர் மூவர் கோயில், கும்பகோணம் நாகேஸ்வரசுவாமி, புள்ளமங்கை பிரம்மபுரீஸ்வரர், திருக்கட்டளை சுந்தரேஸ்வரர் கோயில் போன்றவை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். முற்காலச் சோழர்கலைப் பாணியைக் கொண்டக் கோயில்களின் சிற்பங்கள்


Isbn Number: 978-93-91115-71-5

பல்லவரின் தொடர்ச்சியாகவே காணப்பட்டன. உயரமான மகுடத்தையும், மெல்லிய உடலமைப்பையும், பட்டையான பூணூலை தரித்தவாறும், சிம்மமுக அரைக்கச்சை கண்டமாலைப் போன்ற அலங்கார வேலைப்பாடுகளும், சிற்பங்களின் மூக்கின் நுனியானது எடுப்பானத் தோற்றத்துடன் அலங்கரிக்கப்பட்டுக் காணப்படுகின்றன. இருந்த போதிலும் சிற்பங்களில் ஓர் அழகிய உயிரோட்டத்தைக் காணமுடிகின்றது. குறிப்பாக கொடும்பாளூர் மூவர் கோயிலின் மேற்கு கிரீவ கோஷ்டத்திலுள்ள உமாசகித மூர்த்தியின் சிற்பத்தில் உமையின் சிற்பமானது சிவபெருமானுடன் நெருங்கியவாறு குடும்பப் பெண்ணின் நாணத்துடன் காணப்படும் அழகானது பல்லவர்களின் சிற்பங்களில் காண்பதரிது என்பதை சோழர்களின் சிற்ப அழகின் நேர்த்தியானது எடுத்துரைக்கின்றது என J.C.ஹார்லே தனது நூலில் குறிப்பிடப்பட்டுள்ளார்.

பிற்காலச் சோழர்களின் காலக் கோயில்களிலுள்ள சிற்பங்களில் ஓரளவு கலை மாற்றங்களைக் காண முடிகின்றது. முற்காலச் சோழர்களின் சிற்பங்களில் காணப்பட்ட அழகும் நேர்த்தியும் பிற்காலச் சோழர்களின் சிற்பங்களில் காணமுடியவில்லை என சேதுராமன் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். மேலும் பிற்காலச் சோழர்களின் சிற்பங்களில் தலைக்குப்பின் வைக்கப்படும்

 Isbn Number: 978-93-91115-71-5

சிரச்சக்கரத்தில் தாமரை இதழ்கள் வட்டமான பகுதியினுள் பதுங்கியவாறு அலங்கரிக்கப்பட்டுக் காணப்படும் என ஏகாம்பரநாதன் என்பவர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இப்பிற்காலக் கலைப்பாணிகளுக்கு சிறந்த உதாரணமாகக் கருதப்படும் கோயில்களுள், தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில், கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம் ஐராவதேசுவரர் கோயில், திரிபுவனம் கம்பஹரேஸ்வரர் கோயில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இக்காலக் கோயில்களின் கட்டடக்கலைகள் மாற்றம் கண்டது போல கோயில்களின் சிற்பங்களிலும் ஹொய்சாளர்களின் கலைப்பாணி, சாளுக்கியர்களின் கலைப்பாணிகள் பின்பற்றப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், இரண்டாம் இராசராச சோழன், முதலாம் குலோத்துங்கன் என ஒவ்வொரு மன்னர்களின் கலை வளர்ச்சியில் மூன்றாம் குலோத்துங்கனின் காலத்திற்கு பின் கோயில்களின் கலையில் நிறைவுபெறும் கலையமைப்பைக் காணமுடிகின்றது. (Balasubramanyam. S.R., *Middle Chola Temples*, Oriental Press, Amsterdam, 1977) இச்சோழர்களை பின்பற்றியக் கோயில்களின் கலையில் பிற்காலப் பாண்டியர், விஜயநகரர், நாயக்கர்களின் காலம் வரை சிற்பக்கலையில் மாற்றங்கள் ஏற்பட்டன.

 **Isbn Number: 978-93-91115-71-5**

பிற்காலப் பாண்டியரின் காலத்தில் உயரமான கோபுரங்களும், கோபுரங்களின் முதல் தளவரிசை, இரண்டாம் தளவரிசை என பதினொறு தளவரிசை வரை உயர்ந்த கோபுரங்களின் சிற்ப அலங்காரங்களுல் சுதையில் அணிசெய்யப்பெற்ற சிற்பங்களை காணமுடிகின்றது. விஜயநகரரின் காலத்தில் உயரமான தூண் சிற்பங்கள், புராணக் கதைகளை விளக்கும் கூட்டுச் சிற்பங்கள் மற்றும் நாயக்கரின் காலத்திலும் இதைப் போன்றச் சிற்பங்களைக் காணமுடிகின்றது. இவ்வாறு பிற்காலப் பாண்டியர், விஜயநகரர், நாயக்க மன்னர்களையும் பின்பற்றச் செய்த சோழர்களின் கலைப்பாணி மிகவும் சிறப்புக்குரிய கலைப்பாணியாகும்.

சிற்பங்கள் பொதுவாக சித்திரம், சித்ரார்த்தம், சித்ராபாசம் என மூவகைப்படுகின்றன. முழுமையான தோற்றத்தைக் கொண்டச் சிற்பங்கள் சித்திரம் என்றும் ஒருபகுதி மட்டும் தெரியும்படி பின்புறம் மறைக்கப் பட்டவாறு காணப்படும் சிற்பங்கள் சித்ரார்த்தம் என்றும், சுவர், பலகை, காகிதம் போன்றவற்றில் சித்தரிக்கப்படும் சிற்ப ஓவியங்கள் சித்ராபாசம் என்றும் குறிப்பிடப்பெறுகின்றன. மேலும் பாறைகளில் செதுக்கப்படும் சிற்பங்கள் அசலம் என்றும், ஓரிடத்திலிருந்து நகர்த்தப்படும் கல், மரம் மற்றும் உலோகச் சிற்பங்கள் சலம் என்றும், ஒரேயிடத்தில்

 Isbn Number: 978-93-91115-71-5

பொருத்தி வைக்கப்படும் சிற்பங்கள் சலாசலம் என்றும் குறிப்பிடப்பெறுகின்றன. ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ள சப்தமாதர்களின் சிற்பங்களைப் பற்றி புராணப் பின்னணியோடு கீழ்க்கண்டவாறு விளக்கப்படுகின்றன.

**சப்தமாதர்கள்**

தக்காணத்தினை ஆட்சி செய்த முற்கால சாளுக்கியர் காலத்திலிருந்து தென்னிந்தியாவில் இவ்வழிபாடு செழிப்புற்றிருந்தது. முற்கால சாளுக்கிய அரசர்கள் ஹரிதியின் வழித்தோன்றல்கள் என்றும் சப்தமாதர்களினால் வளர்க்கப்பட்டவர்கள் என்றும் சாசனங்களின் முகவுரையில் கூறப்பட்டுள்ளது. சாளுக்கியர் காலத்தினைச் சேர்ந்த அய்கோலே, எல்லோரா என்னுமிடங்களில் சப்தமாதர்களின் சிற்பங்களைக் காணலாம். பல்லவராட்சிக் காலம் முதல் தமிழ்நாட்டில் இவர்களது வழிபாடு சிறப்பு பெற்றிருந்தது. பல்லவ மன்னன் இராஜசிம்மன் கட்டிய காஞ்சி கைலாசனாதர் கோயிலில் காணப்படும் மாத்திரிகர்களின் சிற்பம் போல் பெருநகர் பிரம்மபுரீஸ்வரர் கோயிளில் காணப்படுகிறது. முற்காலப் பாண்டியர்களும், முத்தரையர்களும் குகைக்கோயில்களில் சப்தமாத்திரிக சிற்பங்களை அமைத்துள்ளனர்.

சோழர் காலத்தில் சப்த மாதர்கட்கு தனியாக சந்நிதிகள் அமைக்கப்பட்டன. இக்காலத்தில் கட்டப்பட்ட

 Isbn Number: 978-93-91115-71-5

கோயில்களில் கருறையைச் சுற்றி அமைக்கப்பட்ட அட்ட பரிவார ஆலயங்களுள் ஒன்று சப்த மாத்திரிகாட்குரியதாக இருந்தது. காசியப்ப சில்பம், மயமதம் போன்ற நூல்களில் அட்ட பரிவார தெய்வங்களுள் சப்த மாத்திரிகர்களும் குறிப்பிடப்படுகின்றனர். சோழராட்சிக் காலத்தில் சப்தமாதர்களுட்குத் தனியான கோயில்களும் அமைக்கப்பட்டது. சென்னை வேளச்சேரியில் செல்லியம்மன் (காளப்பட்டாரி) கோயிலில் திருச்சி மாவட்டம் ஆலம்பாக்கத்திலுள்ள கோயில்கள் சப்தமாதர்கட்கான தனியான கோயில்கள். வேளச்சேரி செல்லியம்மன் கோயிலின் கருவறையில் கிழக்குப் பக்கத்தில் விநாயகர் சிற்பமும் தெற்குப் பக்கத்தில் சப்த மாத்திரிகர்கள் சிறப்பங்கள் ஒரே வரிசையில் மேற்குப் பக்கத்தில் வீரபத்திரரின் சிற்பமும் காணப்படுகிறது. முதலாம் குலோத்துங்க சோழனின் தளபதியாகிய கருணாகரத் தொண்டைமான் கலிங்க தேசத்தினை வெற்றி கொண்டமையைப் பற்றி ஜயங்கொண்டார் பாடப்பெற்ற கலிங்கத்துப்பரணியில் கடவுள் வாழ்த்தில் சிவன், விஷ்ணு, பிரம்மா, சூரியன், விநாயகர், முருகன், நாமகள், கொற்றவை என்போரைப் பாடிய பின்பு சப்தமாதர்கட்கு வணக்கம் செலுத்தியுள்ளார்.

**புராணம்**

சிவனுக்கும் அந்தகாசுரன் என்னும் அசுரனுக்கும்

 Isbn Number: 978-93-91115-71-5

இடையேயான போரில் சிவனுக்கு உதவியாகத் தோற்றுவிக்கப்பட்டவர்கள் என வராக புராணத்தில் கூறப்பட்டுள்ளது. சிவன் அந்தகாசுரனுடன் போரில் ஈடுபட்டபோது அந்தகாசுரனின் உடலில் இருந்து வழிந்துவந்த இரத்தலிருந்து தோன்றிய அசுரர்களை அழிக்கும் நோக்கில் சிவன் தனது வாயிலிருந்து தோன்றிய அக்கினியிலிருந்து யோகேசுவரி என்னும் சக்தியை உருவாக்கினார் எனவும் மகேசுவரி என்னும் பெயருடைய சக்தியும் இவரால் உருவாக்கப் பட்டதெனவும், பிரம்மா, இந்திரன், வராகமூர்த்தி, விஷ்ணு, குமரன், யமன் என்போரும் தமது சக்திகளை சிவனக்குதவியாக அனுப்பினார்கள் என்று வராக புராணம் குறிப்பிடுகிறது. சும்ப என்ற அரக்கனை அழிப்பதற்காக அம்பிகைக்குத் துணையாக மாத்phகள் தோற்றுவிக்கப்பட்டனர் என மார்கண்டேய புராணமும் தேவி மகாத்மியமும் கூறுகின்றன. நைரித என்பவனுக்கு எதிராகப் போரில் பிரம்மாவிற்கு உதவியாக இவர்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளனர் என சுப்ரபேதாகமம் அறிவிக்கிறது.

அக்கினிபுராணம், அம்சுமத்தபேதாகமம், பூர்வ காரணாகமம், மச்சபுராணம், ரூபாவதாரம், ரூபமந்தனம், விஸ்வகர்ம சாஸ்திரம், சில்பரத்தினம், ஸ்ரீத்தததுவநிதி, விஷ்ணுதர் மோத்திரபுராணம், தேவி புராணம் போன்ற


Isbn Number: 978-93-91115-71-5





நூல்களில் சப்தமாத்திரிகள் பற்றியும், ஆண் தெய்வங்கள் சக்திகளான இவர்கள் தம்க்குரிய ஆண் தெய்வங்களின் ஆயுதங்கள், ஆபரணங்கள் வாகனம் கொடி என்பவற்றினைக் கொண்டு காணப்படுகிறார்கள். மகேசுவரி சினத்தையும், வைஷ்ணவி பேராசையையும், பிரம்மி ஆணவத்தையும், கௌமாரியையும், இந்தராணயியும், குற்றங்கண்டுபிடித்தலையும், சாமுண்டி கோள் சொல்லுதலையும், வராகி பொறாமையையும் அழிக்கும் குணம் பெற்றவர்களாக குறிப்பிடபடுகிறது. தீயவற்றை எதிர்க்கும் ஆற்றல்களே சப்த மாதர்களாக உருவெடுக்கப்பெறுகின்றனர். யோகீஸ்வரி, காமம், பிராம்மி மதம், மகேசுவரி - குரொதம், கௌமாரி- மோகம், வைஷணவி-உலோடம், இந்திராணி-மார்ச்சாரியம், வராகி- அசுயை, சாமுண்டி-பைசன்யம், தீயவைகளை எதிர்த்துப் போரிடும் வித்தைதான் சப்தமாதர்களின் போர் என்பர். பண்டைய காலத்தில் மாத்ருஸ்தானம் என்றும் எம்மூர் சப்தமாதர்கள் என்றும் அழைத்தனர்.

ஒரு சிறு கோயில் அடிப்பகுதி கல்லாலும் மேற்பகுதி செங்கல்லாலும் ஆனது. கருப்பகிருகத்தில் , பிரம்மி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வராஹி, இந்திராணி, சாமுண்டா என்றழைக்கப்படும் ஏழு தாய்மார்களின் தெய்வீக உருவங்கள் உள்ளன. இவை தவிர வீரபத்திரர் சிற்பமும், கணபதியின் சிற்பமும்

 Isbn Number: 978-93-91115-71-5

சப்தமாதர்களுடன் எப்போதும் சேர்ந்தெ காணப்படும். இக்கோயிலில் எழுவர் உருவம் மட்டுமே உள்ளது என்பதுக் குறிப்பிடத்தக்கது.

**பிரம்மி**

பிரம்மி சிற்பம் கோயிலில் உள்ள சப்தமாதர்களின் சிற்பங்களில் முதலாவதாக உள்ளது. இச்சிற்பம் செவ்வக பீடத்தின் மீது இடக்காலை மடித்து வலக்காலை தொங்கவிட்டுள்ளது. நான்கு கரங்கள் மேல் வலக்கரம் அக்காமலை இடக்கரம் கென்டையையும் பிடித்துள்ளது. கீழ் வலக்கை அபய முத்திரையில் அமைந்துள்ளது. இடக்கரம் தொடை மீது வைத்துள்ளது. ஜடா மகுடம் உத்திராட்ச குண்டலம் மணிமகுடம் கேயுரம் கைவலை பாதசரம் ஆகிய அணிகள் பிரம்மியை அலங்கரிக்கின்றன. பிரம்மியின் வாகனமான அண்ணம் பீடத்தின் பின்புறத்தில் செதுக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் பீடம் இல்லாமல் இரண்டு அடி தோல் அகலம் ஒன்றேகால் அடி இதன் காலம் 8ம் நூற்றாண்டு ஆகும்.

விஷ்ணுதர்மோத்திரம் குறிப்பிடுகையில் ஆறு கரங்கள் உடையவர் என்கிறது. இடது கரங்களில் அபயம், புஸ்தகம் (சுவடி) கமண்டலம், வலது கரங்களில் வரதம், சூத்திரம், சுருவம் தரித்து மான்தோலாடை அணிந்திருப்பார் என்று குறிப்பிடுகிறது. பூர்வ காரணாகமம் நான்கு கரங்கள் கொண்டவர் என்றும்

 Isbn Number: 978-93-91115-71-5

கைகளில் கமண்டலம், அக்கமாலை அபயம் வரதம் தரித்திருப்பார் என்றும் கூறுகிறது. இதைப்போலவே இக்கோயிலின் சிற்பமும் அமையப்பெற்றுள்ளது.

**மகேசுவரி**

மகேசுவரி சிற்பம் செவ்வக இருக்கை மீது இடதுகாலை மடித்து வலது காலை தொங்கவிட்டு, நான்கு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் செதுக்கப்பெற்றுள்ளது. வலது மேல்ககை மழுவைப் தாங்கியவாறும் இடது மேல் கை பாயும் மானை தாங்கியவாறு காட்சியளிக்கிறது. வலது கீழ்கை அபய முத்திரையும், இடது கீழ்க்கை தொடை மீதும் அமைந்துள்ளன. ஜடாபாரம் தலையை அலஙகரிக்கிறது.

காதுகளில் மகர குண்டலங்களும், கழுத்தில் கண்ட சரமும் கற்கள் பதித்த காரையும் சவடியும் அலங்கரிக்கின்றன. தனங்களின் மீது குஜபந்தம் காட்டபெற்றுள்ளது. மார்புக்குக் கீழ் வயிற்றில் கன்வீரம் அணி செய்கிறது. மேல்கைகளில் இலைக்கருக்கு முகப்புடைய தோள்வளையும் முன்கைகளில் மூன்றுவகை கைவளையும் இடையிலிருந்து முழங்காலுக்குக் கீழ்வரை ஆடையும் காலில் பாதச்சரமும் காணப்படுகிறது. தாழ்ந்து தொங்கும் வலது திரவடி தாமரை மலர்மீது அமைந்துள்ளது. அமையான தோற்றமுடைய தேவியின்


Isbn Number: 978-93-91115-71-5

தலையை அலங்கரிக்கும் சடாமுடியையும்கைகள் ஏந்தியுள்ள மழு, மான்களையும் கொண்டுள்ளது.

**கௌமாரி**

சப்தமாதர்களில் கௌமாரியின் சிற்ப வடிவம் பிராமிக்கு அடுத்த நிலையில் காணப்படுகிறது. இவ்வுருவம் இரண்டு அடி உயரம் உடைய செவ்வக பீடத்தில் ஒன்றரை அடி அகலத்தில் அமைக்கப் பட்டுள்ளது. இவ்வுருவம் வலது காலை மடித்து இடது காலை பின்புறம் எழிலாக தொங்க விட்ட நிலையில் நான்கு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறது. இதன் மேல் வலக்கை முத்திரையும் அக்கமாலையும் பிடித்துள்ளது. மேல் இடக்கையில் கமண்டலம் காட்டப்பட்டுள்ளது. கீழ் வலக்கை அபய முத்திரையில் அமைந்துள்ளது.கௌமாரியின் தலையில் கரண்ட மகுடம் அலங்கரிக்கிறது. மேல் நெற்றியில் கண்டி மாலை காட்டப்பட்டுள்ளது.

இரு காதுகளிலும் மட்டமான ஓலைக் குழல்கள் அழகு செய்கின்றன. கழுத்தில் கண்டிகையும், சரப்பள்ளியும், மணிவடமும் அலங்கரிக்கின்றன. மேற்கரங்களில் கருக்கு முகப்புடைய தோல் வளையும் முன் கையில் மூன்றுயுகம் கைவலையும் அணி செய்கின்றன. மேல் வயிற்றில் சன்ன பீரம் அழகு செய்கின்றன. இடையில் இருந்து மேல் தொடை வரை

 Isbn Number: 978-93-91115-71-5

கீழ் ஆடை அணிசெய்கின்றன. இடைக்கட்டு அரைவட்ட வடிவில் பீடத்தின் முகப்பில் சரிந்துள்ளது. பெருமிதமான முகத்தோற்றத்துடன் விளங்கும் கௌமாரியின் வாகனமான மயில் பீடத்தின் பின்புறம் பக்கவாட்டில் காட்டப்பட்டுள்ளது.

**வைஷ்ணவி**

வைஷ்ணவி சிற்பம் வீராசனத்தில் அமைக்கப்பட்டுள்ளது. நான்கு கைகளுடன் இச்சிற்பம் காணப்படுகிறது. முன் இரு கைகளில் வலக்கையில் அபயமும், இடக்கையில் மீது வைத்தவாறும் பின் இரு கைகளில் வலக்கையில் சூலமும் இடக்கையில் அக்கமாலையும் தாங்கியவாறு அமைக்கப்பட்டள்ளது. சிற்பரத்தினம் சுறுகையில் சங்கு கொடி சங்கிலி இவற்றைத்தனது நான்கு கைகளில் திரித்திருப்பவள். பட்டாணி போல் கருமையான நிறமள்ளவள் என்றும் மீதக வாடையுடுத்தியவள். இவ்வாறக வைஷ்ணவி அடையாளப்படுத்துகிறது. ஸ்ரீதத்துவநிதி வைஷ்ணவி தேவியானவள் கருட வாகனமும், நீலநிறமும் ஆறு கரங்களும், வனமாலையும் உடையவளாளவாள். வலது கைகளில் வரதம்.கதை, தாமரை மலர் இவைகளையும் தரித்திருப்பாள், நீலநிறம் கொண்டவள் ஆவாள்.

**வராகி**

வராகி நான்கு கரங்களுடன் வீராசனத்தில்

அமைந்துள்ளது. முன் இரு கைகளில் வலக்கையில் அபய முத்திரையும் இடக்க்ய்யில் வரத முத்திரையுடனும் பின் இர கைகளில் வலக்கையில் சூலமும், இடக்கையில் அக்கமாலை தாங்கியவாறு அமைந்துள்ளது.சிற்பரத்தினம் உலக்கை, கத்தி, அழகியமணி, கலப்பை இவற்றைக் கைகளில் தரித்திருப்பாள் மேகம் போன்ற நிறமுடையவள் என்று அடையாளமிடுகிறது. ஸ்ரீதத்துவநிதி வராஹி தேவியானவள் கருப்பு நிறமும், மஹிஷ வாகனமும், பருத்த வயிறும் ஆறு கைகளும் பன்றி முகமுடையவளாவாள் வலது கைகளில் வரதம் தண்டம், கத்தி இவைகளயும் இடது கையில் கேடயம் பத்திரம் அபயம் இவைகளையுடையவளாவாள்.

**சாமுண்டி**

பீடத்தின் மீது வீராசனத்தில் அமர்ந்துள்ளாள். நான்கு கைகள் காணப்படும் முன் இர கைகளில் வலக்கையில் அபயமும், இடக்கையில் வரத முத்திரையும், பின் இரு கைகளில் வலக்கையில் சூலமும் இடக்கையில் அக்கமாலை அணிவிக்கபட்டு காணப்படுகிறது. சிற்பரத்தினம் சூலம், கத்தி, மனிதனுடைய தலை, அழகிய மண்டை ஓடு இவற்றில் விரகாசிக்கிற கைகளை உடையவளும், முண்டங்களாலான மாலையை அணிந்தவளும், கடுஞ்சினம் உள்ளவளுமாக சாமுண்டியைக் காட்டுகின்றனர். ஸ்ரீதத்துவ நிதி

 Isbn Number: 978-93-91115-71-5

சாமுண்டா தேவியானவள், பிரேத வாகனம் கருப்பு நிறமும் விகாரமான உருவமும் பாம்புகளாலான ஆபரணமும், தெத்திப் பல்லும், ஒல்லியான சரீரமும், குழிவிழுந்த கண்களும், காமரூப உருவம் எடுக்கும் சக்தியும் பத்து கைகளும் ஆட்கிய வயிறும் உடையவளாவாள். வலது கைகளில் முசலம், சக்கரம், சாமரம்அங்குசம் கத்தி இவைகளையும் இடது கைகளில் கேடயம், பாசம், வில் தண்டம்,கோடரி இவைகளையும் தரித்திருப்பாள். தாய் தெய்வ வழிபாட்டால் ஊரில் அமைதி நிலவும், மக்களின் பிரச்சனைகள், இயற்கை சீற்றங்கள் குறைந்து வளமான கிராமமாக திகழவும் இந்த தாய் தெய்வ வழிப்பாடு பின்பற்றப்பட்டு வருகிறது. மக்களால் கோயில்களில் பின்பற்றப்பெற்றுள்ளது என்பதுக் குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

சப்தமாதர்களின் வழிபாடு என்பது ஏழு தாய்த்தெய்வங்களின் வழிபாடாக முதலில் முற்காலப் பாண்டிய மன்னர்களால் போற்றப்பட்டு, பின்னர் பிற்காலப் பல்லவர்களாலும், சோழர்களாலும் வளர்க்கப்பட்டு இன்றளவும் வழிபாட்டிலும், போற்றுதலுக்குரியதாக அமைந்திருக்கிறது என்பதுக் குறிப்பிடத்தக்கது.

 Isbn Number: 978-93-91115-71-5

## குறிப்புகள்

[1] ஆச்சார்யா பிரசன்னகுமார், A. *இந்து கட்டிடக்கலை அகராதி, தொகுதி- I.*

[2] ஆச்சார்யா பிரசன்னகுமார். *தி ஹிந்து ஆர்க்கிடெக்சர் இந்தியா அண்ட் அபார்ட்.* ஜே.எச். பப்ளிஷிங் ஹவுஸ், போபால், 1979.

[3] ஆச்சார்யா பிரசன்னகுமார். *இந்து கட்டிடக்கலை என்சைக்ளோபீடியா தொகுதி. VII*, ஓரியண்டல் மறுபதிப்பு, புது தில்லி, 1979.

[4] அகர்வாலா பிரிதிவிகுமார். *இந்திய கலையின் அழகியல் கோட்பாடுகள்.* ப்ரீதிவி பிரகாசம், வாரணாசி, 1980.

[5] பாலசுப்ரமணியம்.எஸ்.ஆர். *பிற்காலச் சோழர் கோயில்கள்.* முத்கல அறக்கட்டளை, ஃபரிதாபாத், 1979.

[6] பாலசுப்ரமணியம். எஸ்.ஆர். *இடைக்காலச் சோழர் கோயில்கள்.* ஓரியண்டல் பிரஸ், ஆம்ஸ்டர்டாம், 1977.

[7] பாலசுப்ரமணியம்.எஸ்.ஆர். *ஆரம்பகால சோழர் கோயில்கள்.* ஓரியண்டல் லாங்மேன், சென்னை, 1971.

[8] பானர்ஜி, ஜே.என். *டெவலப்மெண்ட் ஆஃப் ஹிந்து ஐகானோகிராஃபி.* கல்கத்தா, 1956.

[9] பாரெட் டக்ளஸ். *ஆரம்பகால சோழர் கட்டிடக்கலை மற்றும் சிற்பம்*. ஃபேபர் & ரேபர் லிமிடெட், லண்டன், 1974.

[10] கோபிநாத ராவ்., *டி.ஏ. எலிமென்ட்ஸ் ஆப் இந்து ஐக்கனோகிராபி தொகுதி. I & II*. மோதிலால் பனார்சிதாஸ், சென்னை, 1914.

[11] நீலகண்ட சாஸ்திரி, கே.ஏ. *தென்னிந்தியாவின் வரலாறு*. ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம், சென்னை, 1971.

[12] நீலகண்ட சாஸ்திரி, கே.ஏ. *சோழர்கள்*. மெட்ராஸ் பல்கலைக்கழகம், சென்னை, 1975.

[13] ராமச்சந்திர ராவ் எஸ்.ஆர், *பிரதிமகோஷா*. ப.230.1973

[14] சீனிவாசன், கே.ஆர். *பல்லவர்களின் குகைக் கோயில்கள்*. இந்திய தொல்லியல் துறை, புது தில்லி, 1964.

[15] சீனிவாசன், கே.ஆர். *தர்மராஜ ரதம் மற்றும் அதன் சிற்பங்கள்*. அபினவ் பப்ளிகேஷன்ஸ், புது தில்லி, 1973.

[16] சேலடோர், ஆர்.என். *என்சைக்ளோபீடியா ஆஃப் இந்தியன் கல்ச்சர், தொகுதி.II*. ப.1263. 1984.

# Spirituality and Science in Pillaithamil

**Mrs. N. Tamilarasi,** Ph.D Scholar of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi-642001, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-2450-4671**
**Dr. A. Mahalakshmi**, Assistant Professor of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi-642001, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-5234-0750**
**DOI: 10.5281/zenodo.7387272**

## Abstract

*In human life, spirituality and science are intertwined. Spirituality and science are mixed in every event that our ancestors have told us. When we analyze what they are, the truths contained in those events can be seen. All these things have been done by literature for many centuries. Literature has appeared according to each time and according to the life of the people. All of them were created to guide the people and expand their knowledge. In this way, they were called which have four solid objects namely Virtue, Material, Pleasure and Home. Such poems are the way in which the creators sing the praises of the people they want or like. Prabandha genealogy says that there are 96 types of these poems. One of them is the Pillaithamil literature, which sings about God or man as a child and sings ten seasons. The Pillaithamil book very well mentions the events that take place from the third month to the twenty-first month after the birth of a child. Another feature of this is that it is sung with not only the God but also the people as the central theme. In modern times, numerous Pillaithamil literatures have appeared. In this way Arultaru Poongotaiyamman Pillaithamil is an essential*

*Tamil book of the twentieth century. Pillaitamil very well mentions what brings happiness and what brings misery to human life. This Pillaithamil, which starts with greetings to the deities as usual in the harvest season, also highlights the history of the temple in the Sengir season. Thalaparubu is also about the way of worshiping gods and has scientific medical notes. The Sappani season highlights the fact that the people of Kongu country dug wells for plowing and perished, and the woes of today's hurried life. This book has been written very well by the author. There are notes about the town and hilly areas in the Amman season and the references about the water bodies in the swimming season. Finally, this Pillai Tamil book is a book that highlights the great philosophy of Padi, Pasu and Pasam. This article is intended to convey the scientific and spiritual messages contained in such an excellent book.*

**Keywords**: Spiritual, Pillaithamil, Kanini, Paruvam, Ambuli, Ammanai, Sitril

## References

[1] Dr. Sub. Annamalai. *Thirumantram Moolapada Research Edition*. Kalashetra Publishing House, Chennai-600 041, 1997.
[2] Mr. Ira. Iragavaiyangar. *By the Twelver*. Madurai Tamilchangaltra Road, Madurai, 1951.
[3] Poisoning. *Tolkappiyam (Economy).* Tamilman Publishing House, Chennai- 600 017.
[4] Na. Kathiraivellai. *Saiva Bhushan Chandrikai*, World Tamil Research Institute, Chennai, 2015.

[5] Dr. Wah. Se Kheduswamy. *Science Tamil*. Bharati Publishing House, Chennai – 600017, 2006.

[6] Dr. N. Ira Senniappan. *Arultharu Poongothaiyannai Pillaithamil*. Asian Press, Coimbatore – 642023, 2005.

[7] Prof. A. S. Gnanasampandan. *Adankantim Devara Thirupathikams*. Ganga Bookstore, Chennai-600017, 1998.

[8] Dr. V. Nagarasan. The Second Part of the Ten Commandments (Source and Text). New Century Book House, Chennai – 600098, 2017.

[9] Dr. K. Kandan, Nine Planets. Head of Department Sculpture, https://www.tamilvu.org/tdb/titles_cont/scuipture/html/planets.htm

[10] https://tamil.samayam.com/lifestyle/fitness/whar-are-the-7-chakras-in-our-body-in-tamil October 23, 2020.

 Isbn Number: 978-93-91115-71-5

# பிள்ளைத்தமிழ் கூறும் ஆன்மீகமும் அறிவியலும்

**திருமதி ந. தமிழரசி,** முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி-642001, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-2450-4671**
**முனைவர் ஆ.மகாலட்சுமி,** நெறியாளர், உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி-642001, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0001-5234-0750**
**DOI: 10.5281/zenodo.7387272**

## ஆய்வுச்சுருக்கம்

*மனித வாழ்வில் ஆன்மீகமும் அறிவியலும் இரண்டறக் கலந்த ஒன்றாகவே அமைந்துள்ளது. நம் முன்னோர்கள் நமக்குக் கூறிச் சென்றுள்ள ஒவ்வொரு நிகழ்வுகளிலும் ஆன்மீகமும் அறிவியலும் கலந்துள்ளது. அவை என்னவென்பதை ஆராய்ந்து செய்யும்பொழுது அந்நிகழ்வுகளில் அடங்கியுள்ள உண்மைகள் புலப்படும். இவற்றையெல்லாம் பல நூற்றாண்டுகளாக இலக்கியங்களே செய்து கொண்டு வருகின்றன. ஒவ்வொரு காலத்திற்கேற்பவும், மக்களின் வாழ்வியலுக்கேற்பவும் இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவைகளெல்லாம் மக்களை நல்வழிப்படுத்தவும்*

அவர்களின் அறிவை விரிவு செய்யவுமே படைக்கப்பட்டன. அவ்வகையில் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களை உடையன பேரிலக்கியங்கள் எனப்பட்டன. அவற்றிலிருந்து ஏதேனும் ஒரு உறுதிப்பொருள் குறைந்து வருமாயின் அவை சிற்றிலக்கியங்கள் எனப்பட்டன. இத்தகைய சிற்றிலக்கியங்களானது படைப்பாளர்கள் தங்களுக்கு வேண்டியவர்களையோ அல்லது விருப்பமானவர்களையோ பாடிப் புகழும் விதமாக அமையும். இவ்விலக்கியங்கள் 96 வகை என்று பிரபந்த மரபியல் கூறுகிறது. அதில் ஒன்றான பிள்ளைத்தமிழ் இலக்கியமானது கடவுளையோ அல்லது மனிதரையோ குழந்தையாகப் பாவித்து பத்துப் பருவங்களாகப் பாடுவதாக அமைந்துள்ளது. ஒரு குழந்தை பிறந்தது முதல் மூன்றாம் மாதம் தொடங்கி இருபத்தோரு மாதம் வரை நடைபெறும் நிகழ்வுகளை மிகச் சிறப்பாக பிள்ளைத்தமிழ் நூலானது குறிப்பிடுகிறது. இதன் மற்றொரு சிறப்பு கடவுளை மட்டுமின்றி மானிடர்களையும் மையப் பொருளாகக் கொண்டு பாடுவதாகும். தற்காலத்தில் எண்ணற்ற பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் தோன்றி உள்ளன. அவ்வகையில் இருபதாம் நூற்றாண்டை சார்ந்த அருள்தரு பூங்கோதையன்னை பிள்ளைத்தமிழ் நூலானது இன்றியமையாத ஒரு பிள்ளைத்தமிழாகும்.இந்நூலை

 Isbn Number: 978-93-91115-71-5

முனைவர் ந.இரா.சென்னியப்பனார் இயற்றியுள்ளார். மனித வாழ்விற்கு இன்பம் சேர்ப்பவை பற்றியும் துன்பம் தரக்கூடியவை பற்றியும் மிகச்சிறப்பாக இப்பிள்ளைத் தமிழ் குறிப்பிடுகிறது. காப்புப் பருவத்தில் வழக்கம்போல தெய்வங்களை வாழ்த்தித் தொடங்கும் இப்பிள்ளைத்தமிழ் செங்கீரைப் பருவத்தில் இத்திருக்கோவில் உருவான வரலாற்றையும் எடுத்துரைக்கிறது.இறை வழிபாடு செய்யும் முறை பற்றியும், அறிவியல் மருத்துவக் குறிப்புகளைக் கொண்டதாகவும் தாலப்பருவம் அமைந்துள்ளது. கொங்கு நாட்டு மக்கள் உழவுக்காக கிணறுகள் வெட்டியே அழிந்தவர்கள் என்பதையும், இன்றைய அவசர வாழ்வின் அவலக்கோலங்களையும் சப்பாணிப் பருவம் எடுத்துரைக்கிறது. வருகைப் பருவத்தில் கொங்குநாட்டின் பழமையைக் காட்டி அம்புலிப் பருவத்தை மிகச்சிறப்பாக படைத்துள்ளார் இந்நூலாசிரியர்.அம்மானைப் பருவத்தில் ஊர் மற்றும் மலைப்பகுதிகள் பற்றிய குறிப்புகளும், நீராடல் பருவத்தில் நீர்த்துறைகள் பற்றிய குறிப்புகளும் இடம்பெற்றுள்ளது.இறுதியாக ஊசல் பருவத்தில் பதி, பசு, பாசம் பற்றிய பெரும் தத்துவத்தை எடுத்துரைக்கும் நூலாக இப்பிள்ளைத்தமிழ் நூல் அமைகிறது. அத்தகைய சிறப்பான நூலில் இடம்பெற்றுள்ள அறிவியல் மற்றும்

*ஆன்மீகம் தொடர்பான செய்திகளைக் கூறும் பொருண்மையில் இக்கட்டுரையானது அமைகிறது.*

**கலைச்சொற்கள்**: ஆன்மீகம், பிள்ளைத்தமிழ், கணினி, பருவம், அம்புலி, அம்மானை, சிற்றில்.

**முன்னுரை**

தமிழ் இலக்கிய உலகில் பெருஞ்சிறப்புடன் விளங்கும் இலக்கிய வகைகள் பலவற்றுள் பிள்ளைத் தமிழும் ஒன்று. தொல்காப்பியர் காலத்தில் துளிர்த்த பிள்ளைத்தமிழ் தற்போது தனி இலக்கிய வகையாகவே வளர்ந்துள்ளது சிறப்பிற்குரிய ஒன்றாகும். ஆண் குழவியின் மீது பாடப் பெறும் நூல் ஆண்பாற்பிள்ளைப் பாட்டு என்றும், பெண்குழவியின் மீது பாடப் பெறுவது பெண்பாற்பிள்ளைப் பாட்டு என்றும் கூறுவர். ஒவ்வொரு பிள்ளைத்தமிழும் பத்துப் பருவங்களை உடையது. ஆண்பாற் பிள்ளைத்தமிழின் இறுதி மூன்று பருவங்கள் சிற்றில், சிறுபறை, சிறுதேர் எனவும், பெண்பால் பிள்ளைத் தமிழின் இறுதி மூன்று பருவங்கள் கழங்கு, அம்மானை, ஊசல் எனவும் குறிப்பிடப்படுகிறது. இவ்விரு பிள்ளைத் தமிழுக்கும் பொதுவான பருவங்களாக காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி என்ற ஏழு பருவங்களும் அமையும்.இத்தகைய பிள்ளைத் தமிழ் நூல்களில் ஒன்றான அருள்தரு


Isbn Number: 978-93-91115-71-5

பூங்கோதையன்னை பிள்ளைத்தமிழ் நூலானது கொங்கு நாட்டில், ஒற்றைக்கால் மண்டபப் பகுதியில் அமைந்துள்ள புற்றிடம் கொண்ட ஈசன் கோயிலில் அருள்பாலித்துள்ள பூங்கோதை அம்மன் மீது பாடப்பட்ட நூல் ஆகும். மனித வாழ்வில் நடக்கும் நிகழ்வுகளில் அறிவியலும், ஆன்மீகமும் பெற்றுள்ள இடத்தை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**தொல்காப்பியத்தில் பிள்ளைத்தமிழ்**

சிற்றிலக்கியங்களில் தனிச் சிறப்புடைய இலக்கியமாக பிள்ளைத்தமிழ் விளங்குகிறது. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான பல்வேறு பருவங்களில் மிகவும் இனிய பருவமாக எல்லோராலும் போற்றப்படுவது குழந்தை பருவம் ஆகும். அத்தகைய குழந்தைப் பருவத்தை மையமாகக் கொண்டு பாடுவது பிள்ளைத் தமிழின் சிறப்பாகும்.

**பிள்ளைப்பாட்டே தெள்ளிதின் கிளப்பின்**
**மூன்று முதலா மூவேழ் அளவும்**
**ஆன்ற திங்களின் அறைகுவர் நிலையே**
**(பன்னிருபாட்டியல், பா. 101)**

என்ற வரிகளில் குழந்தையின் மூன்றாம் மாதம் முதல் இருபத்தி ஒன்றாம் மாதம் வரையிலான காலத்தில் பாடுவது பிள்ளைப்பாட்டாகும். இதில் ஆண்டு வரையறையானது பாட்டியல் நூல்களுக்கு ஏற்ப மாற்றம்

 **Isbn Number: 978-93-91115-71-5**

பெற்றுள்ளன. பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் ஆணிவேர் **குழவி மருங்கினும் கிழவதாகும் (தொல்.புறம்., நூ.29)** என்னும் நூற்பா அடியில் உள்ளதாக உரையாசிரியர் நச்சினார்க்கினியர் தம் உரையில் குறிப்பிடுகின்றார். தொல்காப்பியத்தில் சிறுகூறாக இருந்த பிள்ளைத்தமிழ் பின்னாளில் தனி இலக்கிய வகையாகப் பல்கிப் பெருகியது என்பதை அறிய முடிகிறது.

**சங்கஇலக்கியத்தில் பிள்ளைத்தமிழ்**

இடைக்கால இலக்கியங்களிலும், பிற்கால இலக்கியங்களிலும் பிள்ளைத்தமிழின் கூறுகள் நிறைந்துள்ளன. சங்க இலக்கியத்தில் பிள்ளைத் தமிழின் வேர்கள் கிடக்கின்றன.

**பொற்கால்புதல்வர் புரவியின் றுருட்டும்**
**முக்கால் சிறுதேர் (பட்டினப்பாலை, பா. 24 -25)**

என்ற வரிகளில் சிறு குழந்தைகள் தேர் உருட்டி விளையாடிய செய்தி இடம்பெற்றுள்ளது.எந்த ஒரு இலக்கிய வகைகளும் திடீரென்று உருக்கொள்வதில்லை. அதன் கூறுகள் அனைத்து இலக்கியங்களிலும் சிறிதேனும் பரவியிருக்கும் என்பதை அறியமுடிகிறது.

**பக்தி இலக்கியத்தில் பிள்ளைத்தமிழ்**

பக்தி இலக்கியங்களிலும் பிள்ளைத்தமிழின் கூறுகள் நிறைந்துள்ளன பெரியாழ்வார் பாடிய


Isbn Number: 978-93-91115-71-5

பாடல்களே பின்னாளில் பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கு அடிகோலின.

**மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி**
**ஆணிப்பொன்னாற்செய்த வண்ணச் சிறு**
**தொட்டில்பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்**
**மாணிக் குறளனே! தாலேலோ! வையம்**
**அளந்தானே! தாலேலோ (பெரியாழ். நான்காம் திருமொழி, பா. 1)**

என்ற வரிகளில் பிள்ளைத்தமிழின் கூறுகள் அமைந்துள்ளன. கி.பி 12ஆம் நூற்றாண்டில் தோன்றிய குலோத்துங்கச் சோழன் பிள்ளைத் தமிழே முதல் பிள்ளைத்தமிழ் நூலாகும். பன்னிரண்டாம் நூற்றாண்டு தொடங்கி இருபதாம் நூற்றாண்டு வரை பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் தோன்றி வளர்ந்தன. இன்று பிள்ளைத்தமிழ் என்னும் பெயரேற்றுள்ள இவ்விலக்கிய வகையைப் பாட்டியல் நூல்கள் பிள்ளைப்பாட்டு அல்லது பிள்ளைக்கவி எனும் பெயரால் வழங்குகின்றன. பிரபந்தத்திரட்டு மட்டுமே பிள்ளைத்தமிழ் என்னும் பெயரைச் சுட்டுகிறது.

**அறிவியலும் ஆன்மீகமும்**

புறவுலகில் தானாக நிகழும் நிகழ்வுகளை ஏன்? எதற்கு? எப்படி? என்ற வகையில் ஆராய்ந்து அதற்கான காரணத்தை சூத்திரங்களாக வெளியே கூறுவது

 Isbn Number: 978-93-91115-71-5

அறிவியலாகும். அறிவியலின் சக்தியைக் கொண்டு பல இயந்திரங்களை உருவாக்கி மனிதர்களால் பயன்படுத்த முடியும். ஆன்மீகம் என்பது நமது அகத்திலும், எண்ணங்களிலும் நிகழும் மாற்றங்களை ஏன்? எதற்கு? எப்படி? என்ற வகையில் ஆராய்ந்து தெளிவதாகும். இந்த எண்ணங்கள் குறிப்பிட்ட வடிவமோ உருவமோ இல்லாதது. ஆனால் இதன் சக்தியைக் கொண்டு தூய்மையான எண்ணங்களை உருவாக்க முடியும்.

அணுகுண்டு வீசுதல், கணிப்பொறியை உருவாக்குதல், சோதனைக் குழந்தைகளை உருவாக்கி பிறரை வியப்பூட்டச்செய்தல் என இவை மட்டுமே அறிவியல் அல்ல. மனிதனை மனிதனாக வாழ வைப்பதற்கும், மனிதனை பண்பு உள்ளவனாக வாழச் செய்யும் தெய்வ நம்பிக்கையும், வழிபாடும், பக்தியும், தியானமும் அறிவியல்தான். மனித மனத்தைப் பக்குவப்படுத்துவதிலும் ஒருநிலைப் படுத்துவதிலும் பக்தியும் தியானமும் பெரும்பங்கு வகிக்கிறது. அது ஒரு உளவியல் இயக்கமாகவும், உயிரியல் தேவையாகவும் உள்ளது. இவ்வாறாக மனித வாழ்வில் தினமும் நிகழக்கூடிய அத்துனை நிகழ்வுகளிலும் ஆன்மீகத்துடனான அறிவியல் இணைந்தே உள்ளது. கோயில் செல்லுதல், திருநீறு அணிதல், தியானம் செய்தல், மரங்களை வழிபடுதல் போன்ற அனைத்து

 Isbn Number: 978-93-91115-71-5

வழிபாட்டு முறைகளிலும் அறிவியல் காரணங்கள் புதைந்துள்ளன என்பதை உணர முடிகிறது.

**இறைவழிபாடு**

மனிதர்கள் தன் வாழ்வில் செய்யும் அன்றாட கடமைகளில் ஒன்று இறைவழிபாடாகும். எவ்வகை மதத்தைச் சார்ந்தவராயினும் இறைவழிபாடு செய்வது வழக்கம். அவ்வழிபாட்டை வீட்டிலேயோ அல்லது ஆலயங்களுக்குச் சென்றோ செய்வர். இதில் ஆலய வழிபாடே சிறந்தது என்பதை 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று அவ்வையும் குறிப்பிடுகிறார். இறைவனின் கருவறையில் உருவாகும் காந்த சக்தியானது மனிதனிடம் உள்ள எதிர்மறை எண்ணங்களை அழித்து நேர்மறை எண்ணங்களை உண்டாக்கும். அதன் காரணமாகவே எந்த நிகழ்வைத் தொடங்கும் முன்பும் அந்நிகழ்வு சிறப்பானதாக அமைய வேண்டி, இறை வழிபாட்டினைச் செய்வது இன்றியமையாதது என்பதை,

**அட்டும் திறலுடை அஞ்சன வண்ணன்**
**அல்லிருலகற்றி எல்மீட்டான்**
**ஆயர்சேரியில் அரும்பால் அயின்றான்**
**அவனடியினை தவவணங்குவாம்**
**(அருள்தரு. காப்புப் பருவம், பா. 1)**

 Isbn Number: 978-93-91115-71-5

என்று கூறுகிறார். ஏழ் உலகத்தையும் காவல் செய்பவர் திருமால்.பகைவரை அழிக்கும் ஆற்றல் உடையவர்.கரிய மைபோன்ற நிறமுடையவர். ஞாயிறு இல்லாமையால் வந்த இருளைப் போக்கிச் சூரியனை மீட்டவர். ஆயர்சேரியில் பால் உண்டவர்.அவருடைய திருவடியை வணங்கி இறை வழிபாடு செய்வதை அறியமுடிகிறது.

**இறைவழிபாட்டில் சந்திரன்**

இறைவழிபாட்டில் பல வகையான வழிபாட்டு முறைகள் உள்ளன. மனிதன் எவற்றையெல்லாம் கண்டு அஞ்சினானோ அவற்றை எல்லாம் வழிபடத் தொடங்கினான். மர வழிபாடு, நீர் வழிபாடு, சூரிய வழிபாடு, கோள்கள் வழிபாடு போன்றவற்றைச் செய்து வந்தான். இதில் சூரிய குடும்பத்தில் உள்ள கோள்களின் அடிப்படையிலேயே வாரத்தின் ஏழு நாட்களும் அமைந்துள்ளன. ராகு, கேது என்பன கோள்களாகக் கருதப்படவில்லை. இதிலிருந்தே நவக்கிரக வழிபாடு தோன்றியது. இன்றைய நிலையில் அனைத்து ஆலயங்களிலும் நவகிரகங்களை அமைத்து வழிபட்டு வருகின்றனர். இத்தகைய நவகிரகங்களில் ஒன்றான சந்திரனை வழிபடும் முறையும் வழக்கில் உள்ளது. சூரியனுக்கு அடுத்த நிலையில் சந்திரன் இடம்பெறுகிறது ‘**சந்திரா**’ என்னும் சொல் ‘**மின்னுதல்**’ அல்லது ‘**ஜொலித்தல்**’ என்ற வகையில் பொருள்


**Isbn Number: 978-93-91115-71-5**

கொள்ளப்படுகிறது. வேதகாலத்தில் வழிபாட்டில் இருந்த **'சோமா'** என்ற கடவுளோடு சந்திரனை இணைப்படுத்தப்படுகிறது. தேவர்கள் திருப்பாற்கடலை கடைந்தபோது அதில் ஜொலித்திடும் தன்மையுடன் தோன்றியதால் சந்திரன் என்ற பெயர் பெற்று வான மண்டலத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது என்று புராணங்கள் கூறுகின்றன **(ஒன்பான் கோள்கள்)**. இத்தகைய சந்திரனையும், பூங்கோதை அன்னையையும் ஒப்புமைப்படுத்தி,

> **அல்லகற்றும் அருந்தொழிலால் அல்கந்தி**
> **அயாவகற்றலால் அரமகளிர் உரவணங்கலால்**
> **அரட்டர்தாம் அஞ்சுதால் அயநத்தை அடைதலால்**
> **ஆதிவாரம் அடுத்தணைதலால்**
> **(அருள்தரு. அம்புலிப் பருவம், பா. 2)**

என்று குறிப்பிடுகிறார். அறியாமையாகிய இருளை அம்மை அகற்றுவாள். சந்திரன் இரவு நேரத்தில் உள்ள இருளை அகற்றுவான். அம்மையே இரவுப்பொழுதில் சோர்வை நீக்குவாள். சந்திரன் இரவு நேரத்தில் ஒளியைத் தந்து மக்களின் கவலை நீக்கும். தெய்வ மகளிர் அம்மையை வணங்குவர். தெய்வத்தன்மை பொருந்திய உலக மக்கள் பிறைச்சந்திரனை வணங்குவர். இவ்வாறு அம்மைக்கும் சந்திரனுக்கும் உண்டான ஒப்புமையை அறியமுடிகிறது.

 Isbn Number: 978-93-91115-71-5

## சந்திரன் வளர்தலும் தேய்தலும்

பொதுவாக சந்திரனின் வளரும் நிலையான பௌர்ணமியும், தேய்தல் நிலையான அமாவாசையும் ஒரு மாதத்தில் மாறி மாறி வரும். இந்த அமாவாசையிலும், பௌர்ணமியிலும் ஆலயங்களில் இறைவனுக்கு சிறப்பு பூசைகள் செய்து மக்கள் வழிபடுவர். இதை பக்தி அடிப்படையில்நோக்கும் போது, தட்சனின் 27 நட்சத்திரங்களான பெண்களை சந்திரன் மணமுடித்த நிலையில் அனைவரிடமும் சமமாக அன்பு செலுத்த வேண்டும் என்ற தட்சனின் கட்டளையிலிருந்து முரண்பட்டதன் விளைவாக தட்சனின் சாபம் பெற்று வளர்தல் தேய்தல் என்ற நிலையைச் சந்திரன் அடைந்ததாகக் கூறப்படுகிறது. இதை,

**தக்கனின் தக்க மருமகனாகத் தானிருந்தும்**
**தக்கன்விடு ஒக்க சாபம்**
**தாங்காமல் தன்கயிலைத் தகுபரமன்**
**தாளடைந்தாய் தளர்ச்சிநீங்க வளர்ச்சியாக்கினான்**
**(அருள்தரு. அம்புலிப் பருவம், பா. 4)**

என்று குறிப்பிடுகிறார். சந்திரனின் வளர்தல், தேய்தல் நிலையை அறிவியல் ரீதியாக நோக்கின், சூரியக் குடும்பத்தில் உள்ள அனைத்துக் கோள்களும் தன்னைத் தானேச் சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றுகிறது. நிலவு மட்டுமே தன்னைத்தானே சுற்றிக்கொண்டு

 Isbn Number: 978-93-91115-71-5

பூமியைச் சுற்றுகிறது. அவ்வகையில் சூரியனின் ஒளிக்கதிரைப் பெறும் சந்திரனின் ஒரு பகுதி பௌர்ணமியாகவும், ஒளி பெறாத பகுதி அமாவாசையாகவும் அமைகிறது.

**உடலில் சந்திர மண்டலம்**

சந்திரன் வளர்தலும் தேய்தலும் ஆகிய நிலையானது நமது உடலிலும் நிகழ்கிறது என்பதை திருமூலர் குறிப்பிடுகிறார். உடம்பு சூக்குமம், தூலம் என இருவகைப்படும். இவை யாவர்க்கும் உண்டு. உடம்பில் சந்திரக் கலையின் இயக்கத்தை காணுங்கால், இது தூல உடம்பில் இருந்து சூக்கும உடம்புக்கு ஏறியும், அதிலிருந்து தூல உடம்பில் இறங்கியும் நிகழும். இவ்வியக்கம் அண்டத்தில் உள்ள சந்திரன் வளர்பிறை தேய்பிறைகளில் முறையே வளர்வதும் தேய்வதும் போன்றதாகும் என்பதை,

**எய்தும் மதிக்கலை சூக்கத்தில் ஏறியே**
**எய்துவ தூலம்; இருவகைப் பக்கத்துள்**
**எழுதும் கலையே போல் ஏறி இறங்குமாம்;**
**துய்யது சூக்கத்துக் காலத்த காயமே**

**(திருமந்திரம், பா. 844)**

என்று கூறுகிறார். இவ்வாறு கோள்கள் இடையே மாற்றம் நிகழும்போது அதன் தாக்கத்தை உயிர்கள் மீது நிகழ்த்தும் என்பது நம்பிக்கையாகும். அந்தத்


Isbn Number: 978-93-91115-71-5

தாக்கத்திலிருந்து உயிர்கள் தங்களைக் காத்துக்கொள்ள இறை வழிபாட்டினை மேற்கொண்டனர். சிவ சிந்தையை உடையோருக்கு கோள்கள் நல்லனவே செய்யும் என்பதை திருஞானசம்பந்தர்,

**வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்**
**மிகநல்ல வீணை தடவி**
**மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தெ**
**னுளமே புகுந்த அதனால்**
**ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன்**
**வெள்ளி**
**சனிபாம் பிரண்டு முடனே**
**ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல**
**அடியா ரவர்க்கு மிகவே (திருஞானசம்பந்தர்,**
**தேவாரம், இரண்டாம் திருமுறை, 85வது**
**திருப்பதிகம், பா. 2388)**

என்று குறிப்பிடுகிறார். இவ்வாறாக மனிதர்கள் தனக்கு மீறிய ஒரு சக்தி உண்டு என்ற நம்பிக்கையில் இறை வழிபாட்டினை மேற்கொண்டு வந்தனர்.அத்தகைய சக்தியை அறிந்து கொள்ள அறிவியலை நாடினான். அறிவியலின் அபரிமிதமான வளர்ச்சியினால் விண்வெளிக்கும் சென்று வந்தான். அவ்வகையில் நிலவிலும் மனிதன் தன் கால் தடங்களைப் பதித்தான் என்பதை,

 Isbn Number: 978-93-91115-71-5

**விஞ்ஞான வளர்ச்சியால் வித்தகப் பேரறிஞர்**
**விண் வழியே நின்வழியடைந்து**
**விரைவாக விண்கலம் விட்டிறங்கி வியன்பரப்பில்**
**வேறுவேறு மாறுகாலிட்டனர்**
**மெய்ஞானம் வளர்த்திடும் மெல்லியலாம் இவள்**
**தன்னால்**
**மேல்ஞானம் தேர்ஞானியர்**
**மேன்மையருள் வீழ்ச்சியால் மெய்யில்லா**
**இருளகற்றி**
**மெய் வழியில் உய்வடைந்தனர்**
**(அருள்தரு. அம்புலிப் பருவம், பா. 6)**

என்று கூறி அறிவியல் வளர்ச்சியால் மிகச் சிறந்த அறிஞர்கள் ஆகாயத்தின் வழியே சந்திரனை அடைய வேகமாகச் செல்லும் விண்கலத்தை விட்டிறங்கி அகன்ற மேற்பரப்பில் வேறுவேறு விதமாக மாறுபட்ட நிலையில் கால் பதித்தனர் என்று குறிப்பிடுகிறார். ஆன்மீகத்தோடு தொடர்புடைய அனைத்து நிகழ்வுகளுக்கான காரணங்களையும் அறிவியலின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

**திருநீறு**

இறை வழிபாடு முடிந்ததும் திருநீறு பூசிக் கொள்ளும் வழக்கம் உண்டு. தொடர்ந்து வருகின்ற தீவினைகளை அழித்தலால் நீறாகும். ஒப்பில்லாத

செல்வம் தருதலால் விபூதி, வருத்தத்தைத் தரும் மலமாசினை நீக்குவதால் நிலைபெற்ற சாரமாகும். ஆன்மாக்களோடு குடியிருக்கும் அறியாமையை ஓட்டுவதால் பசிதமாகும். தொகுதியான பழிபாவங்களைப் போக்கிக் காப்பதால் காப்பு ஆகும். பசுக்களின் சாணத்தில் இருந்து கிடைக்கும் மேன்மை பொருந்திய நீறினை அணிந்து இறைவனை வணங்குகின்றனர்.

**திருநீறு பூசுதல்**

சைவச் சின்னங்களில் ஒன்றாக திருநீறு உள்ளது. இதன் மேன்மை கருதி 'நீறில்லா நெற்றி பாழ்' என்று அவ்வையும் குறிப்பிடுகிறார். திருநீறானது அலங்காரப் பொருளாய் மட்டுமன்றி பலவகையான நோய்களைப் போக்கும் மருந்தாகவும் அமைந்து உள்ளது. கூன் பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்க்க திருஞானசம்பந்தர்,

**மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு**
**சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு**
**தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு**
**செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆலவாயன்**
**திருநீறே (திருஞானசம்பந்தர், தேவாரம்,**
**இரண்டாம் திருமுறை, 66 வது பதிகம், பா. 2178)**

என்ற திருநீற்றுப் பதிகத்தைப் பாடியுள்ளார். மந்திரத்தை நினைத்த உடனே பயன் அளிப்பது போல் திருநீறு பூசிய

உடன் மேன்மை உண்டாகும். மேன்மை பொருந்திய சிவபெருமானின் சின்னமாகிய திருநீற்றை அணிந்தால் தேவர்களைக் காட்டிலும் மகிழ்ச்சியாக வாழலாம்.வெப்ப மிகுதியால் உண்டாகும் நோய்கள் நீங்க இப்பதிகத்தை பாராயணம் செய்யும் வழக்கமும் நடைமுறையில் உண்டு.

**திருநீறு வரலாறு**

உமாதேவியார் தமக்குப் பத்தினியாகத் தோன்ற வேண்டும் என்பதற்காக சிவபெருமான் பிரளய வெள்ளத்தை நீராகவும், அளவில்லாத அண்டங்களை மண்டபங்களாகவும், சமுத்திரத்ததால் சூழப்பட்ட பூவுலகை வேதிகையாகவும், அரி, பிரமன், இந்திரன் முதலிய தேவர்களை அவியாகவும், ஏனைய உயிர்களை மக்களாகவும் கொண்டருளி தமது நெற்றிக் கண்ணால் அக்னியை மூட்டி யாகம் செய்தருளினார். அந்த யாகத்தினின்று தோன்றியதே திருநீறு ஆகும் என்பதை,

**பூதியா முறைமையும் புகலக் கேடியாற்**
**கோதிலா மனுமுறைக் கொற்ற வேந்தனே**
**பாதியாள் சத்திபத் தினயின் வைகுற**
**வேதிலா ணவந்தபு மிணையில் வேதியன்**
**(சைவ பூஷண சந்திரிகை, ப. 63)**

என்று குறிப்பிடுகிறார். இத்தகைய சிறப்புப் பொருந்திய திருநீற்றைப் பிணியைப் போக்கும் மருந்தாகவும் உட்கொண்டனர்.


Isbn Number: 978-93-91115-71-5

## திருநீறு உட்கொள்ளும் மருந்து

திறுநீறு மேனிமேல் அணியப்படும் ஒரு பொருளாக மட்டுமின்றி, மருந்தாக உட்கொள்ளும் மேன்மையும் உடையது. அதனை உட்கொண்டால் அசுத்தங்களைப் போக்கி 72,000 நாடிகளுக்கும் வலிமை உண்டாகும். வாதத்தால் உண்டாகும் 81 வியாதிகளையும், பித்தத்தால் உண்டாகும் 64 வியாதிகளையும், கபத்தால் உண்டாகும் 215 வியாதிகளையும் நீக்கும். (சைவ பூஷண சந்திரிகை, ப. 58)

## திருநீற்றின் வகைகள்

### கற்பம்

கன்றுடன் கூடிய நோயற்ற பசுவின் சாணத்தைப் பூமியில் விழாது தாமரை இலையில் பிடித்து உருண்டையாக்கி, பஞ்ச பிரம்ம மந்திரங்களால் சிவாக்கினியில் எரித்து எடுப்பதே கல்பத் திருநீறு ஆகும்.

### அகற்பம்

சித்திரை மாதத்தில் பசுக்கள் நிற்கும் மந்தையில் சென்று உலர்ந்த. சாணத்தை எடுத்து ஓரிடத்தில் குவித்து உரலில் இட்டு இடித்து தூள் ஆக்கி சிவாக்கினியில் எரித்து எடுப்பதே அகற்பத் திருநீறாகும்.

### உபகற்பம்

சாணம் கிடைக்காவிடின் மரத்தோடு மரம் இணைந்து தானே உண்டாகிய அக்கினியிலே வெந்த


Isbn Number: 978-93-91115-71-5

சாம்பல் அல்லது செயற்கையாய் உள்ள செங்கல் சூளை முதலியவற்றில் விளைந்த சாம்பலை எடுத்து சிவாக்கினியில் எரிப்பது உபகற்பம் ஆகும்.

**அகற்பம்**

இடி விழுந்த இடத்தில் உண்டாகிய திருநீறும், மலையின் உச்சியிலும், பூமியிலும் யாதொரு காரணத்தினாலோ விளைந்த திருநீறாகும். (சைவ பூஷண சந்திரிகை, ப.73-75) நமது உடலின் நுண்ணிய நரம்புகளைக் கொண்டு, அதிக வெப்பத்தை உள்வாங்குவதும், வெளியிடுவதும் நெற்றிப்பகுதி ஆகும்.நெற்றியில் உள்ள வெப்பம் அதிகரிக்கும்போது சந்தனம் இடும் வழக்கமும், நெற்றிப் பகுதியில் நீர் அதிகமானால் திருநீறு இடும் வழக்கமும் பழங்காலம் தொட்டு இன்று வரை உள்ளதாகும்.தற்போது அனைத்து சிவாலயங்களிலும் வழிபாடு முடிந்த உடன் பக்தர்களுக்கு திருநீறு வழங்கும் வழக்கம் உண்டு. இவ்வாறாகத் திருநீறானது மேனி மேல் பூசும் பொருளாக மட்டுமின்றி நோய்களைப் போக்கும் மருந்தாகவும் செயல்பட்டதை அறியமுடிகிறது.

**ஏழு சக்கரங்கள்**

உடலானது எண்ணற்ற ஆச்சரியங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. அதன் இயங்கு சக்தி நம்மால் கற்பனை செய்து பார்க்கவே முடியாத அளவிற்கு

 Isbn Number: 978-93-91115-71-5

இருக்கிறது. மனித உடலினுள் கண்ணுக்குத் தெரியாமல் செயல்படுகின்ற ஏழு சக்கரங்கள் உடலிலுள்ள அனைத்து உறுப்புகளின் செயல்பாட்டினையும் தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன. சக்கரம் என்பது வட்டம் என்று பொருள் தரக்கூடியது. இது சமஸ்கிருத மொழியில் இருந்து தோன்றிய வார்த்தையாகும். இது உடலுக்கு தேவையான ஆற்றல் என்று பொருள்படுகிறது. இந்த ஏழு சக்கரங்கள் நமது உடலுக்குத் தேவையான ஆற்றலை வெளிப்படுத்தக்கூடிய மையமாகத் திகழ்கிறது. இது நமது உணர்வுகளை கட்டுப்படுத்த கூடியதாகவும் இயங்குகிறது. இந்த நம்பிக்கையானது இந்துதத்துவம் மற்றும் புத்த மதத்தினர் மூலம் உருவானதாக நம்பப்படுகிறது. மனோதத்துவப் பயிற்சியை மேற் கொள்வது யோகா மற்றும் தியானங்களில் ஈடுபடுவதன் மூலம் இந்தச் சக்கரங்களைக் கண்காணிக்க முடியும். ஒவ்வொரு சக்கரத்திற்கும் சில உடல் பாகங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (https://tamil.samayam.com/lifestyle/fitness/whar-are-the-7-chakras-in-our-body-in-tamil) அக்டோபர் 23, 2020.

ஆன்மீகத்தையும் அறிவியலையும் ஒப்பிட்டு நோக்கி அதிலுள்ள உண்மையை அறிவதே மனிதர்களின் இன்றியமையாத கடமையாகும். தியானம் செய்யும்போது மனம் அமைதி பெற்று உடலில் உள்ள சக்கரங்கள்

 Isbn Number: 978-93-91115-71-5

தூண்டப் பெற்று இறைச்சிந்தனை மேலோங்கும்.உடல் ஆரோக்கியம் மேம்பட்டு ஆற்றல் அதிகரிக்கும் என்பதை அறிய முடிகிறது. நமது உடலில் உள்ள இந்த ஏழு சக்கரங்களும் உடல் உறுப்புகளுடன் தொடர்புடையவை என்பதைத் தெளிவாக அறியமுடிகிறது. இதன் காரணமாகவே நமது முன்னோர்கள் தியானம், யோகம் மற்றும் இயற்கை உணவு போன்ற பயிற்சிகளை செய்வதை அன்றாட கடமைகளில் ஒன்றாகக் கொண்டு, நீண்ட நாட்கள் உயிர் வாழ்ந்தனர் என்பதை அறியமுடிகிறது.

**இறைவன் - கணிப்பொறி ஒப்பீடு**

ஆதி மனிதனிலிருந்து, மனிதன் அடைந்த நாகரீக நிலையே வேளாண்மையாக உருப்பெற்றது.வேளாண்மை வளரத் தொடங்கிய நிலையில் மனிதனின் வேலைகளைக் குறைக்க பொறிகளின் பங்கு அதிகமானது. பொறிகள் மனிதனின் உடல் உழைப்பை மட்டுமே குறைத்தது. ஆனால் மனிதன் தன் சிந்தனைக்கும், மூளைக்கும் உதவும் வகையிலும், தனது ஞாபகத்தையும், மூளையின் செயல் வேகத்தையும், செயல்திறனையும் அதிகரித்துக் கொள்ள ஒரு மாபெரும் இயந்திரப் பொறியாக கணிப்பொறி அமைந்தது.

**ஏறத்தாழ 1950 போல கணிப்பொறி உருப்பெற்றது. அன்றிலிருந்து அது உருவிலும்,**


Isbn Number: 978-93-91115-71-5

திறனிலும், வினையிலும், வேகத்திலும், கற்பனையையும் கடந்த வளர்ச்சியைப் பெற்று வருகிறது. முழுமையாகப் படைப்பு வகையைச் சார்ந்த பணி தவிர, முறைப்படி நடக்கும் சிந்தனைப் பணிகள் அனைத்தையும் இன்று மனிதன் ஒரு கணிப்பொறி மூலம் செய்ய முடியும்.அவன் செய்வதை விட பன்மடங்கு வேகத்தில் அது செய்யும். தன் நினைவுக் குதிரில் (Memory Storage) மிகச்சிறிய பருமனில் (Volume) அது பல ஆயிரம் ஏன் சில லட்சம் நூல்களில் உள்ள தகவல்களை வைத்துக்கொள்ள முடியும். அதை முழுமையாகத் தேடி தேவைப்படும் ஒரு தகவலை சில வினாடிகளில் கணிப்பொறி தந்துவிடும். கணிப்பொறி மனித மூளையினுடைய விரைவின், நினைவின் விஸ்வரூபம்; இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் ஏற்பட்ட பல முன்னேற்றங்களுக்கு, கணிப் பொறியின் துணையே காரணம். இன்றைய அறிவு வளர்ச்சியில் பல கண்டுபிடிப்புகளுக்கு உறுதுணையாக இருப்பது கணிப்பொறியே ஆகும். (வா. செ. குழந்தைசாமி -1985.)

 Isbn Number: 978-93-91115-71-5

கணிப்பொறியானது அறிவுப் பணிகளை மேற்கொள்ளும் ஒரு பொறியாகும்.இத்தகைய சிறப்புப் பொருந்திய கணினியை இறைவனுடன் ஒப்பிட்டு,

**…பைந்தமிழாம் திருமுறையின் பயன்மணக்கச்**
**செயல்மணக்க**
**ஆராரும் ஆரூரான் அரும்பக்கத்தின் ஆயிழையே!**
**(அருள்தரு. முத்தப்பருவம், பா. 8)**

என்று குறிப்பிடுகிறார். தற்காலத்தில் சிறப்பு மிக்க கணினியில் செம்மையான பல செய்திகளை ஒன்றாகச் சேர்த்து ஊட்டி வைத்து, வேண்டும் போது சிறந்த முறையில் கணினியின் பகுதிகளை விரல்களால் அழுத்தும் போது, சேர்த்து வைத்தவற்றில் வேண்டியவை தெளிவாக வெளிப்பட்டுத் தோன்றும். அதைப்போல மனிதன் செய்யும் நன்மை தீமைகளுக்கு ஏற்ப அன்னையானவள் அருள் செய்வாள் என்பதாகும். கணினியை இறைவனுடன் ஒப்பிட்ட இச்சிந்தனை சிறப்பானதாகும்.இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்தவர். அதைப்போல இன்று கணினி இல்லாத இடங்களே இல்லை என்னும் அளவில் கணினியின் தேவை பெருகிக் கொண்டு வருகிறது. கல்வி நிலையங்கள், நூலகங்கள், மருத்துவமனைகள், தொழிற்சாலைகள், வகுப்பறைகள், போன்ற அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டு வருகிறது என்பதை அறியமுடிகிறது. இத்தகைய கணினியை

நல்வழியில் பயன்படுத்தி மனித இனத்தை முன்னேற்ற வேண்டும்.

**முடிவுரை**

அறிவியலும் ஆன்மீகமும் ஒன்றோடொன்று இணைந்து பயணிக்கும் தொடர்வண்டிப் பாதை போன்றதாகும். இவற்றில் ஒன்றை நீக்கி ஒன்றை காண இயலாது. முன்னோர் கூறியுள்ள அனைத்து வழிபாட்டு முறைகளிலும் ஆன்மீகம் கலந்த அறிவியல் உண்மைகள் புதைந்து கிடக்கின்றன. அவற்றை என்னவென்று ஆராய்ந்து நோக்கும்போது அதன் உண்மைத்தன்மை புலப்படும். அன்றாட வாழ்வில் செய்யும் இறை வழிபாடுகளிலும் மனதை அமைதியாக்கும் தியானப் பயிற்சிகளிலும் நம்மைச் சுற்றியுள்ள இயற்கை பொருள்களிலும் ஆன்மீகத்துடனான அறிவியலே இணைந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

[1] டாக்டர் சுப. அண்ணாமலை. *திருமந்திரம் மூலபாட ஆய்வுப்பதிப்பு.* கலாசேத்திரா பதிப்பகம், சென்னை-600 041, 1997.

[2] திரு இரா. இராகவையங்கார். *பன்னிருபாட்டியல் மூலம்.* மதுரை தமிழ்ச்சங்கழத்திரா சாலை, மதுரை, 1951.

 **Isbn Number: 978-93-91115-71-5**

[3] நச்சினார்க்கினியம். *தொல்காப்பியம் (பொருளதிகாரம்)*. தமிழ்மண் பதிப்பகம், சென்னை-600 017.

[4] நா.கதிரைவேற்பிள்ளை. *சைவ பூஷண சந்திரிகை*, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2015.

[5] டாக்டர் வா. செ குழந்தைசாமி. *அறிவியல் தமிழ்*. பாரதி பதிப்பகம், சென்னை – 600017, 2006.

[6] முனைவர் ந.இரா.சென்னியப்பனார். *அருள்தரு பூங்கோதையன்னை பிள்ளைத்தமிழ்*. ஆசியன் அச்சகம், கோயம்புத்தூர் – 642023, 2005.

[7] பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன். *அடங்கன்முறை தேவாரத் திருப்பதிகங்கள்*. கங்கை புத்தக நிலையம், சென்னை -600017, 1998.

[8] முனைவர் வி.நாகராசன். *பத்துப்பாட்டு இரண்டாம் பகுதி (மூலமும் உரையும்)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை – 600098, 2017.

[9] முனைவர் கி.கந்தன். *ஒன்பான் கோள்கள்*. துறைத்தலைவர். சிற்பத்துறை, (https://www.tamilvu.org/tdb/titles_cont/scuipture/html/planets,htm)

[10] (https://tamil.samayam.com/lifestyle/fitness/whar-are-the-7-chakras-in-our-body-in-tamil) அக்டோபர் 23, 2020.

# Myth and Worship of the Deity Muthalamman

**Dr. K. Nagendran,** Assistant Professor of Tamil,
Sri.S.Ramasamy Naidu Memorial College, Sattur,
Virudhunagar District, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0003-2865-7832
**DOI: 10.5281/zenodo.7387278**

## Abstract

*Mythological stories of deities are told based on belief in folklore. A female deity called Muthalaman is famous in the Thirumangalam circle. This deity is mostly worshipped in all towns. The folk deities worshipped in small villages were people who lived with the people earlier. They have performed many rare deeds for the people and risen to the status of deities, and have risen to the heights by doing lowly deeds. Among them are murder, suicide, and natural death, after some time man has started worshipping them due to fear. They later evolved into folk deities. Based on the historical myths of that deity, the primary purpose of this article is to go to every town and collect the story of the deity and document and investigate the fate of a woman named Muthalamman.*

**Keywords:** Muthalamman Deity, Worship, Mythology.

## References

[1] Tamilannal. *Tolkappiyam Economics Volume - 1.* Manivaskar Publishing House, Chennai, 2003.

[2] Tamilannal, (U.A.). *Principles of Sangha Literary Opeedu Literature.* Meenakshi Bookstore, Chennai, First Edition-2008.
[3] Na. Vanamamalai. *Tamil folk songs*. New Century Book House, Chennai, First Edition-2005.
[4] Sakthivel.Su. Dr. *Folklore Study*. Manivaskar Publishing House, Chennai, 2003.
[5] Shanmugasundaram. Su. *Folk Natural Ideas.* Manikkavasakar Library, Chidambaram, 1981.

**Informant Name List**

[1] Go.Seethalakshmi, Age 65, M.Poththanathi.
[2] K. Nagajothi, Age 52, M. Bodthanadi.
[3] S. Mari, Age 75, Valaiyangulam.
[4] K.Pappammal, Age 80, M.Podthanadi.
[5] J. Bharatha, Age 65, M. Bodthanadi.
[6] Ra.Jesula, Age 65, Nagaiyapuram.
[7] P. Varadaraj, Age 58, Nagaiyapuram.

 Isbn Number: 978-93-91115-71-5

# முத்தாலம்மன் தெய்வ வழிபாடும் தொன்மக்கதைகளும்

**முனைவர் கி. நாகேந்திரன்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ எஸ்.இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர்,
விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0003-2865-7832**
**DOI: 10.5281/zenodo.7387278**

## ஆய்வுசுருக்கம்

*நாட்டுப்புறத்தில் நம்பிக்கையின் அடிப்படையிலே தெய்வத்தின் தொன்மைக் கதைகளைக் கூறுகின்றனர். திருமங்கலம் வட்டத்தில் முத்தாலம்மன் என்கிற பெண் தெய்வம் புகழ் வாய்ந்து. இத்தெய்வம் பெரும்பாலும் எல்லா ஊர்களிலும் வணங்கப்படுகின்றது. சிற்றூர்களில் வழிபடப்படும் நாட்டுப்புற தெய்வங்கள் முன்னர் மக்களோடு மக்களாக வாழ்ந்தோர் ஆவர். அவர்கள் மக்களுக்காக பல அரிய செயல்களைச் செய்து தெய்வ நிலைக்கு உயர்ந்தோர் ஆகவும், கீழ்த்தரமான செயல்கள் செய்து உயர்ந்தோராகவும் இருந்துள்ளனர். அவற்றுள் கொலை, தற்கொலை, இயற்கை மரணம் என்று இறந்தோர்களைச் சிலகாலம் கழித்து மனிதன் அச்சஉணர்வு காரணமாக வணங்கத் தொடங்கி இருக்கின்றான். அவர்கள் பின்பு நாட்டுப்புறத்*

*தெய்வங்களாக உருவாகினர். அந்த தெய்வத்தின் வரலாற்று தொன்மைக்கதைகளை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஊரிலும் சென்று தெய்வத்தின் கதையைச் சேகரித்து முத்தாலம்மன் என்ற பெண்ணுக்கு நடந்த விபரீத்தை ஆவணப்படுத்தி ஆராய்வது இக்கட்டுரையின் முதன்மை நோக்கம் ஆகும்.*

**குறிப்புச் சொற்கள்:** முத்தாலம்மன் தெய்வம், வழிபாடு, தொன்மக்கதைகள்.

**முன்னுரை**

பண்டைக் காலத்தில் தெய்வம் குறித்த இனக்குழு மக்களிடையே அச்சம் கலந்த உணர்ச்சியின் வெளிப்பாடாகவே பக்தி திகழ்ந்து இருப்பதையும், தெய்வங்களுக்குக் கீழ் படியும் மனநிலையும் மனிதனுக்கு உருவாயிற்று. இத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு தெய்வ வழிபாடு வளர்ச்சி அடையலாயிற்று. இன்று சிற்றூர்களில் வழிபடப்படும் நாட்டுப்புற தெய்வங்கள் முன்னர் மக்களோடு மக்களாக வாழ்ந்தோர் ஆவர். அவர்கள் மக்களுக்காக பல அரிய செயல்களைச் செய்து தெய்வ நிலைக்கு உயர்ந்தோர் ஆகவும், கீழ்த்தரமான செயல்கள் செய்து உயர்ந்தோராகவும் இருந்துள்ளனர். அவற்றுள் கொலை, தற்கொலை, இயற்கை மரணம் என்று இறந்தோர்களைச் சிலகாலம்

 **Isbn Number: 978-93-91115-71-5**

கழித்து மனிதன் அச்சஉணர்வு காரணமாக வணங்கத் தொடங்கி இருக்கின்றான். அவர்கள் பின்பு நாட்டுப்புறத் தெய்வங்களாக உருவாகினர். இதுபோல மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டத்தில் ஒவ்வொரு சிற்றூரிலும் வழிபட்டு வரும் முத்தாலம்மன் என்ற நாட்டுப்புற தெய்வத்தின் தோற்றத்தைப் பலமரபு தொன்மக் கதைகளின் துணைகொண்டு ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தொன்மம் விளக்கம்**

தொன்மம் என்பதற்குப் பல்வேறு அறிஞர்கள் விளக்கங்களும், விரிஉரையும் கொடுத்துள்ளனர். ‘தொன்மம்’ என்ற சொல் தமிழ்ச்சூழலில் மித் (**MYTH**) என்ற ஆங்கிலச் சொல்லிற்கு இணையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தொன்மம் பற்றி,

> **தொன்மை தானே சொல்லுங்காலை**
> **உரையொடு புணர்ந்த யாப்பின் மேற்றெ (தொல்., பொருள்., நூ. 538)**

என்று தொல்காப்பியர் சுட்டுவர்.

> **தொன்மை என்பது காலத்தால் பழமையானது; கருத்தால் சமயச் சார்புடையது; தலைமை மாந்தரும் தலைமைச் செயலும் தெய்வநிலையில் காணப்பெறுபவர், இது தலைமுறை தலை முறையாகச் சொல்லிவரும் மரபினை**

 **Isbn Number: 978-93-91115-71-5**

**உடையது; இதற்கு சடங்காச்சாரங்கள் இடம் பெறும், இயற்கை இகந்த கூறு இருக்கும். பண்பாட்டு வீரராய் படைத்திருப்பினும் தெய்வத்துடன் தொடர்புப்படுத்தியே கூறப்படும் மனித உணர்வின் ஆர்வத்தாலும் ஆற்றலாலும் போலிப் புனைவாகப் படைக்கப் பெற்ற இப்புராணக் கதைகளில், பழங்கால மக்களின் முழுமையான உணர்ச்சிகளும் அனுபவங்களும் காணப் பெறுகின்றன. (சங்க இலக்கிய ஒப்பீடு இலக்கியக் கொள்கைகள், ப.100)**

என்று தமிழண்ணல் கூறுகிறார். வரலாற்று உண்மை நிகழ்ச்சிகள் தான் சிறிது சிறிதாகத் தொன்மையாக உருப்பெறுகின்றன என்றும் கூறுகிறார். இதிகாசங்களில் வரும் கதை மாந்தர்களைக் கணக்கில் கொண்டே உண்மை நிகழ்ச்சிகள் தொன்மமாகின்றன என்ற நிலைக்கு வந்திருக்கிறார் தமிழண்ணல்.

**முத்தாலம்மன் தோற்றமும் சில குறிப்புகளும்**

முத்தாலம்மன் தெய்வம், பொதுவாக விஜயநகர பேரரசு தமிழகத்தில் கால் ஊன்றிய பின்புதான் உருவாகியிருக்க வேண்டும். அதற்கு முன்னால் தமிழகத்தில் கொற்றவை வழிபாடும் நடுகல் வழிபாடும் இருந்திருக்கின்றதைச் சங்க இலக்கியத்தின் வழியாக அறிய முடிகிறது. குறிப்பாக மக்களுக்கு வைசூரிய நோய்

அல்லது அம்மை நோய் தாக்கதலில் இவ்வழிபாடு சிறந்து இருக்கின்றது. இவ்வம்மனை வழிபடுபவர்கள் நாயக்கர், குயவர், வேளாளர், ரெட்டியார், தெலுங்கு ஐயங்கார், தெலுங்குச் செட்டியார், கன்னடச் செட்டியார், கன்னடக் கவுண்டர், பறையர், தெலுங்கு சக்கிலியர், தேவர், மூப்பர், நாவிதர் மற்றும் வண்ணார் ஆகியோராவார். (கோ.சீத்தாலட்சுமி, வயது-65, ம.போத்தநதி)

**முத்தாலம்மன் கதைச்சுருக்கம்**

தேவலோகத்தில் வாழ்ந்து வந்த சமதக்கனி முனிவர் - ரேணுகாதேவி இருவருக்கும் பிறந்த மகன் பரசுராமர். இருவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். சமதக்கனி முனிவர் தவம் செய்வது வழக்கம். ரேணுகாதேவி அம்மையார் தினமும் கங்கையில் தனது கணவனுக்காகக் களிமண்ணால் சுடாத மண்குடத்தைச் செய்து தண்ணீர் கொண்டு வருவது வழக்கமாக இருந்தது. ஒருநாள் ரேணுகாதேவி தண்ணீர் கொண்டு வரும்போது வானத்தில் கருடன் பறந்தது. ரேணுகாதேவியின் தண்ணீர் குடத்தில் தெரிந்தது. இதைப் பார்த்த ரேணுகாதேவி இவ்வளவு அழகா! என்று நினைத்த மாத்திரத்தில் மண்குடம் உடைந்து விட்டதாம். பின்பு கங்கைக்குப் போய் குடம் செய்யும் போது குடம் செய்ய வரவில்லை. இந்நிகழ்வு தவம் செய்து கொண்டிருந்த சமதக்கனி முனிவருக்குத் தெரியவர உடனே பரசுராமரை அழைத்து

 Isbn Number: 978-93-91115-71-5

உன் அன்னை கற்பு இழந்து விட்டாள். அதனால் அவளைக் கொன்று விடு! என்று உத்தரவிட்டார். உடனே பரசுராமர் தன் அன்னையைக் கொல்லுவதற்காக விரட்டினார். ஆனால், ரேணுகாதேவி பரசுராமர் கைக்குச் சிக்காமல் ஓடி ஒழிந்தார். இறுதியில் பறையன் வீட்டில் அடைக்கலமானார். இதை பரசுராமர் அறிந்து அங்கு சென்று ரேணுகாதேவியைக் கொல்ல முயன்றார். அதை பறையனும், பறையனின் மனைவியும் தடுத்தனர். தடுத்த அந்த இருவரையும் வெட்டிவிட்டு பின்பு தன் தாயையும் வெட்டினார் பரசுராமர். தன் தந்தையான சமதக்கனிமுனிவரிடம் சென்றார்.

சமதக்கனி முனிவர் உன் அன்னையைக் கொன்றுவிட்டாய் உனக்கு என்ன வரம் வேண்டும் என்றார். உடனே பரசுராமர் எனக்கு என் அன்னையே வேண்டும் என்று வரம் கேட்டார். முனிவர் தன் கமண்டலத்தில் உள்ள தண்ணிரைத் தெளித்தால் போன உயிர் திரும்ப வரும் என்றார். உடனே பரசுராமர் அந்த இடத்திற்குச் சென்று ரேணுகாதேவியின் உடலில் உள்ள தலையைப் பறையனின் மனைவி உடலிலும், பறையனின் மனைவியின் தலையை ரேணுகாதேவியின் உடலிலும் மாற்றி மாற்றி வைத்து தண்ணிரைத் தெளித்தார். உடனே உயிர் வந்தது, இருவருமே மகனே! மகனே! என அழைத்தார்கள். பின்பு மூவர் தலையையும்


Isbn Number: 978-93-91115-71-5

சமதக்கனி முனிவர் ஒன்று சேர்த்து முத்தலையம்மன் என்று கூறினார். பின்பு மக்களுக்கு நன்மை செய்வாயாக! என்று அருளினார். அவ்வாறே முத்தலையம்மன் வழிபாடு தோன்றியது. இதன்மூலம் பரசுராமர் கதை புனையப்பட்டுள்ளது. (கி.நாகஜோதி, வயது-52, ம.போத்தநதி)

**கதை இரண்டு**

ஒரு காலத்தில் தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்த பறையன் நெசவுத்தொழில் செய்து வந்தான். அவனுக்கு வேளாளர் நூல் நூற்றுத் தந்தனர். வேளாளர் குடும்பத்தில் முத்தம்மா என்ற பெண் அன்று நூல் நூற்கவில்லை. இதை அறிந்த முத்தம்மாவின் அன்னை இன்றைக்கு நூல் நூற்கவில்லையே? உன் பற புருசன் வந்து நூல் கேட்டா எதைக் கொடுக்கிறது? என்று திட்டிவிட்டாள். இதைக் கேட்ட முத்தம்மாள் என்னைப் பறையனுக்கு மனைவியாக்கி விட்டாளே என் அன்னை என்று நினைத்து பறையனுடனே நடந்து சென்றாள். ஏன் என்னுடன் வருகிறாய் என்று கேட்டதற்கு நடந்ததைக் கூறினாள் முத்தம்மாள். பின்பு எடுத்துச் சொன்னான், அவள் கேட்கவில்லை. ஊர் மந்தையில் குடிசை அமைத்து குடியேற்றினான் பறையன். பின்பு பறையனுக்கு சுமையா இருக்கக் கூடாது என்று நினைத்து தூக்கிட்டு இறந்து

 Isbn Number: 978-93-91115-71-5

விடுகிறாள். இப்படியும் ஒரு கதை கூறப்படுகின்றது. (ஜே.பாரதா, வயது-65, ம.போத்தநதி)

**கதை மூன்று**

இரண்டாம் கதையின் இறுதியில் பறையனின் மனைவி முத்தம்மாவை பறையன் வைத்து இருக்கின்றான் என நினைத்து, பறையன் மனைவியும் குழந்தையும் தற்கொலை செய்து கொல்லுகின்றனர். இதை அறிந்த முத்தம்மா தானும் தற்கொலை செய்து கொள்ளுகின்றாள். (கு.பாப்பம்மாள், வயது-80, ம.போத்தநதி).

**கதை நான்கு**

நாயக்கர் வீட்டில் பிறந்த பெண் குயவன் மகனைக் காதல் செய்தாள். இந்த செய்தி நாயக்கருக்குத் தெரிந்த உடனே நாயக்கர் சாம்புகனிடம் என் மகளைக் கொன்று விடு இல்லாவிட்டால் எங்கள் சாதிக்கு அவமானம் என்று சொல்லி கட்டளையிட்டார். பின்பு சாம்பகன் அந்த பெண் தண்ணீர் எடுத்து வரும் வழியில் அடித்து கொன்று விடுகிறான். இப்படியும் ஒரு கதை சொல்லப்படுகிறது. (ரா.ஜேசுலா, வயது-65, நாகையாபுரம்)

**கதை ஐந்து**

நாயக்கர் ஒருவருக்கு முத்தம்மா என்ற பெண் பிள்ளை இருந்தது. முத்தம்மாவை நன்கு சீராட்டி வளர்த்தார். திடிரென்று நாயக்கருக்குப் பஞ்சம் வந்துவிட்டது. வயல், காடு விளையவில்லை. ஆடு, மாடு

பலுகவில்லை. இதை அறிந்த நாயக்கர் சோசியரிடம் சோசியம் பார்த்தராம். சோசியக்காரன் உன் பெண்பிள்ளையின் ராசி உனக்கு சரியில்லை. அதனால் பெண்பிள்ளையை கொன்றுவிடு என்று கூறிவிட்டான். இதை நம்பிய நாயக்கர் தன் மகளை வேளாளரிடம் கொடுத்து கொல்ல சொல்லுகிறார். வேளாளர் சம்புகனிடம் கொடுத்து இந்த பெண்ணைக் கொன்றுவிடு என்று கூறுகின்றார். சம்புகன் ஊர் எல்லையில் கொன்று புதைத்து விடுகின்றான். சிலகாலம் கழித்து ஊர்மக்கள் அம்மை நோயால் இறந்துவிடுகின்றனர். அப்போது ஒரு பெண் அருள் வந்து ஆடி என் பெயர் முத்தம்மா என்றும், என்னுடைய தந்தை என்னைக் கொன்று விட்டார் என்றும் நடந்த கதையைக் கூறுகிறாள். என்னை வணங்கினால் நோய் வராமல் தடுப்பதாகவும் உறுதி கொடுக்கிறாள். பின்பு ஊர்மக்கள் இப்பெண்ணை முத்தலம்மன் என்று வணங்கி வருகின்றனர். (ப.வரதராஜ், வயது-58, நாகையாபுரம்)

**கதை ஆறு**

தமிழ்நாட்டிற்கு வடக்கில் ஆந்திராவில் இருந்து பஞ்சம் பிழைப்பதற்காக ஒரு கிழவி ஏழு பெண்களுடன் ஒரு ஊரை வந்து அடைந்ததாம். அந்த ஊரில் ஒரு முதலாளியிடம் வேலை கேட்டதாம். வேலை இல்லை என்று சொன்னான் முதலாளி. வேலை கொடுக்கவில்லை

 Isbn Number: 978-93-91115-71-5

என்றாலும் பரவயில்லை எனக்கு கஞ்சியாவது ஊத்துங்க என்று கேட்டதாம். முதலாளி அவரின் மனைவியிடம் இவங்களுக்குக் கஞ்சி ஊத்தி அனுப்பு என்று சொன்னராம். அந்த அம்மாவும் கோழி குழம்பு ஊத்தி கேப்பக்கழி வைத்து உணவு பரிமாறியதாம். பின்பு வேற யார் வீட்டுக்குப் போனால் கஞ்சி ஊத்துவாங்க என்று கிழவியும் அந்த ஏழுபெண்களும் கேட்டார்கள். இந்த ஊரில் ஐயர் வீட்டுக்கு போனால் கஞ்சி ஊத்துவாங்க என்று முதலாளி மனைவி சொன்னதும் அவர்கள் ஐயர் வீட்டுக்குச் சென்றார்கள். அங்கே அவர்களிடம் சோறு கேட்டார்கள். ஐயர் வீட்டம்மா ஆல இலை போட்டு, சோறு வச்சு நெய் ஊற்றி, பருப்பு குழம்பு ஊத்தி, அகத்திக்கீரை வச்சு உணவு பரிமாறியது. உணவு உண்ட பின் ஊர் மரத்தின் அடியில் சென்று தூங்கினார்கள். அந்த பக்கமாக வந்த ஒருவன் ஏழு பெண்களில் ஒரு பெண்ணை மானபங்கப் படுத்த நினைத்தான். இதை அறிந்த பெண்கள் சத்தமிட்டு அவனை விரட்டிவிட்டனர். பின்பு கிழவியும் அந்த ஏழுபெண்களும் கிணற்றில் விழுந்து இறந்து விடுகின்றனர். இப்படியும் ஒரு கதை கூறப்படுகின்றது. (ச.மாரி, வயது-75, வலையங்குளம்)

முத்தலம்மன் பெயர் கால வளர்ச்சியில் மருவி முத்தாலம்மன் என்று தோன்றியது. வணங்கி வருகின்றனர். ஆறுகதைகளிலும் முத்தாலம்மன் இறப்பு

 Isbn Number: 978-93-91115-71-5

செய்தி ஒரு பொது செய்தியாகவே அமைந்துள்ளது. காரணங்கள் மட்டும் வேறுபடுகின்றன. இனி இக்கதைகளில் சில வினாக்கள் எழுப்புகின்றன.

- முதல் கதையில் முத்தாலம்மன் - பரசுராமர் புராணக்கதையைக் கூறுகின்றனர். மூன்று பேர் இறந்ததைச் சமதக்கனி முனிவர் ஒன்று சேர்த்து முத்தலை என்று கூறுகிறார். கற்பிழந்த மனைவியை சமதக்கனி முனிவர் பரசுராமரை விட்டு கொல்லச் சொல்லுவதும், பின்பு அவரே ரேணுகாதேவியைத் தெய்வமாக்குவதும் இங்கு பொருந்ததக்கதா? ஏனெனில் நாட்டுப்புற தெய்வம் வேறு, புராண தெய்வம் வேறு.
- பழமையான சமூகத்தில் தொழில் அடிப்படையில் பிரிவினை உண்டு. அப்படி இருக்க பறையன் இனத்தைச் சேர்ந்த ஒருவர் நெசவுத்தொழில் செய்து வருவதாகவும், உயர் சாதியினரான வேளாளர் நூல்நூற்றுத் தந்ததாகவும் கூறுவது பொருந்துமா? என்ற வினா எழுகின்றது. ஏனென்றால் அந்தக் காலக்கட்டத்தில் நெசவுத்தொழில் சோழியச் செட்டியார், கன்னடச் செட்டியார் மற்றும் தெலுங்குச் செட்டியார் ஆகிய சாதியினருக்கு உரிய தொழிலாகும். உயர் சாதியினர் சண்டை வரும் போது, தன்


**Isbn Number: 978-93-91115-71-5**

சாதியினரை - தம் உறவினரை, தாழ்த்தப்பட்ட சாதியுடன் தொடர்புபடுத்தி திட்டுவது நாட்டுப்புற மரபுகளில் ஒன்றுஉன் பறப்புருசன் என்று திட்டியதற்கு அவள் வருத்தப்பட்டு அவனுடனே செல்லுதல் என்பது அந்த காலகட்டத்தில் சாத்தியமாக இருக்குமா என்ற கேள்வி எழுகிறது. இதன் அடிப்படையில் இதன் தொடர்ச்சியை இன்றளவும் நாட்டுப்புற மக்களிடம் காணலாம்.

- நான்காம், ஐந்தாம் கதையில் தன் மகளைச் சம்புகன், பறையனிடம் கொடுத்து கொலை செய்த நிகழ்வு இங்கு எடுத்துக்காட்டுகின்றன. இப்படியிருப்பின் அங்குள்ள மக்கள் எப்படி இந்த கொலையை அறிந்து சும்மா இருந்தனர். ஆண்களுக்குத்தான் கொலை வெறி என்றால் அவளைப் பெற்ற தாய் எப்படி மனம் உவந்து ஏற்றுக் கொண்டாள் என்ற கேள்வி இங்கு எழுகிறது.
- ஆறாவது கதையில் கிழவி இறந்ததும் ஒருவனால் மானபங்கப்படுத்த முயன்ற பெண் இறந்ததும் சரி. ஆனால் மீதமுள்ள ஆறு பெண்கள் இறந்தது பொருந்துமா?

இவற்றையெல்லாம் பார்க்கும் போது முத்தாலம்மனின் இறப்பு, இயற்கை அல்லது தற்கொலை என்று

ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மாறாக சாதிய அடிப்படையில் கொலை செய்து, பின்பு தெய்வமாக மாறியிருக்கலாம் என்று தோன்றுகின்றது.

> **சாதிய அமைப்பை எதிர்த்து மனிதநேயம், காதல் என்ற உணர்வுகள் வேறுபட்ட சாதியைச் சேர்ந்தவர்களிடையே உறவை ஏற்படுத்தினால் அதனை அழிக்கவும், சமூகத்தின் மாறுதலை விரும்பாத உயர்ந்த வர்க்கம் முற்படுகின்றது என்று நா.வானமாமலை கூறுகிறார். (தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள் ப. 16)**

நாட்டுப்புறத்து மக்களின் காதலின் சாதிய மறுப்பு சண்டைகள் இன்றளவும் நடந்து கொண்டு இருக்கின்றதைச் செய்தித்தாள், தொலைக்காட்சி, வானொலி மற்றும் திரைப்படத்தில் காண்கின்றோம். இதைப்போல் தான் முத்தாலம்மன் இறப்பில் தோன்றியிருக்க வேண்டும் என்று கருத முடிகிறது.

**வழிபாடு**

முத்தாலம்மன் வழிபாடு ஊருக்கு ஊர் வேறுபடுகின்றது. ஆனால் படையல் வைப்பதிலும் உருவச்சிலை செய்வதிலும் ஒரளவு ஒற்றுமை காணப்படுகின்றது.

**சிறப்பு வழிபாடு**

பெரும்பாலும் வைகாசி மாதம் சிறப்பு வழிபாடு

 Isbn Number: 978-93-91115-71-5

நடைபெறுகின்றது. ஒரு சில ஊர்களில் சித்திரை, புரட்டாசி, ஆனி மற்றும் ஐப்பசி போன்ற மாதங்களில் நடைபெறுகின்றது. வைகாசி மாதம் வளர்பிறை புதன்கிழமை ஊர் மந்தை கோயில் வாசலில் கெடுகட்டப்படுகின்றது (பேசி முடிவெடுத்தல்). அன்று குயவரிடம் முன்பணம் தரப்படுகின்றது.

சிறப்பு வழிபாட்டிற்கு ஒரு வாரத்திற்கு முன்பு நல்லநேரம் பார்த்து, ஊர்மக்கள் ஒன்று சேர்ந்து மண் எடுத்து, ஊர்ப் பொதுவிடத்தில் உள்ள குயவர் வீட்டில் வைத்து பிசைந்து முத்தாலம்மன் உருவச்சிலை செய்ய ஆரம்பிக்கின்றனர். சிலை செய்து வெயிலில் காய வைத்து, அந்தச் சிலைக்குப் புளியமுத்தை உடைத்து நனைய வைத்து, அதை அரைத்துப் பசைபோல் காய்ச்சி சிலையின் மேல் தடவுகின்றனர். முத்தாலம்மன் மண்சிலையைச் சுடுவது கிடையாது. பின்பு வர்ணம் பூசுகின்றனர். சிறப்பு வழிபாடு அன்று கொட்டு மேளத்துடன் ஊர் மக்கள் ஒன்று சேர்ந்து உருவச்சிலை செய்த குயவர் வீட்டிற்குச் செல்கின்றனர். குயவர் சிலையை வெள்ளை வேட்டியால் மறைத்து, தெய்வத்தைக் கண் திறக்கும் இடத்திற்குக் கொண்டு செல்கின்றார். அங்கு சிலையை இறக்கி வைத்து சேவலின் கால் அறுத்து இரத்தத்தைச் சிலையின் நெற்றியில் வைத்து பின்பு மாலை, நகைகள், பட்டு போன்றவற்றை

 **Isbn Number: 978-93-91115-71-5**





அணிவிக்கின்றனர். தேங்காய், பழம், வைத்து வழிபாடு நடைபெறுகின்றது. பின்பு முத்தாலம்மன் சிலையைக் குயவர்கள் தூக்கிச்சென்று கோயிலில் வைக்கின்றனர். அதன் பின்னர் செம்மறி ஆட்டுக் கிடாய் பலியிடப்படுகின்றது. அவரவர் வீட்டில் செய்து வைத்திருந்த படையலைக் கொட்டு மேளத்துடன் கோயிலில் சிலையின் முன்பு வைக்கின்றனர். ஊர் மக்கள் அனைவரும் பொங்கல் வைத்து வழிபடுகின்றனர். மறுநாள் மாலை வேளையில் ஊர் மக்கள் அனைவரும் மஞ்சள் நீர் கொண்டு வந்து ஊற்றுகின்றனர்.

குயவர் அம்மன் சிலையைத் தூக்கிக்கொண்டு கோயிலை மூன்று முறை சுற்றிவந்து ஊர் எல்லையில் இறக்கி வைக்கின்றார். அந்தச் சமயத்தில் ஊர் நாட்டாண்மைக்காரர் வீட்டிலிருந்து செய்து கொண்டு வந்த படையலைக் குயவர் அம்மனுக்கு ஊட்டி விடுகின்றார். வழிபாடு செய்து அனைத்து மக்களுக்கும் திருநீறு தருகின்றார். அதைத் தொடர்ந்து அம்மன் சிலையைப் பின்புறம் தள்ளிவிட்டு வந்து விடுகின்றார். அனைத்து மக்களும் சிலையை உடைக்கின்றனர். கோயிலில் வந்து வழிபாடு செய்கின்றனர். பறையர் குடியிருக்கும் ஊர்களில் பறையர்தான் சிலையை உடைக்கின்றனர். ஓடு கிடாய் வெட்டுகின்றனர். அதாவது செம்மறிக் கிடாயை ஓடவிட்டு வெட்டிப்பலி

 Isbn Number: 978-93-91115-71-5

இடுகின்றனர். இவர்கள் இல்லாத ஊர்களில் வேற்றுசாதி மக்கள் செய்கின்றனர். இவ்வாறு வழிபாடு நடைபெறுகின்றது. (ஆ.முத்துகருப்பன், வயது-65, அலப்பலச்சேரி)

**முத்தாலம்மன் கோயில் அமைப்பு**

ஒவ்வொரு ஊரிலும் ஊர் மந்தையில் முத்தாலம்மன் கோயில் அமைந்துள்ளது. சில கோயில்களில் சிறு மேடையும் வெட்ட வெளியில் அமைந்துள்ளது. சில கோயில்களின் சிறு மேடையில் ஓலைக் கூரையிட்டு அமைந்துள்ளது. சில ஊர்களில் இராச கோபுரத்துடன் கோயில் அமைந்துள்ளது. முத்தாலம்மன் கோயில் கிழக்குத் திசையை நோக்கியே உள்ளது.

**முத்தாலம்மன் உருவம்**

முத்தாலம்மன் சிங்கத்தின் மேல் அமர்ந்து, வலதுகால் மடக்கி, இடது கால் மேல் வைத்து, நான்கு கைகள் வைத்து, சிரித்த முகத்துடன் பெரிய பெண் போலக் காணப்படுகின்றது. சில ஊர்களில் சிறிய பெண் போலக் காணப்படுகின்றது. ஒரு சில ஊர்களில் அவரவர் சாதியைப் போன்றே அம்மனுக்கு அலங்காரம் செய்யப்படுகின்றது. சான்றாக சௌடார்பட்டி முத்தாலம்மன், நாயக்கர் வீட்டுப் பெண்போல் கழுத்தில் கருகமணி அணிந்திருக்கும். மீனாட்சிபுரம்,

 Isbn Number: 978-93-91115-71-5

சித்திரெட்டிபட்டி, பொட்டிப்புரம், இந்த மூன்று ஊர் அம்மனும் ரெட்டியார் வீட்டுப் பெண்போல் காதில் கம்மல், மூக்குத்தி அணிந்திருக்கும். வலையப்பட்டி அம்மன், மூப்பர் வீட்டுப் பெண் போல் காதில் சவுடி அணிந்து காணப்படும். முத்துப்பட்டி அம்மன் பிற மலைக்கள்ளர் வீட்டுப் பெண்போல் தண்டட்டி அணிந்து காணப்படும். இப்படி ஒவ்வொரு ஊரிலும் மாறுபாடு காணப்படுகின்றது.

**படையல்**

தெய்வத்தின் முன்பாக பல உணவுப் பொருட்களை வைத்து வழிபடும் முறை படையல் ஆகும். படையல் என்ற சொல்லுக்குத் தெய்வத்தின் முன் படைக்கும் பொருள், நெய்வேய்தியம் என்று அகாரதி பொருள் தருகின்றது. படையல் காலம்காலமாக நம் முன்னோர்கள் படைத்து வழிப்பட்டதைப் போல இன்றளவும் நாட்டுப்புற மக்கள் படைத்து வழிபடுகின்றனர். உழவர்கள் தங்கள் நிலத்தில் விளைந்த தானியத்தை முதலில் இறைவனுக்குப் படைத்து வணங்கிய பின்னர் தான் விற்பனைக்கு எடுத்துச் செல்லும் வழக்கம் இன்றளவும் உள்ளது. தங்களுக்கு உதவி செய்த இறைவனுக்கு நன்றி கூறும் விதமாகப் படையல் படைப்பதை வழக்கமாகக் கொண்டு உள்ளனர். படையலை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

- பொதுவானப்படையல்
- சிறப்புப்படையல்

**பொதுவானப்படையல்**

பொதுவானப்படையல் என்பது பொதுவாக அனைத்து தெய்வத்திற்கும் படைக்கப்படுகின்ற படையல் ஆகும். **சான்று:** சர்க்கரை பொங்கல், தேங்காய் வைத்து அனைத்து தெய்வத்திற்கும் படைக்கின்றனர்.

**சிறப்புப்படையல்**

தெய்வத்தின் சிறப்பு கருதி அந்த தெய்வத்திற்கு மட்டும் படைக்கின்ற சிறப்புப்படையல் ஆகும். பொதுவானப்படையலில் இருந்து சற்று வேறுபட்டவையாக இப்படையல் கருதப்படுகின்றது. சிறப்புப்படையல் இரண்டு வகைப்படும். அவை, 1. சைவப்படையல், 2. அசைவப்படையல் என்பன ஆகும்.

**சைவப்படையல்**

சைவப்படையல் என்பது எந்தவித மாமிசமும் கலவாமல் சைவமாகப் படைப்பது. இவை மூன்று வகைப்படும். அவை, 1. தானியப்படையல், 2. பழங்கள் படையல், 3. சமைத்தப்படையல் ஆகும்.

**தானியப்படையல்**

தானியப்படையல் என்பது தானியங்களை இறைவன் முன்பு படைப்பது. உழவர்கள் தங்கள் நிலத்தில் விளைந்த தானியங்களை அப்படியே

 Isbn Number: 978-93-91115-71-5

படைப்பது. அதில் சிலவற்றை கலந்து படைப்பது என்றும் கூறலாம். சான்றாக: திருமங்கலம் ம.போத்தநதி கிராமத்தில் மூர்த்தியம்மன் என்னும் தெய்வத்திற்கு பாசிப்பருப்புடன் சர்க்கரை கலந்து படையல் படைக்கின்றனர். பெருமால்சாமி என்ற தெய்வத்திற்குக் கம்பை ஊற வைத்து முலைக்கட்டி படையலாகப் படைக்கின்றனர். இதனை கம்பரிசி என்றும் கூறுகின்றனர். திருமங்கலம் வட்டம் ம.புளியங்குளம் கிராமத்தில் பாம்பல அம்மாள் என்ற தெய்வத்திற்குக் கடலைப்பருப்பு, கருப்பட்டி இரண்டையும் தேங்காய் தண்ணீர் விட்டு பிசைந்து படைக்கின்றனர். திருமங்கலம் வட்டம் குராயூர் என்ற ஊரில் ஐயனாருக்கு நெற்கதிர், சோளக்கதிர் மற்றும் நெத்து போன்ற காட்டில் விளைந்த முதல் தானியத்தை அறுத்து கோயிலில் வாசலில் கட்டி படைக்கின்றனர்.

**பழங்கள் படையல்**

நாட்டுப்புறத்து மக்கள் தங்களுக்குக் கிடைத்த பழங்களைப் படைத்து இறைவனை வழிபடுகின்றனர். இவற்றில் முயக்கிமாக வாழைப்பழம் அனைத்து தெய்வத்திற்கும் படைக்கின்றது. இதை தெலுங்குப் பழமொழியில்,

**மச்சி மச்சி சாமி யன்னி**

**மரி பண்டுகு ஏடிசி**

 **Isbn Number: 978-93-91115-71-5**

**மாதியவால் சாமி மட்டும்**

**அட்டி பண்டுகு ஏடிசி (வே.பார்வதி, வயது-85)**

சக்கிலியர் தெய்வம் மட்டும் வாழைப்பழத்திற்கு அழுவதாகக் குறிப்பிடுகின்றனர். இதில் இருந்து சாதி வேற்றுமை அந்த காலத்தில் இருந்து வந்ததை அறிய முடிகின்றது. திருமங்கலம் வட்டத்தில் உள்ள முத்தாலம்மன், காளியம்மன், வெயில் உகந்த அம்மன் மற்றும் மாரியம்மன் போன்ற பெண் தெய்வங்களுக்குப் புளியம்பழம், அதனுடன் கருப்பட்டி, சுக்கு, ஏலம் இவற்றை நீரில் ஊற வைத்து பானக்கரம் என்ற நீரைப் படைத்து வழிப்படுகின்றனர். இதைபோல் இந்த வட்டத்தில் உள்ள அனைத்து தெய்வத்திற்கும் எலுமிச்சைப் பழத்தைப் படைத்து வழிப்படுகின்றனர்.

**சமைத்தப்படையல்**

தானியங்கள், பழங்கள் போன்றவற்றை சமைத்துப் படைக்கும் படையல்கள் சமைத்தப்படையல் எனப்படும். திருமங்கலம் காட்டுமாரியம்மனுக்கு நெல்அரிசி சோறு, காய் போட்ட சாம்பார், இரண்டு வகை கூட்டு, இரண்டு வகை பொரியல், அப்பளம் மற்றும் பாயசம் போன்றவற்றைப் படைத்து வழிப்படுகின்றனர். திருமங்கலம் வட்டத்தில் உள்ள முத்தாலம்மன் தெய்வத்திற்குப் பிராமணர், சைவப்பிள்ளைமார் போன்ற சாதியினர் நெல்அரிசி சோறு, கத்தரிக்காய், முருங்ககாய்

 Isbn Number: 978-93-91115-71-5

புளிக்கூட்டு, அகத்திக்கீரை அவியல், பருப்புகுழம்பு போன்றவற்றை படைக்கின்றனர்.

**கழி (சக்கட்டி)**

கேழ்வரகு, கம்பு, அரிசி போன்றவற்றை அரைத்துப் பின்பு மாவாகக் கரைத்துக் கொதிக்கின்ற நீரில் ஊற்றி கிளறிக் கொண்டே இருத்தால் கெட்டியாகும். பின்பு இறக்கி அதை உண்பர். இவை போத்தநதி, புதுப்பட்டி, வில்லூர் போன்ற ஊர்களில் முத்தலாம்மனுக்குப் படைக்கப்படுகின்றன.

**அன்னும் முன்னும் சக்கட்டி**
**ஆடி அன்னைக்கும் சக்கட்டி இந்த**
**முத்தாலம்மா பொங்க சாட்டினா**
**மூன்றுநாளும் சக்கட்டி (நா.கிருஷ்ணன், வயது - 68, ம.போத்த நதி)**

என்ற பழமொழி வழி அறியலாம்.

**முடிவுரை**

மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டத்தில் ஒவ்வொரு சிற்றூரிலும் வணங்கப்படும் முத்தாலம்மன், சுருங்கச்சொல்லின் கொலையில் தோன்றிய தெய்வம் என அறியமுடிகின்றது. தமிழகம் முழுவதும் உள்ள நாட்டுப்புறப்புறத் தெய்வங்களை நுணுகி ஆராய்ந்தால் பல்வேறு புதிய உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும் என்பதை உறுதியாகக் கூறலாம்.

 **Isbn Number: 978-93-91115-71-5**

## குறிப்புகள்

[1] தமிழண்ணல். *தொல்காப்பியம் பொருளதிகாரம், தொகுதி-1*. மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2003.

[2] தமிழண்ணல், (உ.ஆ.). *சங்க இலக்கிய ஒப்பீடு இலக்கியக் கொள்கைகள்*. மீனாட்சி புத்தக நிலையம், சென்னை, முதற்பதிப்பு-2008.

[3] நா.வானமாமலை. *தமிழர் நாட்டுப்புறப்பாடல்கள்*. நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2005.

[4] சக்திவேல்.சு. டாக்டர். *நாட்டுப்புற இயல் ஆய்வு*. மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2003.

[5] சண்முகசுந்தரம்.சு. *நாட்டுப்புற இயல் சிந்தனைகள்*. மாணிக்கவாசகர் நூலகம், சிதம்பரம், 1981.

## தகவளாலர்கள் பெயர் பட்டியல்

[1] கோ.சீத்தாலட்சுமி, வயது 65, ம.போத்தநதி.

[2] கி.நாகஜோதி, வயது 52, ம.போத்தநதி.

[3] ச.மாரி, வயது 75, வலையங்குளம்.

[4] கு.பாப்பம்மாள், வயது 80, ம.போத்தநதி.

[5] ஜே.பாரதா, வயது 65, ம.போத்தநதி.

[6] ரா.ஜேசுலா, வயது 65, நாகையாபுரம்.

[7] ப.வரதராஜ், வயது 58, நாகையாபுரம்.

[8] வே.பார்வதி, வயது-85, நாகையாபு

 **Isbn Number: 978-93-91115-71-5**

# Vettuvan Temple

**Dr. S. Mahesh Pandi,** Assistant Professor of Tamil, JP College of Arts and Science, Tenkasi – 627852, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-0883-570X**
**DOI: 10.5281/zenodo.7387291**

## Abstract

*Tamil's artistic works are of great character. Temples are the epitome of science and knowledge. They are a timeline that records the history with layered records of religions. In this way, Kazhugumalai, bearing the old name of Nellsura Nadu, amazes us with its knowledge, riddles and stories. Biodiversity in monoliths, Pandya's treasure trove, Ellora of the south, scientists' enigma. Kazhugumalai is home to many famous places like a fine art sculpture gallery, stone art sculpture gallery, Karungai Koller's art gallery, stone art painting, and a temple built upside down. Kazhugumalai is part of the Vettuvan temple. This article examines the structure of the temple, its history and its art.*

**Keywords:** Vettuvan Temple, Kazhugumalai, Structure, History.

## References

[1] C.M. Ganapathi. *Kalugumalai Vettuvan Temple*. Sangath Tamil Publishing House, Thirunelveli, 2016.
[2] *The Times Of India Samayam*. A Temple Built Upside Down, Kalugumalai Cutter's Temple Represents The Amazing Architecture Of The Tamils, 05-12-2019.
[3] *Kalugumalai Vettuvan Temple*. Dinamani, 03-05-2015.
[4] Tamil Nadu arasu Tholiyal Thagaval Palakai.
[5] Father Son Affection Frozen the Temple. Vikatan, 24-11-2018. Pothu Nalam History of Kalugumalai Cutter's Temple.

[6] Spirituality. Kalugumalai Vettuvan Temple. 15-04-2020.

[7] Manimegala Na.Mu. Venkataswamy Nattar Avvai Duraisamipillai Tirunelveli South Indian Saivasisdhanta Literature Scoiety, 1994.

[8] Abidhana Chintamani A Singharavelu Mudaliar Faculty Education Service, Chennai, 2022.



Isbn Number: 978-93-91115-71-5

# வெட்டுவான் கோயில்

**முனைவர் சு. மகேஷ் பாண்டி,** உதவிப்பேராசிரியர், ஜெ.பீ கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தென்காசி– 627852, தமிழ்நாடு**,** இந்தியா**.**
**ORCiD: https://orcid.org/0000-0003-0883-570X**
**DOI: 10.5281/zenodo.7387291**

## ஆய்வுச்சுருக்கம்

*தமிழனின் கலைப் படைப்புகள் அளப்பரிய தன்மை உடையவை. கோயில்கள் விஞ்ஞானம் மற்றும் மெய்ஞானத்தின் விரவலாக காட்சியளிக்கின்றன. சமயங்களின் அடுக்குப் பதிவுகளை கொண்ட வரலாற்றினை பதியமிடும் காலச்சுவடாகத் திகழ்கின்றன. அவ்வகையில் நெற்சுர நாடு என்ற பழம் பெயரைத் தாங்கி நிற்கும் கழுகுமலையானது தன்னகத்தே அறிவுப் புலப்பாட்டையும் புதிர்களையும் மற்றும் கதைப் பொதிவுகளையும் கொண்டு நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது. ஒற்றைக்கல்லில் எழுந்த உயிரோவியம், பாண்டியரின் கலைக்கருவூலம், தென்னகத்தின் எல்லோரா, விஞ்ஞானிகளின் புதிர், நுண்கலைச் சிற்பக்கூடம், கருங்கைக் கொல்லனின் கலைக்கூடாரம், கல்லிலே கலை வண்ணம், ஒற்றைக்கற்றளி, தலைகீழாகக் கட்டப்பட்ட கோயில் என்ற அடுக்கடுக்கான புகழாரங்களைக் கொண்டது கழுகுமலையின் ஒரு*

*பகுதியான வெட்டுவான் கோயில். அக்கோயிலின் அமைப்பினையும் அதன் வரலாற்றினையும் கலை நுட்பத்தையும் ஆய்ந்து தெளிவதாக இக்கட்டுரை அமைகின்றது.*

**குறிப்புச் சொற்கள்:** வெட்டுவான் கோயில், கழுகுமலை, அமைப்பு, வரலாறு.

**முன்னுரை**

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், சங்கரங்கோவில் செல்லும் பகுதியிலிருந்து 22 கி.மீ தொலைவில் கழுகுமலை என்னும் ஓர்ஊர் உள்ளது. அவ்வூரில் உள்ள 300 அடி உயரமுள்ள குன்றுப்பகுதியை முருகனின் குடைவரைக்கோயில், சமணப்பள்ளி, வெட்டுவான்கோயில்ஆகியவை நிறைத்துள்ளன.

கழுமலையின் கிழக்குப் பகுதியில் 100 அடி உயரமுள்ள மலையை வெட்டி எடுத்து நம் கண்ணிற்கு விருந்தளிக்கும் கலைக்களஞ்சியமாக வடிவெடுத்துள்ளது வெட்டுவான் கோயில். இக்கோயில் சாளுக்கிய, இராஷ்டிரக்கூட, பல்லவ மற்றும் பாண்டியர்களின் கட்டிடக்கலை கலவையைக் கொண்டுள்ளது. இதனை, Cutter’s Temple (வெட்டியவன் கோயில்), எனவும் Sculptor’s Temple (சிற்பியின் கோயில்) எனவும் மொழிபெயர்த்து அழைக்கின்றனர். நார்வே நாட்டில்

“குஸ்தாவ் விஜிலென்ட்” என்ற சிற்பி தனியொருவனாக கருங்கற்களில் கற்சிலைகள் நிறைந்த ஒரு பூங்காவையே உருவாக்கினான். அதேபோல் இந்தியாவின் தென்கோடியில் திண்மையான பாறையில் முதல் பாண்டிய பேரரசு காலத்தில் தமிழன் தன் தனித்திறமையை உலகறிய பறைசாற்றியுள்ளான்.

**கோயில் வரலாறு**

தளவாய்புரச் செப்பேடும், வெட்டுவான் கோயில் கல்வெட்டும், பெர்சி பிரவுன், ஸ்டெல்லா கிராம்ரிஷ், ஜேம்ஸ் பெர்க்குஷன் போன்ற வெளிநாட்டு அறிஞர்களும். சி.சிவராமமூர்த்தி என்ற தமிழ்நாட்டு அறிஞரும் வெட்டுவான் கோயிலின் காலகட்டத்தை கி.பி 8 அல்லது 9ஆம் நூற்றாண்டு என்று வரையறை செய்கின்றனர். கி.பி 8ஆம் நூற்றாண்டில் பராந்தக நெடுஞ்சடைய வரகுணன் எனும் பாண்டிய மன்னன் காலத்தில் அதிமதுர பாண்டிய மன்னர்களால் திராவிடக் கட்டுமான கலையமைப்பில் கோவில் வெட்டப்பட்டது.

**வெட்டுவான் கோயில் கட்டமைப்பு**

ஏறத்தாழ 48 அடி நீளம், 30 அடி அகலம், உயரம் கொண்ட செவ்வக வடிவிலான ஒற்றைக்கல் மலையில் வெட்டுவான் கோயில் எழுப்பப்பட்டுள்ளது. கடினமான கருங்கல் பாறையை “ப” வடிவில் சுமார் 7.50 மீட்டர் ஆழத்தில் சதுரமாக வெட்டி எடுத்து, அதன் நடுப்பகுதியில்

 **Isbn Number: 978-93-91115-71-5**

ஒற்றைப் பாறையில் கோவைவிலை மேலிருந்து கீழாக மிக நுட்பமாக செதுக்கியுள்ளனர். இக்கோயில் விமானம், அர்த்த மண்டபம், திருச்சுற்று ஆகிய மூன்று பகுதிகளை கொண்டுள்ளது. கலைப்பணி முற்றுப்பெறாத கருவறை. எந்தவொரு கலைப்புலமையும் இடம்பெறாத, தொடங்கப்படாமல் விட்ட அர்த்த மண்டபம். திருச்சுற்று நடை மாளிகை ஆகியவற்றை தோற்ற களமாகக் கொண்டு நம் கண்முன் விரிகிறது கருங்கல் தச்சனின் கலைப்பெட்டகமான வெட்டுவான் கோயில்.

**கணிதமும் கட்டிடக்கலையும்**

கோயிலின் கருவறையின் உட்புறம், 9 அடி நீளம்; 9 அடி அகலம், 9 அடி உயரம் கொண்ட கனச்சதுர வடிவுடையது. கருவறையின் வெளிப்புற அளவு முறையே, 30 அடி நீளம், 30 அடி அகலமுடைய கனச்சதுர வடிவுடையது. கருவறைப் பகுதியில் கட்டிடக் கலைப்பணியோ, சிற்பக் கலைப் பணியோ எதுவும் இடம்பெறவில்லை. கருவறையின் நுழைவாயிலைத் திருவணுக்கவாசல் என்று சாசனங்கள் பகர்கின்றன. இவ்வாயில் ஐந்தரையடி உயரம், இரண்டே முக்காலடி அகலம் கொண்டது. கருவறைக்கும் முகமண்டபத்திற்கும் இடைப்பட்ட பகுதி அர்த்த மண்டபம் என்றழைக்கப்படுகிறது. அர்த்த மண்டபத்தின் உட்புறம், பதினோரடி மூன்று அங்குல நீளம், எட்டடி ஆறங்குல

 Isbn Number: 978-93-91115-71-5





அகலம், ஏழடி ஆறங்குல உயரம் கொண்டு கனச்செவ்வக வடிவில் குடையப்பட்டுள்ளது. அர்த்த மண்டபத்தின் வெளிப்புறம் 18 அடி நீளம், 24 அடி அகலம், 15அடி உயரம் கொண்டு கட்டமைக்கப் பட்டுள்ளது. அர்த்த மண்டபப் பகுதியிலும் கட்டிடக் கலைப்பணியோ, சிற்பமோ எதுவும் தொடங்கப் பெறவில்லை.

மலையை மேலிருந்து கீழாக வெட்டி எடுக்கப்பட்டு உருவாக்கப்பட்ட வெட்டுவான் கோயிலுக்கும் மலைக்கும் இடைப்பட்டப் பகுதியாக திருச்சுற்று நடைமாளிகை உள்ளது. வெட்டியெடுக்கப் பட்ட மலைச்சுவற்றிற்கும் வெட்டுவான் கோயிலுக்கும் இடையே நாற்புறமும் 9 அடி அகலம் 30 அடி உயரம் கொண்ட செதுக்கப்பட்ட கற்பாறை கல்தச்சனின் வலிமையையும் தொழில் திறனையும் கண்டு நம்மை மலைக்கச் செய்கிறது. ஒரு பாறையில் செதுக்கப்பட்ட இக்கோயிலை இன்று இருக்கும் நவீனத் தொழில்நுட்பமான Diamond Cutting Tools கொண்டு கூட செதுக்க முடியாத வடிவமைப்பினை அன்றே தமிழன் செதுக்கி விட்டான். இஃது உலகில் இருக்கும் அனைத்து விஞ்ஞானிகளுக்கும் புரியாத புதிராவே உள்ளது. தமிழனின் கணிதம், கட்டிடக்கலை, தொழில் நுட்பம் முதலிய அறிவுப்புலப்பாடு நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது.

 Isbn Number: 978-93-91115-71-5

## வெட்டுவான் கோயில் விமானம்

வெட்டுவான் கோயில் விமானம் மூன்று தளங்களைக் கொண்டுள்ளதால் இதனை “முத்தள விமானம்” என்றும் தாமரைக்கலசம், எண்கோணச்சிகரம், எண்கோணத் தூண்வரிசை, எண்கோணத் தளமேடை, நாற்கோண வேதிகை, மேல், கீழ் மற்றும் மையக்கவிகை மாடங்கள் ஆகிய எட்டு அங்கங்களை உடையதால் இதனை, “அஷ்டாங்க விமானம்” என்றும் அழைக்கின்றனர். சிகரம், மகாநாசிகை, பட்டை, கிரிவலம், நந்தி, யாழி வரிசை, கொடிக்கருக்கு, நாசிகை மேலும் கும்ப பஞ்சரங்கள், கோஷ்ட பஞ்சரங்கள், தேவகோஷ்டங்கள், கர்ணக்கூடுகள், சாலைப்பத்தி, கொடிமங்கை போன்ற அமைப்புகளும் விமானத்தை அழகு செய்கின்றன. சிவன், பிரம்மா, விஷ்ணுவாகிய மும்மூர்த்திகளின் சிற்பங்கள், தெய்வ மங்கையரின் சிற்பங்கள், அதிதேவதையர் சிற்பங்கள் மற்றும் திசைத்தேவியர் போன்ற தெய்வச் சிற்பங்களும், யானைச் சிற்பங்கள், யாளிச்சிற்ப வரிசை, பூதகணச் சிற்ப வரிசை, சிங்கமுகச் சிற்ப வரிசை போன்ற பிற சிற்பங்களும் இடம் பெற்று வெட்டுவான் கோயிலை கலைகளால் நிறைக்கின்றன. இதனைத் தவிர, நகை அலங்காரங்கள், மகர வாசிகைத் தோரணங்கள், கர்ணக் கூடுகள் ஆகியவையும் கலை அழகினை மெருகூட்டுகின்றன.

 **Isbn Number: 978-93-91115-71-5**

விமானம் கட்டடக்கலையின் அமைப்பினை அடுக்கடுக்காக நிரப்பி வெட்டுவான் கோயிலின் கலைநுட்பத்தை மிளிரச் செய்கிறது.

**தாமரை மொட்டுக் கலசம்**

தாமரைப் பொய்கையில் நீர்ப்பூத்த மலர் போல வெட்டுவான் கோயிலின் விமானப்பகுதி அமைக்கப்பட்டுள்ளது. மலரின் வெளிப்புற இதழ்கள் சிகரத்தில் விரிந்தும், உட்புற இதழ்கள் மொட்டுப்போன்று குவிந்தும், கல்லில் கலசம் செதுக்கப்பட்டிருத்தல் வேண்டும். கலசம் இருந்த இடத்தில் கால்மீட்டர் விட்டமும் கால் மீட்டர் ஆழமும் உடைய குழியொன்று காணப்படுகின்றது. கலசம் கயவர்களால் உடைத்தெறியப் பட்டிருக்க வேண்டும் என்ற உட்காட்சி நம்மை இழப்பினை ஈடுகட்ட இயலாத தவிப்பில் ஆழ்த்துகிறது. தாமரைக்கலசம் வடமொழியில் “பத்ம ஸ்தூபி” என்றும் ஆங்கிலத்தில் “Lotus Stupi” என்றும் அழைக்கப்படுகிறது.

**எண்கோணச் சிகரம்**

தாமரைக் கலசத்தைத் தாங்கி நிற்கும் சிகரம் 8 அடி உயரம், 8 அடி விட்டம் கொண்டு அரைவட்ட வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இதனை தமிழில் “எண்பட்டைச் சிகரம்” என்றும் வடமொழியில் “அஷ்டதிக்சிகரா” என்றும் ஆங்கிலத்தில் “Octangonal Dome” என்றும் விளிப்பர். விரிந்த தாமரை இதழை அடுத்து வட்ட


Isbn Number: 978-93-91115-71-5

வடிவமான காசுமாலை போன்ற அலங்காரம், கழுத்துமாலை, நெத்திச் சுட்டி போலும் ஆபரண வடிவிலான தோரணத்தொங்கல், மற்றும் கர்ணக் கூடுகளும் சிங்கமுக அமைப்பும், மகரவாசித்தோரணம் போன்ற எழில் கொஞ்சும் அலங்கார அமைப்புகள் நம்மை எல்லையில்லா இன்பம் அடையச்செய்கின்றன.

**எண்கோணத் தூண்வரிசை**

எண்கோணச் சிகரத்தின் கீழ்ப்பகுதி எண்கோணத்தூண் வரிசை ஆகும்.இரண்டடி உயரம், இரண்டடி அகலம், அரையடிக் கனம் கொண்ட தூண்களை உடையது எண்கோணத்தூண் வரிசை. இஃது ஆபரண அலங்காரங்களைக் கொண்டுள்ளது. சிலப்பதிகாரம் "பவளத்திரக்கால்" என்றும் மணிமேகலை, "பசும்பொன்தூணத்து" என்று குறிப்பிடும் தூண்களைப் போன்று எண்கோணத்தூண் வரிசை காட்சிப்படுத்தப் பட்டுள்ளது. இவை தமிழர்களின் செல்வ வளமையைக் காட்டுகின்றது.

**எண்கோணத் தளமேடை**

எண்தூண் வரிசையைத் தாங்கி நிற்கும் பகுதி எண்கோணத் தளமேடை ஆகும். 32 அடி சுற்றளவும் 10 அங்குல உயரமும் கொண்டு எண்கோண வடிவில் கட்டமைக்கப்பட்டுள்ளது தான் எண்கோணத் தளமேடை ஆகும்.


Isbn Number: 978-93-91115-71-5





**நாற்கோண வேதிகை**

எண்கோணத் தளமேடைக்கு கீழ் உள்ள பகுதி நாற்கோண வேதிகை ஆகும்.வேதிகை பற்றிய முழு விவரங்களை அபிதான சிந்தாமணி குறிப்பிட்டுள்ளது. புறம் மொழியும் பழந்தமிழ் இலக்கியமான புறநானூறு வேதிகையைத் "தெற்றி" என்று மொழிகின்றது. வெட்டுவான் கோயில் வேதிகை 12 அடி நீள அகலமும் 9 அங்குல உயரமும் கொண்ட சதுர வடிவிலான வேதிகை ஆகும். இதனைத் தமிழில் "சதுரவேதிகை" என்றும் ஆங்கிலத்தில், "Quadrate Vedi, என்றும் Square vedi" என்றும் அழைப்பர்.

வேதிகையின் நான்கு மூலைகளிலும், நடுப்பகுதியிலும் யானை முகச் சிற்பங்கள் அழகூட்டுகின்றன. வேதிகையின் கிழக்கில் உமாசகித சுகான மூர்த்தியும், தெற்கில் மிருதங்க தட்சிணா மூர்த்தியும், வடக்கில் நான்முகன், மேற்கில் நரசிங்கப் பெருமாள் ஆகிய திருவுருவங்களைக் கொண்ட கலைப்படைப்பாகத் திகழ்கிறது. வேதிகை. வேதிகையின் அழகினை மேலும் அழகூட்டுவதாய் வரிசையாக யாளிச் சிற்பங்கள் அடுக்கி நிற்கின்றன.

**மாடங்கள்**

ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்படும் கட்டிடங்களை மாடங்கள் என்றழைப்பர். நம் பழந்தமிழ்


Isbn Number: 978-93-91115-71-5

இலக்கியங்கள் மாடங்களை, வேயாமாடம், சுதை செய்மாடம், எழுநிலை மாடம், நெடுநிலை மாடம், உயர்மாடம், இறையுயர் மாடம், மலைபுரை மாடம், கோடுயர் மாடம், பிறங்குநிலை மாடம், கண்பொரு மாடம் என்று அடைமொழியால் அழகுற சொல்லடைவு படுத்துகின்றது. அவ்வகையில் வெட்டுவான் கோயில் மேற்கவிகை மாடம், கீழ்க்கவிகை மாடம் மையக் கவிகை மாடம் என்ற மும்மாடங்களை விமானத்தின் அங்கமாகக் கொண்டுள்ளது.

எண்கோணச் சிகரம், எண்கோணத் தூண் வரிசை, எண்கோணத் தளமேடை ஆகிய மூன்று முக்கிய அங்கங்களைக் கொண்ட பகுதியாக வெட்டுவான் கோயிலின் விமான அமைப்பு கட்டமைக்கப் பட்டுள்ளமையால் இதனை “எண்கோணமாடம்” என்றும் “எண்தூண் மாடம்” என்றும் ஆங்கிலத்தில் “Octastyle” என்று மொழிகின்றனர். மூன்று தளம், மூன்று மாடம், ஆகியவற்றோடு எண்கோண மாடத்தையும் இணைத்தால் நான்கு மாடங்கள் ஆகின்றது. எனவே, வெட்டுவான் கோயிலை நான்மாடக்கோயில் என்று அழைத்தலும் தகும்.

**கவிகை மாடங்கள்**

தாழ்வாரம் போன்று கவிந்த அமைப்பினை உடைய இறவாரத்தைக் கவிகைமாடம் என்று கூறுவர்.

 Isbn Number: 978-93-91115-71-5

வெட்டுவான் கோயில் விமானத்தில், வேதிகைக்குக் கீழே, கருவறைக்கு மேலே இடைப்பட்டப் பகுதியில், ஒன்றன் மேல் ஒன்றாக மும்மாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**மேற்கவிகை மாடம்**

மாடங்கள் கீழிருந்து மேலாக எண்ணப் படுகின்றன. மூன்றாவது மாடம் மேற்கவிகை மாடமாகும். 17 அடி நீளம், அகலம், 3 அடி உயரம் கொண்ட சதுரவடிவிலான் இறையுருவம் பொறித்த மாடமாக மேற்கவிகை மாடம் அமைக்கப்பட்டுள்ளது. நான்முகனின் திருவடிக்கு கீழே வடபுறத்தில் கிழக்கு மேற்காக எதிரெதிரே சிறிய அளவிலான இருயானைச் சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது. திக்கெட்டும் தேவியர் சிற்பங்கள், நெத்திச்சுட்டித் தொங்கல்கள், எண் கர்ணக்கூடுகள் என்று மேற்கவிகை மாடம் மேன்மைமிகு தோற்றம் கொண்டுள்ளது.

**மையக்கவிகை மாடம்**

வேதிகைக்குக் கீழ் அமைந்துள்ள இரண்டாம் மாடம் மையக்கவிகை மாடம் ஆகும். 23 அடியும் 4 அங்குல நீளமும், அதே அளவிலான அகலமும் கொண்ட சதுர வடிவிலான மாடம் மையக்கவிகை மாடம் ஆகும். இதில் கோஷ்ட பஞ்சரங்கள், கும்ப பஞ்சரங்கள், தேவகோட்டங்கள் உள்ளன. தேவகோட்டத்தை இளமங்கையர் தாங்கி நிற்கும் புடைப்புச் சிற்பமும்


Isbn Number: 978-93-91115-71-5

வடிக்கப்பட்டுள்ளது. கும்ப பஞ்சரத்தைத் தாங்கியும் எழுந்து நிற்பது போலவும் சிங்க உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. திசைத்தேவியரும், நெத்திச்சுட்டித் தொங்கல்களும் கர்ணக்கூடுகளும் மையக்கவிகை மாடத்தை அரண் செய்வதாக கவின்மிகு கலைகள் தோய்ந்துள்ளன.

**கீழ்கவிகை மாடம்**

கருவறையின் மேலுள்ள பகுதியாகவும் விமானத்தின் முதல் தளமாகவும் கீழ்க்கவிகை மாடம் திகழ்கிறது. இஃது 27 அடி, 9 அங்குல நீளமும் அதேயளவுள்ள அகலமும் கொண்ட சதுர வடிவிலான மாடமாக கீழ்கவிகை மாடம் திகழ்கின்றது. எவ்வித கலைப்பணியும் இன்றி வெறிச்சோடிக் காணப் படுகின்றது.

**கர்ணக்கூடுகள்**

வெட்டுவான் கோயில் விமானத்தினை அணிசெய்வதாய் கர்ணக்கூடுகள் அழகுற அமைக்கப் பட்டுள்ளன. வட்ட வடிவிலான சன்னல், சிறிதும் பெரிதுமான சிவலிங்கங்கள், கீர்த்திமுகச் சிற்பங்கள் போன்றவை கர்ணக்கூட்டை நிறைவு செய்கின்றன.

**யாளிச் சிற்ப வரிசை**

வேதிகைக்கும் மேற்கவிகை மாடத்திற்கும் இடையே வேதிகையைத் தாங்கி நிற்பதுபோல,

 Isbn Number: 978-93-91115-71-5

வேதிகையின் நான்கு மூலைகளிலும் நான்கு யானை முகச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. யானைமுகச் சிற்பங்களுக்கிடையே நான்கு பக்கங்களிலும் 47 ஆண், பெண் யாளிச்சிற்பங்கள் வீரமுகத்துடன் கோபக்கனல் தெறிக்க சீறிப்பாய்ந்து செல்வது போல அணிவகுத்து நிற்பது கண்கொள்ளாக் காட்சியாக உள்ளது.

**பூத கணச்சிற்பங்கள்**

சிவனின் பணியாளர்களாக பூதகணங்கள் செயல்படுகின்றனர். மேற்கவிகை மாடத்திற்கும் மையக்கவிகை மாடத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் மாடத்தின் நான்கு பக்கங்களிலும் இசைக்கருவிகளை இசைக்கின்ற பல்வேறு பூதகணங்களின் அணிவரிசை கல்லில் களிநடனம் புரிகிறனர். வெட்டுவான் கோயில் விமானத்திலும் அர்த்த மண்டபத்திலும் என மொத்தம் 61 பூதகண வரிசைகள் வெட்டுவான் கோயிலை அழகுற காட்சிப்படுத்துகின்றனர். ஒவ்வொரு பூதகணங்களும் வெவ்வேறு செயல்களை செய்வது போன்று தனித்தன்மையுடன் விளங்குகின்றனர். பூதகணங்கள் குள்ளமாகவும் பருமான உடலையும் உருண்டையான முகத்தையும் கூர்மையான பற்களையும் கொண்ட உருவமாக காட்சியளிக்கின்றனர்.

**சிங்கமுகச் சிற்ப வரிசை**

மையக்கவிகை மாடத்தில் கும்ப பஞ்சரங்களைத்

 **Isbn Number: 978-93-91115-71-5**

தலையில் தாங்கி நிற்பதாக சிங்கமுகச் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. மையக்கவிகை மாடத்திற்கும் கீழ்க்கவிகை மாடத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் வடக்கு மற்றும் மேற்கு பக்கத்தில் என மொத்தம் 58 சிங்கமுகச் சிற்பங்கள் வெட்டுவான் கோயில் வீரவுணர்வையும் விலங்கினப் பதிவையும் பதியமிட்டுள்ளது. மாடத்தின் தெற்குப் பக்கமும் கிழக்குப் பக்கமும் சிங்கமுகச் சிற்பம் செதுக்கும் பணி முற்றுப்பெறாததனைக் காணமுடிகின்றது.

**சிற்பங்களும் அணிகலன்களும்**

வெட்டுவான் கோயில் விமானத்தில் வீற்றிருக்கும் உன்னத படைப்புகளானச் சிற்பங்கள் அலங்காரங்களால் பொழிவுபெறுகின்றன. சிலப்பதிகாரத்தில் காணப்படும் அணிகலன்களின் பட்டியலோடும் குற்றாலக்குறவஞ்சி குறிப்பிடும் வசந்தவல்லியின் அழகோடும் சிற்பங்கள் பொருத்தப்பாடு உடையனவாகத் திகழ்கின்றன. தலையணிகள், காதணிகள், கை அணிகள், இடையணிகள், காலில் அணியும் அணிகலன்கள், தோள் வளைகள், உடைகள் போன்றவை சிற்பங்களை அலங்கரிக்கின்றன. மெய்ப்பாடுகளும் அழகும் நிரம்பி வழியும் சிற்பங்கள் என்று நம்மைக் கண்கொட்டாமல் பார்க்கத் தூண்டுகின்றன. வெட்டுவான் கோயிலின் கவின்மிகு சிற்ப அலங்காரங்கள். பண்டைய காலமக்கள்


Isbn Number: 978-93-91115-71-5

அணிகலன் செய்வதில் நேர்த்தியாக பணிபுரித்த திறத்தையும் செல்வக் கொழிப்பையும் இச்சிற்பங்கள் நம்முன் காட்டி தமிழர்களின் வாழ்வியலை உய்த்துணரச் செய்கின்றன.

**சிற்பங்களின் கலைக்கூடாரம்**

வெட்டுவான் கோயில் நுண்கலைகளின் சிற்பக் கூடாரம் ஆகும்.சிற்பக்கலை கட்டிடவியலை, ஆங்கிலத்தில் 'Architectonics' என்று அழைப்பர்.மனம் ஒருமைப்பட்டு திரண்ட அழகுக்கலை சிற்பக்கலை ஆகும். வினையான்மையும் பயிற்சியும் உடல் திண்மையும் சிற்பக்கலை உருவாக்கத்திற்கு இன்றியமையாதவை ஆகும்.பார்வைப்பதிவுகளும் கதையாடல்களும் வரலாற்று நிகழ்வுகளும் சிற்பக்கலையை இன்றளவும் இயக்கமடையச் செய்கின்றன. எல்லோராவிலுள்ள கைலாயநாதர் கோயிற் சிலைகளையும் மாமல்ல புரத்திலுள்ள பஞ்சபாண்டவர் சிலைகளையும் ஒப்பிட்டு நோக்கும் அளவில் சரிநிகர் கலையழகை தன்னகத்தே கொண்டு பாண்டியர்களின் கலைக் கருவூலமாக இன்றளவும் தன் அடையாளத்தை பறையாற்றி உலகம் வியக்க உன்னத படைப்பாய் விளக்குகின்றது கழுகுமலை வெட்டுவான் கோயில்.

நான்முகன், நரசிங்கப் பெருமாள், உமையம்மையுடன் உறையும் உமாசகித சுமாசன மூர்த்தி,


Isbn Number: 978-93-91115-71-5

மிருதங்க தட்சிணாமூர்த்தி, வியாக்கியான தட்சினாமூர்த்தி, திருமால், இரிஷபாகரணமூர்த்தி, ஈசானமூர்த்தி, ஸ்கந்தமூர்த்தி, சூரியமூர்த்தி, சந்திரமூர்த்தி, பவமூர்த்தி, உருத்திரமூர்த்தி, திசைத்தேவியர், சுவர்ச்சலை, உரோகினி, உஷை, சுவாகதேவி, ஊர்வசி, மேனகை, சுரசுந்தரி, அரம்பை, திலோத்தமை, சுமுகீ, காமினி, காமவர்த்தினி, நந்திச்சிற்பங்கள், யானைமுகச் சிற்பங்கள், கீர்த்திமுகச் சிற்பங்கள், ஆண், பெண் யாளிச்சிற்பங்கள், பூதகணச் சிற்பங்கள், சிவலிங்க வரைக்கோட்டுச் சிற்பங்கள், மகரவாசிகைத் தோரணங்கள், நெத்திச்சுட்டித் தொங்கல் சிற்பங்கள், வெட்டுவான் கோயிலைச் செதுக்குவித்த சிற்பிகளின் சிலைகள் என்று எண்ணற்ற சிற்பங்களை தன்னகத்தே அடக்கி தமிழனின் தனிப்பெருமையை உலகறியச் செய்யும் உயிரோவியமாகத் திகழ்கிறது கழுகுமலை வெட்டுவான் கோயில்.

**வெட்டுவான் கோயிலும் தளவாய்புரச்செப்பேடும்**

கி.பி 911 ஆம் ஆண்டில், பாண்டியன் பராந்தக வீரநாராயணனால் (கி.பி866-911) வெளியிடப்பட்ட தளவாய்புரச் செப்பேடு வெட்டுவான் கோயில் பற்றிய செய்தியினை விளம்புகின்றது.பாண்டிய மன்னர்கள் அந்தணர்க்கு நிலங்களைத் தானமாக வழங்குவது பிரம்மதேயம் எனப்படும்.


Isbn Number: 978-93-91115-71-5

**புனல் புவனி புத்தேள் மாருதம் கனல் இருசுடர் எஜமானன்**
**ஆகிய திறல் அஷ்டமூர்த்தி அமரர்க்கும் அறிவறியோன்**
**வேகவெள்விடையூர்தி விஷமலோசனன் மகிழ்ந்துறையும்**
**வாழியவான் திருவிருப்பூர்**

திருவிருப்பு என்ற சாசனச் சொல், கோயிலையும் அதன் அமைவிடப்பகுதியையும் குறிக்கும். செப்பேட்டு வரிகளில் உள்ள வெள்விடையூர்தி விஷமலோசனன் என்ற பெயர் வெட்டுவான் கோயிலைச் சுட்டுவதாக உள்ளது. வெட்டுவான் கோயில் விமானத்து வேதிகைகளில் நான்கு மூலைகளிலும் படுத்த நிலையில் கம்பீரமாகக் காட்சியளிக்கும் நான்கு பெரிய நந்திச் சிற்பங்களே, செப்பேட்டில் வேகவெள்விடையூர்தி எனக் குறிக்கப்பட்டுள்ளது. மேலும் வெட்டுவான் கோயில் விமானத்தின் மையக்கவிகை மாடத்தின் நான்கு பக்கங்களிலும், பக்கத்திற்கு இரண்டாக எட்டு மூர்த்திகளின் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன.இதனைச் செப்பேடு, “புனல் புவனி புத்தேள் மாருதம் கனல் இருசுடர் எஜமானன் ஆகிய திறல் அஷ்டமூர்த்தி” என்று குறிப்பிடுகின்றது.தளவாய்புரம் செப்பேட்டுத் தொடரை நோக்குமிடத்து வெள்விடையூர்தி விஷமலோசனன்

 Isbn Number: 978-93-91115-71-5

என்பது இன்றைய வெட்டுவான் கோயில் தான் என்பதை நிறுவமுடிகிறது.

**வெட்டுவான் கோயிலும் கதைப்பொதிவும்.**

கழுகு மலையிலுள்ள சமணர்புடைப்புச் சிற்பங்களையும் வெட்டுவான் கோயிலையும் தொடர்புபடுத்தி, கர்ணபரம்பரைக் கதையொன்று கழுகுமலை வட்டார மக்களின் நாட்டுப்புறக்கதையாக கதைக்கப்படுகிறது. சிற்பியொருவன் தன் மனைவி மகனுடன் இன்புற்று வாழ்ந்து வந்தான். தன் குலம் தழைக்க பிறந்த ஒரே ஆண்மகன் என்பதால் சிற்பி தன் மகனுக்கு அதிக செல்லம் கொடுத்து வளர்த்தமையால் காளைப்பருவம் எய்திய மகன் கட்டின்றி ஊர்சுற்றித் திரிந்தான். தன் மகனைத் தன்னைப்போல் சிற்பக்கலை வல்லவனாக்க வேண்டும் என்ற கனவினை மகன் சிதைத்தமையால் இருவரும் முரண்பட்டனர். வீட்டில் இருக்கப்பிடிக்காத மகன் வெளியேறினான்.மகனைப் பிரிந்த கவலை தந்தையை வாட்டியது. "நீ என்ன சிற்பம் செதுக்குகிறாய். உன்னைவிட ஒரு இளைஞன் மலையின் அடிவாரத்தில் எவ்வளவு அழகாக சிற்பம் வடிக்கிறான் எனத் தெரியுமா?" என்ற ஊராரின் பழிச்சொல் அவனை மேலும் காயப்படுத்தியது. இத்தகு சூழ்நிலையில் தந்தை சிற்பி ஒருநாள் வெற்றிலை, பாக்குத் தின்பதற்காக உளியடிப்பதை நிறுத்தினான். அச்சமயம் மலையின்

 Isbn Number: 978-93-91115-71-5

கீழ்ப்பகுதியில் உளிச்சத்தம் கேட்க சினமிகுந்த தந்தை உளியின் ஒலி கேட்கும் திசை நோக்கி தன் உளியை எறிந்தான். எறிந்த உளி குறி தவறாமல் இளஞ்சிற்பியின் கழுத்தை வெட்டி தலையைத் தனியே துண்டித்தது. பரிச்சயப்பட்ட அலறல் ஒலி கேட்க தந்தைக்கு திக் என்றானது. வேகமாக அவ்விடம் சென்று கண்டபோது மாண்டுகிடப்பது தன் மகன் என்பதை அறிந்தான். மாண்டு கிடக்கும் தன் மகனையும் அவன் வடித்த மலைக்க வைக்கும் அழகுமிக்க கற்றளியையும் கண்டு திகைப்படைந்தான் தந்தை. இச்செயலை எண்ணி எண்ணி காலமெல்லாம் பெருந்துயருற்றான் தந்தை என்று கர்ணப்பரம்பரைக் கதை மொழிகின்றது.

**முடிவுரை**

தமிழனின் அறிவுப்புலத்தினையும் ஆட்சி அதிகாரத்தைரயும் சமய அடுக்குப் பதிவுகளையும் தொழில் திறமையையும் பறைசாற்றுவதாக கழுகுமலை வெட்டுவான் கோயில் அமைந்துள்ளது. தமிழனின் வாழ்வில் செல்வம் நீக்கமற நிறைந்ததையும், கலைநுட்பம் செழித்திருந்தமையையும் வெட்டுவான் கோயில் புடமிட்டுக்காட்டுகின்றது. வரலாற்றினைச் சுமந்து முன்னோர்க்கும் நமக்கிடையே உள்ள ஊடகமாய் கலைமொழியினை இன்றும் உரையாடிக் கொண்டு

 Isbn Number: 978-93-91115-71-5

இருக்கின்றோம். கழுகுமலையின் கவின்மிகு கலை உரையாடலைக் காண விரைகுவோம்.

**பார்வை நூல்கள்**


[1] செ.மா.கணபதி. *கழுகுமலை வெட்டுவான் கோவில்.* சங்கத் தமிழ்ப் பதிப்பகம், திருநெல்வேலி, 2016.

[2] The Times of India சமயம் - 05-12-2019- தலைகீழாகக் கட்டப்பட்ட கோயில், தமிழர்களின் வியக்க வைக்கும் கட்டிடக்கலையை உணர்த்தும் கழுகுமலை வெட்டுவான் கோயில்.

[3] தினமணி. கழுகுமலை வெட்டுவான் கோயில். 03.05.2015.

[4] தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தகவல் பலகை.

[5] விகடன். கோயிலில் உறைந்திருக்கும் தந்தை – மகன் பாசம் !. 24.11.2018.

[6] POTHU NALAM. கழுகுமலை வெட்டுவான் கோயில் வரலாறு!

[7] ஆன்மீகம். கழுகுமலை வெட்டுவான் கோவில். 15.04.2020.

[8] மணிமேகலை, ந.மு.வேங்கடசாமி நாட்டார், ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1994.

[9] அபிதான சிந்தாமணி, ஆ.சிங்காரவேலு முதலியார், ஆசிய கல்வி சேவை, சென்னை, 2022.

# Sri Ammapatti Karuppannasamy Kovil

**Dr. D. Maheswari**, Editor, IJTLLS, Virudhunagar, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-4187-0120**
**DOI: 10.5281/zenodo.7387297**

## Abstract

*Ammapatti village is in the circle of Palani in Dindigul District, Tamil Nadu, India. Ammapatti Karuppannasamy Temple is majestically on the banks of the Palar Dam Lake. The people of this place have various accounts of the origin and worship of this fiery deity. Ammapatti Karuppannasamy appears on the standing stature with a large turban (Urumal) on his head, ash and round vermillion on his forehead, menacing eyes, twisted mustache and Long Sickle (Veecharival) in one hand, a Katha (Maze) in the other hand, and a girdle around his waist that reaches below the knees. Ammapatti Karuppannasamy is the village guardian deity. He is known as Karuppannasamy or Karuppasamy or Karuppan. He is also called by many names and usually appears as a guardian deity. A 1900 AD statue of Karuppannasamy is displayed in the museum of Virudhunagar which was found at Thiruchuzhi in Virudhunagar district. Karuppasamy worship is widespread in the villages of Tamil Nadu. Religious scholars refer to Karuppasamy worship as folk deity worship. Ammapatti Karuppannasamy is the most famous guardian deity who protects the water bodies such as ponds, lakes, rivers, wells, etc. Ammapattiyan guards the entire place around the temple sitting on the banks of the Palar Dam Lake. There are two deities. One*

*is Periya Karuppan and another is Chinna Karuppan. There are also Saptakannimar statues on the side of the Sanctum Sanatorium. This deity is seen altogether in the lives of Tamil people to the extent that there are no villages without Karuppasamy. Ammapatti Karuppannasamy appears as a guardian deity not only for the people of the village but also for the entire place. The people of this region have a lot of fear and devotion to Karuppannasamy as he does not leave those who commit injustices unpunished.*

**Keywords:** Ammapatti, Karuppannasamy Temple, Periammapatti, Palani.

## References

[1] Kaaval Deivam Karuppannasamy https://www.vikatan.com/spiritual/temples/14221--2 *Sakthivikatan*, 2012. Accessed on 28 November 2022.

[2] Thavathiru Swami Omkarananda. *Arulmigu Karuppasamy Oor Nadamadum Deivam.* Omkara Ashramam. Accessed on 28 November 2022.

[3] Nagendran, K. Dr. "*Ammapattiyan Theivamum Parasuramarin Thinmamum*" Tamil Ilakkiathil Samugathin Chiththarippugal, International conference, ANJA College, Sivakasi, 2018.

[4] Palani Bus stand, Palani, Tamil Nadu 624601 - Sri Ammapattiyan Karuppanasamy Kovil, CF29+J66, Perumalputhur, Periyammapatti, Neikarapatti, Tamil

Nadu 624615 https://tinyurl.com/yc39h2z7 *Google Maps*. Accessed on 28 November 2022.

[5] Vinoth Kumar, M. "A Translation of Two Tamil Folk Songs of the Deity Karuppannasami". Pandian Tamil Journal of Temple Studies, 1, vol. Volume 2, no. Issue 2, Zenodo, May 2022, pp. 34–38, doi:10.5281/zenodo.6635822. Accessed on 28 November 2022.

[6] Slaczka, Anna. (2016). 'Temple guardians and 'folk Hinduism' in Tamil South India: a bronze image of the 'black god' Karuppannasamy in the Rijksmuseum'.. Rijksmuseum Bulletin. 64. 62-82. 10.52476/trb.9797. Accessed on 28 November 2022.

[7] Harishankar R. https://hindupad.com/karuppu-sami/ *Hindupad*. Accessed on 28 November 2022.

[8] divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/ange-idi-mulankuthu-lord-karuppasamy-songs/ Accessed on 28 November 2022.

[9] https://en.wikipedia.org/wiki/Karuppu_Sami' Karuppu Sami. Accessed 28 November 2022.

**Informants**

[1] Posarigal, Vurmakkal.

 Isbn Number: 978-93-91115-71-5

# ஸ்ரீ அம்மாபட்டி கருப்பணசாமி கோவில்

**முனைவர் த.மகேஸ்வரி,** பதிப்பாசிரியர்,
தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,
விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-4187-0120**
**DOI: 10.5281/zenodo.7387297**

## ஆய்வுச்சுருக்கம்

*அம்மாபட்டி கிராமம் இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் அமைந்துள்ள திண்டுக்கல் மாவட்டத்தில் பழனி வட்டத்தில் உள்ளது. அம்மாபட்டி கருப்பண்ணசாமி கோவில் பாலாறு அணை ஏரிக்கரையில் கம்பீரமாக அமைந்துள்ளது. இந்த தெய்வத்தின் தோற்றம் மற்றும் வழிபாடு பற்றி மக்கள் பல்வேறு கருத்துக்களைக் கொண்டுள்ளனர். தலையில் பெரிய தலைப்பாகையும் (உறுமால்), நெற்றியில் சாம்பலும், வேட்டியும், அச்சுறுத்தும் கண்களும், முறுக்கு மீசையும், ஒரு கையில் நீண்ட அரிவாளும் (வீச்சரிவால்) மறு கையில் கதாவும் (பிரமை) மற்றும் இடுப்பைச் சுற்றி ஒரு கச்சையும் என அம்மாபட்டி கருப்பண்ணசாமி நின்ற கோலத்தில் பயங்கரமாகக் காட்சியளிக்கிறார். கிராம காவல் தெய்வமாக அம்மாபட்டி கருப்பண்ணசாமி உள்ளார். அவர் கருப்பண்ணசாமி, கருப்புசாமி மற்றும்*

 Isbn Number: 978-93-91115-71-5

கருப்பன் என பல பெயர்களால் அழைக்கப்படுகிறார். பொதுவாக அனைத்து மக்களாலும் காவல் தெய்வமாக வணங்கப்படுகிறார்.

விருதுநகர் அருங்காட்சியகத்தில் கி.பி 1900 ஆம் ஆண்டு விருதுநகர் மாவட்டம் திருச்சுழியில் கண்டெடுக்கப்பட்ட கருப்பண்ணசாமி சிலை வைக்கப்பட்டுள்ளது. தமிழக கிராமங்களில் கருப்பசாமி வழிபாடு பரவலாக உள்ளது. சமய அறிஞர்கள் கருப்பசாமி வழிபாட்டை நாட்டுப்புற தெய்வ வழிபாடு என்று குறிப்பிடுகின்றனர். பாலாறு அணை ஏரிக்கரையில் அமர்ந்து குளங்கள், ஏரிகள், ஆறுகள், கிணறுகள் போன்ற நீர்நிலைகளையும் மக்களையும் பாதுகாக்கும் மிகவும் புகழ்பெற்ற காவல் தெய்வமாக அம்மாபட்டியான் காட்சியளிக்கிறார். இக்கோவிலில் இரண்டு தெய்வங்கள் உள்ளன. ஒருவர் பெரியகருப்பன் மற்றொருவர் சின்ன கருப்பன். சன்னதி ஓரத்தில் சப்தகன்னிமார் சிலைகளும் உள்ளன. கருப்பசாமி இல்லாத ஊர்களே இல்லை என்றே கூறலாம். அம்மாபட்டி கருப்பண்ணசாமி அவ்வூர் மக்களுக்கு மட்டுமின்றி அனைத்து மக்களுக்கும் காவல் தெய்வமாகக் காட்சியளிக்கிறார். அநியாயம் செய்பவர்களைத் தண்டிக்கும் கருப்பண்ணசுவாமி மீது இப்பகுதி மக்கள் மிகுந்த அச்சமும் பக்தியும் கொண்டுள்ளனர்.

**முக்கிய வார்த்தைகள்:** அம்மாபட்டி, கருப்பண்ண சாமி கோவில், பெரியம்மாபட்டி, பழனி.

**முன்னுரை**

அம்மாபட்டி கிராமம் இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் அமைந்துள்ள திண்டுக்கல் மாவட்டத்தில் பழனி வட்டத்தில் உள்ளது. அம்மாபட்டி கருப்பண்ணசாமி கோவில் பாலாறு அணை ஏரிக்கரையில் கம்பீரமாக அமைந்துள்ளது. கருப்பசாமி பல கோவில்களில், அமர்ந்த கோலம், நின்ற கோலம் குதிரை மீது ஏற்றப்பட்ட கோலம் என பல்வேறு நிலைகளில் காட்சி தருகிறார். தலைப்பாகை, கம்பீரமான உருவம், மிரட்டும் கண்கள், முறுக்கு மீசை, இடையில் கச்சை, கையில் அரிவாளுடன் கோயில் காட்சி தருகிறார். அவர் கையில் கதாயுதமும் காணலாம். அம்மாபட்டி கருப்பண்ண சாமி நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். சின்ன கருப்பண்ண சாமியும் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். சன்னதி ஓரத்தில் சப்தகன்னிமார் சிலைகளும் உள்ளன. கிராம காவல் தெய்வமாக அம்மாபட்டி கருப்பண்ணசாமி உள்ளார். இந்த தெய்வத்தின் தோற்றம் மற்றும் வழிபாடு பற்றி மக்கள் பல்வேறு கருத்துக்களைக் கொண்டுள்ளனர். அதனை ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

 Isbn Number: 978-93-91115-71-5

### புராணங்களின்படி கருப்பசாமி சாமி

புராணங்களின்படி, கருப்பசாமி சாமி ஐயப்பனின் காவல் தெய்வமாக நிற்கிறார். சிறுவனாக இருந்த அய்யப்பன் மகிரிஷியைக் கொல்லப் புறப்பட்டபோது, சிவபெருமான் தன் அம்சமான கருப்பசாமியை அழைத்து, அய்யப்பனுடைய படையை நீ தளபதியாக வழிநடத்தி அவனை வெற்றிபெற உதவு என்று கட்டளையிட்டார். அதன்படி கருப்பசாமி அய்யப்பனை வெற்றிபெற செய்தார். சபரிமலையில் பதினெட்டாம் படிக்கு அருகில் வலதுபுறம் பதினெட்டாம்படியாகக் கருப்பசாமி உள்ளார். அவருக்கு முந்திரிக்கொட்டையும், கற்பூர வழிபாடும் விசேஷம் என்கிறார்கள். ஐயப்பனைத் தரிசிக்க வருபவர்கள் கன்னிமூல கணபதியைக் கும்பிட்டுவிட்டு, கருப்பசாமியிடம் அனுமதி பெற்று 18 படிகள் ஏறுகின்றனர்.

### கருப்பசாமி பூசை

காவல் தெய்வமான கருப்பசாமி பூசைக்கு தூய்மையான நபர்களை மட்டுமே அனுமதிக்க வேண்டும். பூசையில் அமர்ந்த பின் தீபம் ஏற்ற வேண்டும். கருப்பசாமியிடம் நாள், நட்சத்திரம், திதி, யோகம், பெயர், கோத்திரம் ஆகியவற்றை கூறி, எந்த நோக்கத்திற்காகப் பூசை செய்கிறோம் என்று நினைத்து பூசையைத் தொடங்க வேண்டும். முதலில் சத்குருவை வணங்குவது

 Isbn Number: 978-93-91115-71-5

அவசியம். கருப்பசாமியை மலர்களால் வழிபடலாம். '**ஓம் நமோ பகவதே ஸ்ரீமுக கருப்பசாமியே நமஹ**' என்று சொல்லி வழிபடலாம்.

**சைவ சமயம்**

பொதுவாக, கருப்பசாமி சிவபெருமானின் அம்சம். சிவபெருமானின் அம்சமான கருப்பசாமியைச் சம்ஹார ஆகாரங்களுடன் (மது, இறைச்சி) வழிபடக்கூடாது என்பது விதி. எனவே, கருப்பசாமிக்குச் சர்க்கரைப் பொங்கல், அவல், வேர்க்கடலை, மா, வாழைப்பழம், பலா, கொய்யா, இளநீர் ஆகியவற்றைப் படையலாக வழங்கலாம்.

**அம்மாபட்டி கருப்பண்ண சாமி**

அம்மாபட்டி கருப்பண்ண சாமி பொதுவாகப் காவல் தெய்வமாகக் காட்சித் தருகின்றார். கிபி 1900 காலத்திய கருப்பண்ண சாமி சிலை திருநெல்வேலி அரசு அருங்காட்சியகத்தின் சிற்பப் பூங்காவில் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது. அச்சிலை விருதுநகர் மாவட்டத்திலுள்ள திருச்சுழியிலிருந்து கண்டெடுக்கப்பட்டதாக அருங் காட்சியக் குறிப்பு உள்ளது. கருப்பசாமி வழிபாடு தமிழ்நாட்டுக் கிராமங்களில் பரவலாகக் காணப்படுகின்றது. கருப்பசாமி வழிபாட்டைச் சிறு தெய்வ வழிபாடு என்று சமய ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

 **Isbn Number: 978-93-91115-71-5**

**பழனி பேருந்து நிலையம் முதல் அம்மாபட்டி கருப்பண்ண சாமி கோவில் செல்லும் வழி**

பழனி பேருந்து நிலையம், பழனி, தமிழ்நாடு - 624601- பாலசமுத்திரம் சாலை/எம்டி171க்கு செல்லும் வழியில் தொடரவும்.

கொடைக்கானல் காட் ரோடு வந்தவுடன்

1. வடக்கு நோக்கி செல்லவும் (2 நிமிடம் (260 மீ) கடந்து செல்லுங்கள்
2. (210மீ) இடதுவழி நோக்கி அம்மா உணவகத்தில் வலதுபுறம் திரும்பவும் (பாலசமுத்திரம் சாலை/வழி MD171 கொடைக்கானல் காட் சாலை) பின்பு, SH108, கொலுமம் ரோடு மற்றும் சண்முகம்பாறை ரோட்டில் இருந்து ஓட்டுங்கள், பெரியம்மாபட்டி வரும்
3. (25 நிமிடம் (12.0 கிமீ)) பாலசமுத்திரம் சாலை/வழி செல்லும் வழியில் வலதுபுறம் திரும்பவும் (MD171 கொடைக்கானல் காட் சாலை)
4. பழனி வேல் ரவுண்டானாவில் இடதுபுறமாக காந்திக்கு திரும்பவும். (ரோடு/மடத்துக்குளம்-பழனி ரோடு) பின்பு, மகாலிங்கம் ஸ்டோர்ஸ் வழியாகச் செல்லவும் (இடதுபுறம்)
5. Mi சர்வீஸ் சென்டரில் (PLN) வலதுபுறம் திரும்பி


Isbn Number: 978-93-91115-71-5

பழனிஅலங்கியம்-தாராபுரம் சாலையில் செல்லவும். பின்பு, சோம செட்டியார் மாளிகையைக் கடந்து செல்லுங்கள் (வலதுபுறம்)


6. அகிலிகா யோகா மூலிகை நிறுவனத்தில் இடதுபுறம் திரும்பவும். (SH108) ஸ்ரீ பாலாஜி வர்த்தகர்களைக் கடந்து செல்லுங்கள் (இடதுபுறம்)
7. பின்பு, NH 83 இல் தொடரவும் (இடதுபுறம்)
8. NH 83 இல் நேராக தொடரவும், அம்மன் ஆட்டோ எலக்ட்ரிக்கல் மற்றும் ஸ்பேர்ஸ் வழியாக செல்லவும் (இடதுபுறம் 650மீ)
9. வண்டி வாய்க்கால் பேருந்து நிறுத்தத்தில் சிறிது இடதுபுறம் கொல்லம் சாலை அலுவலகத்தை கடந்து செல்லுங்கள். வலது)
10. நெய்காரப்பட்டி பெருமாள்புதூர் சாலையில் இடதுபுறம் திரும்பவும் சண்முகம்பாறை சாலையில் கார்த்திக் இணையம் மற்றும் ஜெராக்ஸ் (வலதுபுறம்)

    பின்பு, உங்கள் இலக்கை நோக்கி ஓட்டுங்கள்
11. (7 நிமிடம் (1.7 கிமீ)) இடதுபுறம் திரும்பவும்
12. வலதுபுறம் திரும்பவும்

 **Isbn Number: 978-93-91115-71-5**

13. ஸ்ரீ அம்மாபட்டியான் கருப்பணசாமிக்கு சற்று வலப்புறம் கோவில் இருக்கும்.

**ஸ்ரீ அம்மாபட்டியன் கருப்பணசாமி கோவில்**
**CF29+J66, பெருமாள்புதூர், பெரியம்மாபட்டி,**
**நெய்காரப்பட்டி, தமிழ்நாடு - 624615.**




**படம் 1. அம்மாபட்டி கருப்பண்ணசாமி கோவில் கூகுள் செயற்கைக்கோள் காட்சி**

**அம்மாபட்டி கருப்பண்ண சாமி வழிபாட்டின் பலன்கள்**

அம்மாபட்டி கருப்பசாமிக்குப் பொய்கள் பிடிக்காது. அவர் தர்மத்திற்காக மட்டுமே நிற்கிறார். தன் பக்தர்களுக்குச் சோதனை என்று வந்தால் காற்றை விட வேகமாக வந்து பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பவர். கருப்பசாமி தன்னை வழிபடுபவர்களைத் தீமைகள்,

சாபம், மாந்திரீகம், போட்டி, பொறாமை ஆகியவற்றிலிருந்து காக்கிறார். அம்மாபட்டி கருப்பசாமி நல்ல ஆரோக்கியத்தையும் செல்வத்தையும் தம் பக்தர்களுக்கு வழங்குகிறார். தர்மத்தையும் நியாயத்தையும் வழங்கும் கடவுளாக அம்மாபட்டி கருப்பண்ண சாமி அருள் பாவிக்கிறார் என்பது மெய்.

**கருப்புசாமிக்குப் பிற பெயர்கள்**

108 கருப்புசாமிகள் உள்ளதாகவும், 1008 கருப்புசாமிகள் உள்ளதாகவும் நாட்டார் தெய்வங்களை வழிபடும் மக்களிடையே நம்பிக்கை இருந்திருக்கிறது. 108 கருப்புசாமிக்கும் மூத்தவர் கொல்லிமலையில் குடிகொண்டிருக்கும் பெரியசாமியே என்ற நம்பிக்கை மக்களிடையே உள்ளது. வைணவ சமயத்தின் பெருமால் போன்று சிறுதெய்வ வழிபாட்டில் கருப்பசாமி கொண்டாடப்படுகிறார்.

- சங்கிலி கறுப்பன்
- காங்கேயம் சுண்டுவிரல் கருப்பசாமி
- ஆலடி கருப்பசாமி
- சிறுவனூர் (பெரியகருப்பு, சின்னக்கருப்பு)
- மார்நாடு கருப்பசாமி (சின்னப்பேராலி, விருதுநகர்)
- முப்புலி கருப்பர்
- கருப்பனார் சாமி
- குல கருப்பனார்

 Isbn Number: 978-93-91115-71-5

- கருப்பனார்
- பதினெட்டாம்படியன் (மதுரை அழகர் கோயில், மதுரை)
- சின்ன கருப்பசாமி
- மலையாளம் சுவாமி
- பெரிய கருப்பசாமி
- மளுவேந்தி கருப்பணசாமி
- மீனமலை கருப்பசாமி
- முன்னோடை கருப்பசாமி
- நொண்டி கருப்பசாமி
- ஒண்டி கருப்பசாமி
- கொம்படி கருப்பண்ணசாமி (வாடிப்பட்டி கருப்பசாமி, மதுரை)
- கோட்டை வாசல் கருப்பசாமி
- அச்சன்கோவில் கருப்பசாமி
- மடை கருப்பசாமி
- ஆகாச கருப்பு
- தலத்துக்கருப்பசாமி (மேலநம்பிபுரம், விளாத்திகுளம், தூத்துக்குடி)
- பெரிய ஆலங்குளம் சந்தனக்கருப்பசாமி
- வில்வமரத்து கருப்பராயம் சுவாமி (நம்பியூர், ஈரோடு)
- பொந்துபுளி கருப்பசாமி, மதுரை மாவட்டம்
- வண்ண கருப்பசாமி, விருப்பாச்சி

- சோனைகருப்பசாமி மதுரை மாவட்டம்
- கோட்டைமலை கருப்பசாமி புளியங்குடி, தென்காசி மாவட்டம்
- கிளிக்கூண்டு கருப்பசாமி வானரமுட்டி, தூத்துக்குடி மாவட்டம்
- அருள்மிகு விநாயகபுரம் கருப்பசாமி சித்தர்பீடம், கடலூர்
- ஆவியூர் மார்நாட்டு கருப்பசாமி
- ஆவியூர் நொன்டிகருப்பசாமி முத்துகருப்பசாமி
- ஆவியூர் ரெட்டகருப்பசாமி
- மாங்குளம் மார்நாடு கருப்பசாமி

**(https://tinyurl.com/ye7sc6c7)**

இவ்வாறு பல பெயர்களைக் கொண்ட பல கருப்பசாமி தெய்வங்கள் காணப்படுகின்றன.

**அம்மாபட்டி கருப்பண்ண சாமியின் உருவம்**

திண்டுக்கல் மாவட்டத்தில் பழனி அம்மாப்பட்டி கிராமம் கண்மாய் கரையில் அமர்ந்து இருக்கிற அம்மாப்பட்டி கருப்பண்ணசாமி தெய்வத்தின் தோற்றத்தையும், வழிபாட்டையும் பலவாறு கூறுகின்றனர் இவ்வூர் மக்கள். அம்மாபட்டி கருப்பண்ண சாமி நின்ற கோலத்தில் தலையில் பெரிய தலைப்பாகை (உருமால்), நெற்றியில் திருமண், மிரட்டும் விழிகள், முறுக்கிய மீசை ஒரு கையில் வீச்சரிவாள், மறு கையில்

கதை, சங்கு முழங்காலுக்குக் கீழே வருமளவு இடுப்பில் கச்சை ஆகியவற்றோடு காட்சித் தருகிறார்.



**படம் 2. கோயிலில் மூலவர் அம்மாபட்டி கருப்பண்ணசாமி**

**வழிபாடு**

வழிபாடு என்பது ஒரு தெய்வத்தை நோக்கிய பக்தியின் செயலாகக் கருதப்படுகிறது. இந்து மதத்தில்

வழிபாடு என்பது ஆன்மீக மற்றும் பொருள் முன்னேற்றத்திற்கு உதவுவதற்கு இறை சக்திகளை வேண்டி வழிபடுவதாகும். வழிபாட்டில் நடுகல் வழிபாடே காலப்போக்கில் குலதெய்வ வழிபாடாக மாறியுள்ளது. 'குலம்' என்பது ஒரு குறிப்பிட்ட மூதாதையரின் மரபில் தோன்றியதன் வாயிலாக ஒருவருக்கொருவர் உறவு கொண்டுள்ள குழுஅமைப்பு ஆகும். இரத்த உறவுடைய பங்காளிகள் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுவர். தன் குலத்தின் முன்னோர்களில் சிறந்து விளங்கியவர்களையும் குல மக்களுக்காக உயிர் தியாகம் செய்தவர்களையும் தெய்வமாகப் பாவித்து வணங்கி வழிப்படுவதாகும். இவ்வழிபாடு ஒவ்வொரு குலத்திற்கும் மாறுபடும். ( https://tinyurl.com/3rd3bwty )

குலதெய்வ வழிபாடாக அம்மாபட்டி கருப்பண்ண சாமியை அனைத்துச் சாதி மக்களும் வழிபடுகின்றனர். பிள்ளைமார், நாயக்கர், மறவர், நாடார், கவுண்டர், கள்ளர், பண்டாரம், பள்ளர் மற்றும் பறையர் மக்களுக்குக் குலதெய்வமாகவும் அம்மாபட்டி கருப்பண்ண சாமி அருள்புரிகின்றார். மக்கள் ஆடிமாதம் அவரவர் சாதி முறைப்படி வழிபாடு செய்து மகிழ்கின்றனர்.

**நேர்த்திக்கடன்**

இறைவனிடம் ஏதோ ஒரு காரண காரியத்திற்காக உள்ளார்ந்த அன்போடு நேர்த்திக்கடனை வைப்பர்.

அச்செயல் நிறைவேறவும் அதை செலுத்திவிடுவர். அவ்வகையில் அம்மாபட்டியில் ஆடு, கோழி, சாராயம், சுருட்டு போன்றவற்றை ஆத்திமரத்தானுக்குப் படைத்து வழிபடுகின்றனர்.



**படம் 3. கோவில் பலிபீடத்தின் முன் தோற்றம்**



**படம் 4. நேர்த்திக் கடன் அரிவாள், திரிசூலம், குதிரைகள்**

 **Isbn Number: 978-93-91115-71-5**

அம்மாப்பட்டி கருப்பண்ணசாமி தெய்வத்திற்கு அரிவாள், திரிசூலம், மணி, குதிரைகள் உருவம் போன்ற பொருட்களை நேர்த்திக் கடனுக்காகச் செலுத்தி வருகின்றனர். அம்மாபட்டி பெரிய கருப்பருக்கு மட்டும் சக்கரைப் பொங்கல், தேங்காய், பழம் வைத்து படையல் இட்டு வழிபடுகின்றனர்.

**ஆத்திமரத்தான் - பேய்விரட்டுதல்**

ஆத்திமரத்தான் சிறிய கருப்பன் ஆவார். இத்தெய்வத்தின் முன்பு, பேய் பிடித்தவர்கள் ஆடுகின்றனர். பூசாரி ஆடுபவர்களை மண்டியிட்டு அமரச் செய்து "நீய்யார்" என்று கேட்கின்றார். பேய் ஆடுபவர்கள் கூறவில்லை என்றால் ஆத்திமரத்தின் குச்சியை வைத்து அவர்களின் முதுகில் அடிக்கின்றார். பின்பு பேய் தன் பெயரையும், மாண்ட செய்தியையும் கூறுகின்றது. ஆத்திமரத்தான் சிலையில் இருந்து அருவாள் எடுத்து அதில் பேயிடம் சத்தியம் வாங்கப்படுகின்றது. "அம்மாபட்டியான் சத்தியமாக, ஆத்திமரத்தான் சத்தியமாக, இந்த பெண் இந்த பெண்ணின் உடலில் இருந்து போய் விடுகிறேன்" என்று சத்தியம் வாங்கியபின் அந்த கோயிலில் உள்ள பழைமையான இலுப்ப மரத்தில் பெண் அல்லது ஆணின் மடியில் முடிச்சு போட்டு மரத்தில் அறையப்பட்டு பின்பு

 Isbn Number: 978-93-91115-71-5

முடியை அறுத்து விடப்படுகின்றது. இந்த செயல் அங்கு சிறப்பாக இருக்கின்றது.



**படம் 4. ஆத்தி மரத்தடியில் சின்ன கருப்பசாமி**

**சப்த கன்னிமார்**

அம்மாபட்டி கருப்பண்ண சாமி கோயில் சன்னதி ஓரத்தில் சப்தகன்னிமார் சிலைகளும் உள்ளன. பிராம்மி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி மற்றும் சாமுண்டீஸ்வரி ஆகியோர் இந்து சமயத்தில் சப்தகன்னியர் அல்லது சப்தமாதர் என்று அழைக்கப்படுபவர்கள். ஐந்தொழில்கள் புரிந்து வரும் உலகை இயக்கும் சிவசக்தி எடுத்த திருமேனிகளே சப்த கன்னியர்கள். குலதெய்வம் அறியாதவர்கள் சப்த கன்னியர்களைக் குலதெய்வமாக வழிபடுகின்றனர். சப்த

 Isbn Number: 978-93-91115-71-5

கன்னியர்களை வழிபட்டால் சிறந்த ஆரோக்கியமான வாழ்வைப் பெறலாம்.

**பிராமி:** நான்முகன் பிரம்மன் அம்சம். இத்தெய்வத்தை வணங்கினால் கல்வியில் சிறந்து விளங்கலாம்.

**மகேஸ்வரி:** மகேசனின் அம்சம். மகேஸ்வரியை வழிபட கோபங்கள் நீங்கி அமைதியான வாழ்வு அமையும்.

**கவுமாரி:** முருகனின் அம்சம். இவரை வழிபடுவதன் மூலம் குழந்தை இல்லாதவர்களுக்கு முருகனின் அழகோடு குழந்தை செல்வம் கிடைக்கும்.

**வராகி:** விசுணுவின் அம்சம். பன்றி இன வராகியை குறிப்பிடும் போது வாழ்வில் சிக்கல்கள், தடைகள், தீராதப் பகைகள் விலகும்.

**வைஷ்ணவி:** வைஷ்ணவியை வணங்குவதால் வளமான வாழ்க்கை கிடைக்கும். திருமணம் ஆகாத ஆண்கள் வழிபட்டால் நல்ல வாழ்க்கை துணைவி சிறந்த மனைவியாகக் கிடைப்பாள் என்பது ஐதீகம்.

**இந்திராணி:** இந்திராணியை வழிபட்டால் கல்யாணம் ஆகாத பெண்கள் மிகச்சிறந்த கணவனைப் பெறமுடியும்.

**சாமுண்டி:** ஈசனின் நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றிய பத்திரகாளி கோரமான முகத்தை மாற்றி சாமுண்டியாகக் காட்சித் தருகிறார். இத்தேவியை வழிபடுவதன் மூலம் எதிரிகளின் தொல்லை நீங்கி செல்வம், சுகங்கள் கிடைக்கும். இவர்களே சப்த கன்னியர்கள் ஆவர்.

 Isbn Number: 978-93-91115-71-5



**படம் 5. சப்தகன்னிமார்**

**நாகப்பாம்பு புற்று**

இந்து மதத்தில் எல்லா உயிர்களையும் தெய்வீகத் தன்மையுடன் வணங்குவது நம்பிக்கை. இறைவனின் வாகனமாக எல்லா விலங்கினங்களையும் கருதி, இறைவனுக்கு உண்டான அனைத்து மரியாதைகளையும் வழங்கி வழிபடுகின்றனர். அவ்வகையில் “நாகப்பாம்பு” அனைவராலும் மிகுந்த பயபக்தியுடன் வணங்கப்படுகிறது. அம்மாபட்டி கருப்பண்ண சாமி கோயில் நாகப்புற்றின் முன் குங்குமம், மஞ்சள், தேங்காய், பழங்கள், பூக்கள், பால், முட்டை போன்றவற்றை வைத்து பூசை செய்கிறார்கள். நாகப்புற்றிற்குப் பால் ஊற்றி, பூசையை முறைப்படி செய்து வழிபடுவதால் நாக தோஷம் நீங்கும் என்றும், திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும் என்றும், குழந்தைப்பேறு இல்லாதவர்களுக்கு

 Isbn Number: 978-93-91115-71-5

ஆரோக்கியமான குழந்தைப் பிறக்கும் என்றும் சாத்திரம் கூறுகிறது.

அம்மாபட்டி கருப்பண்ண சாமி கோயில் நாகப்புற்றிற்கு அருகில் புனிதக் கிணறும் ஒன்று உள்ளது. புனிதக் கிணற்று நீரைக் கேவிலுக்கு வரும் பக்தர்கள் பயன்படுத்துகின்றனர்.





**படம் 9 & 10. நாகப்பாம்பு புற்று மற்றும் புனித கிணறு**

 Isbn Number: 978-93-91115-71-5

**நம்பிக்கை**

'கருப்பு' என்னும் சொல் பேயை உணர்த்தும். கருப்பு என்னும் சொல்லுக்கு வறுமை, பஞ்சம் என்னும் பொருள்களும் உண்டு. 'காத்து கருப்பு அண்டாது'' எனக் கூறி இருளில் செல்வோருக்குக் குதிக்காலில் கரியைக் குழைத்துப் பூசி அனுப்பும் பழக்கம் இருந்து வந்தது. இதனால் இத்தெய்வத்தை வணங்குபவர்கள் தம் குழந்தைகளுக்குக் கருப்புசாமி, கருப்பாயி என்னும் பெயர்களைச் சூட்டுவது வழக்கமாக இருந்துள்ளது. எந்த நோய் இருந்தாலும் ஆத்திமரத்தானின் சிலையில் உள்ள மை, ஆத்திமரத்து இலையில் வைத்து நோய்வாய் பட்டவனுக்குத் தரப்படுகின்றது. இந்த மை நோய் குணப்படுத்தும் என்று மக்கள் நம்புகின்றனர்.

**காவல் தெய்வம்**

தமிழ்நாட்டுக் காவல் தெய்வங்களிலேயே முக்கிய தெய்வம் கருப்பண்ண சாமி. ஆண் தெய்வங்கள் பெரும்பாலும் ஊரைக்காக்கும் தெய்வங்களாகவும், கண்மாய், குளம், ஏரி, ஆறு, கிணறு, போன்ற நீர் நிலைகளைப் பாதுகாக்கும் தெய்வங்களாகவும், கண்மாய் கரையில் மடையைக் காக்கும் தெய்வங்களாகவும் திகழ்கின்றன. அவ்வகையில் புகழ்பெற்று விளங்கும் தெய்வம் அம்மாபட்டியான். இத்தெய்வத்தைப் பெரியகருப்பன் என்றும் அழைக்கின்றனர். கருப்புசாமி


**Isbn Number: 978-93-91115-71-5**

இல்லாத கிராமங்களே இல்லை. இத்தெய்வம் தமிழரின் வாழ்வில் ஒன்றிக் காணப்படுகிறது. ஊர் மக்களுக்கு மட்டுமல்லாது ஊரிலுள்ள விளைநிலங்களுக்கும் காவல் தெய்வமாகக் கருப்பண்ண சாமி காட்சித் தருகிறார். விளைநிலத்தின் ஒரு பகுதியில் மரத்தடியில் நடப்பட்ட கல்லைக் கருப்பண்ணராகக் கருதி வருடத்திற்கு ஒருமுறை சேவலைப் பலியிட்டு வழிபடுவது வழக்கமாக இருந்துள்ளது. அநியாயங்கள் செய்பவர்களைத் தண்டிக்காமல் விடமாட்டார் என்பதால் இந்த பகுதி மக்களுக்கு கருப்பண்ணசாமி மீது பயமும் பக்தியும் அதிகம்.

**தொன்மக் கதைகள்**

நெய்க்காரப்பட்டியில் கண்மாயின் மடையைத் திறந்து விட்டு, ஊரைக்காவல் செய்வதையே குலத் தொழிலாகச் செய்து வந்த கணவன் மனைவியருக்குப் (பெயர் கூறப்படவில்லை) பெரிய கருப்பன் (அம்மாபட்டியான்) என்ற குழந்தைப் பிறந்தது. அவர்கள் குலத் தொழிலை அவனுக்கும் கற்றுக் கொடுத்தனர். பெரிய கருப்பனின் தந்தை தன் மகனிடம் மகனே! நான் என்ன சொன்னாலும் செய்வாயா? என்று கேட்டுள்ளார். அதற்கு பெரிய கருப்பன் செய்கிறேன் என்று கூறியுள்ளார். தந்தையும் சொல்வதைச் செய்தாய் என்றால் நீ கேட்டதைத் தருகிறேன் என்று வாக்குத் தந்துள்ளார்.

 Isbn Number: 978-93-91115-71-5

பெரிய கருப்பனும் ஒத்துக் கொள்ள, தந்தை உன் அம்மாவின் தலையை வெட்டி வா! என்று கூறுகிறார். பெரிய கருப்பனும் அம்மாவின் தலையை வெட்டிக் கொண்டு வந்து தந்தையிடம் கொடுக்கின்றார். மகனிடம் தந்தை உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் என்கிறார். பெரிய கருப்பன் தாயின் தலை ஒட்ட வேண்டும் என்று கேட்கிறார். தாயின் தலை ஒட்டிக் கொள்கின்றது. அம்மாவை வெட்டிய ஊர் என்பதன் காரணமாக 'அம்மாவெட்டி' என்று ஊர் அழைக்கப்பட்டு, பின்பு மருவி அம்மாபட்டி என்று இன்று அழைக்கப்படுகின்றது. பெரியகருப்பன் பின்பு கண்மாக்கரையில் அடைங்கினார் (சமாதி அடைந்தார்) என்று மக்கள் கூறுகின்றனர். இந்நிகழ்விற்குப்பின் இந்தத் தெய்வத்திற்கு அம்மாபட்டி கருப்பண்ணசாமி என்று பெயர் வந்துள்ளது.

நாயக்க மன்னர்களின் ஆட்சி காலத்தில் மடைதிறந்து விடும் பொழுது நெய்க்காரப்பட்டி மக்களுக்கும் அம்மாபட்டி மக்களும் சண்டை ஏற்படுகிறது. அம்மாபட்டியில் வாழும் ஒருவனை நெய்க்காரப் பட்டிகாரன் கொன்றுவிடுகின்றான். ஊர் மக்கள் அனைவரும் அம்மாபட்டிகாரனை நெய்க்காரப் பட்டிக்காரன் கொன்று விட்டான் என்று வட்டாரம் முழுவதும் பேசுகின்றனர். நெய்க்காரப்பட்டி மக்களுக்கு அச்சம் ஏற்படுகிறது. அதனால் அம்மாபட்டிகாரனை

 Isbn Number: 978-93-91115-71-5

வெட்டி புதைத்த கண்மாய் கரையில் வழிபாடு செய்துள்ளனர் என்றும் சிலர் கூறுகின்றனர். மன்னர் ஆட்சியில் இருந்து யாரும் மடையைக் காக்க ஊரைக் காவல் காக்க ஆள்போடவில்லை. இந்த அம்மாபட்டி கருப்பசாமியே ஊரைக் காப்பதாகவும் மடையைக் காப்பதாகவும் நம்பிக்கை கொண்டு இருந்தனர்.

அந்தச் சமயத்தில் மலையாளத்தில் இருந்து மந்திரவாதி சின்ன கருப்பண்ணசாமியையும் ஏழு கன்னிமார் தெய்வங்களையும் பச்ச மண் குடத்தில் எடுத்து வந்துள்ளார். வரும் வழியில் மந்திரவாதிக்குத் தண்ணீர் தவித்துவிடுகின்றது. அதற்காக கம்மாகரையில் வைத்துவிட்டு நீர் குடித்துவிட்டு பார்க்கும் போது குடம் காணவில்லை. இதை யார் எடுத்திருப்பார் என்று மந்திரம் போட்டுப் பார்க்கும் போது அம்மாபட்டியான் தெய்வம் மந்திரவாதியிடம் வந்து, நான்தான் இந்த மண் குடத்தை வெங்கல மடையில் ஒழித்து வைத்துள்ளேன்; என் பெயர் அம்மாபட்டியான்; நான் ஒரு சைவன்; எனக்குக் காவலுக்கு இவ்விரு தெய்வங்களையும் இங்கு விட்டுட்டு போ என்று கூறியதாகவும்; தெய்வம் வந்து கேட்பதால் மந்திரவாதி விட்டுவிட்டுச் சென்றதாகவும் செய்தி காணப்படுகிறது. சின்னகருப்பண்ண சாமி, நீ தெய்வமாக இருக்கும் போது நான் எதற்கு இங்கு இருக்க வேண்டும் என்று கேட்டதற்கு நான் சைவனா இருந்து கொள்கிறேன்.

 Isbn Number: 978-93-91115-71-5

நீ என் மக்கள் கொடுக்கின்ற ஆடு, கோழி, சாராயம், சுருட்டு எல்லாம் நீயே வச்சுக்கோ; ஆத்திமரத்தடியில் இருந்துக்கோ என்று கூறியதாகவும் அன்றில் இருந்து இந்த சாமிக்கு ஆத்தி மரத்தடியான் என்று பெயர் வைத்து வழிபட்டு வருவதாகவும் மக்கள் கூறப்படுகின்றனர்.

தொன்மைக் கதையுடன் கிராம மனிதனுடைய அல்லது கிராம தெய்வங்களுடைய கதையைத் தொடர்புபடுத்திக் கூறுவதும் உயர்த்திக் கூறுவதும் காலங்காலமாக உள்ள மரபாகும்.

**முடிவுரை**

ஸ்ரீ அம்மாபட்டி கருப்பணசாமி கோவில் திண்டுக்கல் மாவட்டத்தில் பழனி வட்டத்தில் உள்ள அம்மாபட்டி கருப்பண்ணசாமி, பாலாறு அணை ஏரிக்கரையில் அமர்ந்து குளங்கள், ஏரிகள், ஆறுகள், கிணறுகள் போன்ற நீர்நிலைகளையும் மக்களையும் பாதுகாக்கும் காவல் தெய்வமாகக் காட்சியளிக்கிறார். ஆத்திமரத்தடியில் காட்சி கொடுக்கும் சின்ன கருப்பனான ஆத்திமரத்தானுக்கு ஆடு, கோழி, கிடாய் போன்றவற்றை காவு கொடுக்கின்றனர். மேலும், ஆத்திமரத்தானின் பேய் விரட்டுதல் செய்தியையும் விநாயகர், சப்தகன்னிமார், நாகப்புற்று தெய்வங்கள் பற்றியும் பல அரிய செய்திகளை இவ்வாய்வு கட்டுரையின் வழி அறியலாம்.

 **Isbn Number: 978-93-91115-71-5**

## குறிப்புகள்


[1] காவல் தெய்வம் கருப்பண்ணசாமி https://www.vikatan.com/spiritual/temples/14221--2 Sakthivikatan, 2012. அணுகப்பட்டது 28 நவம்பர் 2022.

[2] தவத்திரு சுவாமி ஓம்காரானந்தா. அருள்மிகு கருப்பசாமி - ஒரு நடமாடும் தெய்வம். ஓம்கார ஆசிரமம். 28 நவம்பர் 2022 அன்று அணுகப்பட்டது.

[3] நாகேந்திரன், கி. முனைவர் "அம்மாபட்டியன் தெய்வமும் பரசுராமரின் தோன்மமும்." *தமிழ் இலக்கியத்தில் சமூகத்தின் சித்தரிப்புகள்,* அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி, 2018.

[4] பழனி பேருந்து நிலையம், பழனி, தமிழ்நாடு 624601 - ஸ்ரீ அம்மாபட்டியன் கருப்பணசாமி கோவில், CF29+J66, பெருமாள்புதூர், பெரியம்மாபட்டி, நெய்காரப்பட்டி, தமிழ்நாடு 624615 https://tinyurl.com/yc39h2z7 Google Maps. 28 நவம்பர் 2022 அன்று அணுகப்பட்டது.

[5] வினோத் குமார், எம். "தெய்வம் கருப்பண்ணசாமியின் இரண்டு தமிழ் நாட்டுப்புறப் பாடல்களின் மொழிபெயர்ப்பு". பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ், தொகுதி 2, வெளியீடு 2, மே 2022, பக். 34–38, doi:10.5281/zenodo.6635822. 28 நவம்பர் 2022 அன்று அணுகப்பட்டது.

[6] ஸ்லாஸ்கா, அண்ணா. (2016) தமிழ் தென்னிந்தியாவில் ‘கோயில் பாதுகாவலர்கள் மற்றும் ‘நாட்டுப்புற இந்து மதம்’: ரிஜ்க்ஸ் மியூசியத்தில் உள்ள ‘கருப்புக் கடவுள்’ கருப்பண்ணசாமியின் வெண்கலப் படம். ரிஜ்க்ஸ்மியூசியம் புல்லட்டின். 64. 62-82. 10.52476/trb.9797. 28 நவம்பர் 2022 அன்று அணுகப்பட்டது.

[7] ஹரிசங்கர் ஆர். https://hindupad.com/karuppu-sami/ *Hindupad*. 28 நவம்பர் 2022 அன்று அணுகப்பட்டது.

[8] divineinfoguru.com/slokas-mantras/devotional-songs-lyrics/ange-idi-mulankuthu-lord-karuppasamy-songs/ 28 நவம்பர் 2022 அன்று அணுகப்பட்டது.

[9] https://en.wikipedia.org/wiki/Karuppu_Sami’ கருப்புசாமி, 28 நவம்பர் 2022 அன்று அணுகப்பட்டது.

**தகவளாலர்கள்**

[1] பூசாரிகள், ஊர் மக்கள்.

 Isbn Number: 978-93-91115-71-5

# பின் இணைப்பு

## படங்கள்



படம் 1. அம்மாபட்டி கருப்பண்ணசாமி கோவிலில் இருந்து பழனி மலை



படம் 2. தெய்வீக மரத்துடன் அம்மாபட்டி கருப்பண்ணசாமி கோவில் மேற்குக்காட்சி

 Isbn Number: 978-93-91115-71-5



**படம் 3. பெரியம்மாபட்டியில் இருந்து அம்மாபட்டி கருப்பண்ணசாமி கோவில் செல்லும் பாதை**



**படம் 4. பெரியம்மாபட்டியில் இருந்து அம்மாபட்டி கருப்பண்ணசாமி கோவில் செல்லும் பாதை (மழைக்காலத்தில்)**


Isbn Number: 978-93-91115-71-5



**படம் 5. அம்மாபட்டி கருப்பண்ணசாமி கோவில் முகப்பு காட்சி**



**படம் 6. அம்மாபட்டி கருப்பண்ணசாமி கோவிலில் திருவிழாவில் பக்தர்கள்**

 **Isbn Number: 978-93-91115-71-5**



படம் 7. கோவில் திருவிழாவில் குளிர்பானம் அருந்தி மகிழ்ந்த குழந்தைகள்



படம் 8. அம்மாபட்டி கருப்பண்ணசாமி கோவிலின் உள் முகப்பு காட்சி


Isbn Number: 978-93-91115-71-5



படம் 9. அம்மாபட்டி கருப்பண்ணசாமி கோவில் உள் பலிபீடம்



படம் 10. அம்மாபட்டி கருப்பண்ணசாமி கோவிலின் மேல் தோற்றம்

 Isbn Number: 978-93-91115-71-5



**படம் 11. அம்மாபட்டி கருப்பண்ணசாமி கோவில் சன்னதியின் மேல் தோற்றம்**



**படம் 12. ஏரிக்கரையிலிருந்து அம்மாபட்டி கருப்பண்ணசாமி கோவிலின் மேல் தோற்றம்**

 Isbn Number: 978-93-91115-71-5

## பெருமைமிகு கருப்பண்ணசாமி பாடல்

## அங்கே இடி முழங்குது – கருப்பசாமி

அங்கே இடி முழங்குது – கருப்பசாமி
தங்க கலசம் மின்னுது
அங்கே இடி முழங்குது – மகாலிங்கம்
மாளிக பாறை கருப்பசாமி தங்க கலசம் மின்னுது
வெள்ள நல்ல குதிர மேலே
வீச்சருவா கையிலேந்தி வேட்டையாட
வாரார் அங்கே கோட்ட கருப்பசாமி
மலையாளம் மலையழகாம் மாமரங்கள் உண்டுபண்ணி
சிலையாக நிக்கிறாரே தெய்வமான கருப்பசாமி (அங்கே இடி)
கருத்த முத்து எண்ணெ போல வடிவழகன் கருப்பசாமி
செவத்த துண்டு தலையில் கட்டி தேடி வேட்டை யாடி வாரார்.
அங்கே இடி முழங்குது – கருப்பசாமி
தங்க கலசம் மின்னுது
18ம் படி கருப்பசாமி ஆடிவாரான் கருப்பசாமி முனியம்மா
தண்டை கையிலேந்தி ஆடி வாரான் கருப்பன்
அருவா மேலே நின்னு ஆடி வாரான் கருப்பன்

 Isbn Number: 978-93-91115-71-5

கோன நல்ல கொண்ட போட்டு

கோத்த முத்து பல்லழகன் – கொடிய

வேட்டை யாடியல்லோ வாரார் அங்கே கருப்பசாமி

(அங்கே இடி x 2)

18ம்படி கருப்பசாமியே போற்றி (வினோத் குமார்)

 Isbn Number: 978-93-91115-71-5